# விடுதலைப்புலிகள்

குரல் – 115 | பங்குனி – சித்திரை – 2004 | அன்பளிப்பு – 12/=



03 தாக்குதல் நிலையும்...
14 தேர்தல் அரங்கில்...
08 களப் படப்பிடிப்பும்...
06 புதிய மொந்தையில்...
05 விடுதலைப் போராட்டத்திற்கு...


# துரோகச் செயற்பாடொன்று தோற்கடிக்கப்பட்டுவிட்டது

**மட்டு - அம்பாறை மண்ணில் துரோகி கருணா நடாத்திய கோமாளிக் கூத்துக்கு முடிவு காணப்பட்டுவிட்டது. தனது குற்றச்செயல்களை மறைத்து - தன்னைக் காப்பதற்காக கருணா செய்த பச்சைத் துரோகம் தலைவர் பிரபாகரனின் நிதானமான நடவடிக்கைகளாலும் - விவேகமான செயற்பாடுகளினாலும் இரத்தக்களறி இல்லாது முறியடிக்கப்பட்டுவிட்டது. ஈழத்தமிழரின் இதயங்களில் பேரிடியையும் - எதிரியின் கூடாரங்களில் கொண்டாட்டங்களையும் ஏற்படுத்தியிருந்த அந்தத் துரோகச்செயல் அரங்கேறிய வேகத்திலேயே ஒடுக்கப்பட்டுவிட்டது.**

மட்டக்களப்பு - அம்பாறை நிருவாக மாவட்டத்தின் முன்னாள் தளபதியாகப் பணிபுரிந்த கருணா; புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து - தனது அதிகாரத்திற்குள் இருந்த போராளிகளுடன் தனியாகச் செயற்படப்போவதாக பகிரங்கமாக அறிவித்தபோது ஈழத் தமிழர்கள் அதிர்ந்துபோய்விட்டனர்.

இதைத்தொடர்ந்துவந்த சில நாட்களில் இந்தக் கோடரிக்காம்பு வெளியிட்ட செய்திகளும் - கருத்துக்களும் தமிழ்த்தேசியத்தின் எதிரிகளை குதூகலிக்கச் செய்தன.

நீண்டபெரும் போராலும் - அரசியற் சதிகளாலும் பேரினவாதிகளால் சாதிக்க முடியாதுபோன தமிழர் தாயகப் பிரிப்பையும் - தமிழர் தேசியச் சிதைப்பையும் இலக்குவைத்து இந்தக் கோடரிக்காம்பு பரப்புரை செய்தபோது பேரினவாதிகள் அகமகிழ்ந்து - ஆரவாரம் செய்தனர். சிங்கள ஊடகங்கள் வெற்றிக் களிப்பில் மிதந்தன.

புலிகள் இயக்கத்தின் கதை முடிந்தது என்று தங்களுக்குள் கை குலுக்கி மகிழ்ந்தன. "ஒரு முடிவின் ஆரம்பம்" என்று நாடக பாணியில் தலைப்பிட்டு ஓர் ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதி மகிழ்ந்தது. புலிகளின் உட்பிரச்சினையில் தலையிட விரும்பவில்லை என்று பாசாங்கு செய்தபடி துரோகி கருணாவின் கரத்தை எப்படிப் பலப்படுத்தலாம் என்று சிங்கள ஆளும் வர்க்கமும் - அதன் படைத்தளபதிகளும் மந்திராலோசனை செய்தனர்.

ஆயினும், இந்தத் துரோகத்தை விரைவாக முறியடிக்க தலைவர் பிரபாகரன் அவர்கள் நிதானமாகச் செயற்பட்டார்.

32வருட இயக்க வரலாற்றில் இவ்வாறு பல நம்பிக்கைத் துரோகிகளை, தலைவர் அவர்கள், வெற்றிகரமாக எதிர்கொண்டு வந்துள்ளார். இயக்கத்திற்குப் பாதிப்பில்லாமல் போராட்ட வளர்ச்சிக்குப் பங்கமில்லாமல் இத்தகைய நம்பிக்கைத் துரோகிகளைக் களைந்து விடுதலைப் போராட்டத்தை வழிநடாத்தி வருகின்றார்.

கருணாவின் கட்டுப்பாட்டில் இருந்த பல்லாயிரம் போராளிகளுக்கும் - இந்தத் துரோகச் செயலுக்கும் எந்தவித

(தொடர்ச்சி 02ம் பக்கம்)



படைநடத்திப் பெற்ற வெற்றிப் பெரு உயர்வில் மடைதிறந்து வந்த அமைதிப்பயிர் விளைவின் அறுவடைக்காய்....

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தமிழர் ஆணையும் சிங்களவர் ஆசையும்

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் என்றும் மிளிர்ந்துகொண்டிருக்கப்போகும் ஒரு கலங்கரை விளக்காக 2004ஆம் ஆண்டின் ஏப்ரல் 02ஆம் நாள் திகழப்போகின்றது.

தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய அரசியல் ஆணையின் அதிகாரபூர்வ நாளாக அன்றையதினம் அமைந்துள்ளது.

தமிழரின் ஏக அரசியல் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்து உலகிற்குப் பறைசாற்றிய நாளும் அதுதான்.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் தமிழர் கூட்டமைப்புப் பெற்றுள்ள அமோக வெற்றி புலிகளின் அரசியற் பலத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

சிறிலங்கா நாடாளுமன்றின் மூன்றாவது பெரிய அரசியற் கட்சியாக, 22 ஆசனங்களுடன் தமிழர் கூட்டமைப்பு இடம் பெற்றுள்ளது.

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட போர் வரலாற்றில் புலிகள் இயக்கம் தமது இராணுவ பலத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது. இப்போது, அரசியற் தளத்தில் புலிகளின் தலைமைத்துவமும் - அதன் ஆற்றலும் நிருபிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம், அரசியல் - இராணுவ ரீதியில் ஈழத்தமிழரின் ஏக தலைமையாக புலிகள் இயக்கமே உள்ளது. நிருபிக்கப்பட்டுவிட்ட இந்த அரசியல் - இராணுவ யதார்த்தத்தை சிங்களதேசமும் - சர்வதேச சமூகமும் இனிமேல் மனதில் நிறுத்திக் கொண்டு தமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் என நம்பலாம்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காணும் உறுதிப்பாட்டோடு புலிகள் இயக்கம் உள்ளது. இந்த நோக்கத்துடன், முன்னைய அரசோடு ஒரு தொடர் பேச்சுவார்த்தையை புலிகள் இயக்கம் சுமூகமாக நடாத்தி வந்தது.

சிங்கள அரசுடன் எட்டப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டையும் புலிகள் இயக்கம் சரியாகக் கடைப்பிடித்து வருகின்றது.

எனினும், தமிழ் மக்களைப்போல, சிங்களவரின் வாக்குத்தீர்ப்பு சமாதானத்திற்கான தெளிவான மக்கள் ஆணையாக இருக்கவில்லை. குழப்பகரமான தலைமையையும் ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

ரணிலின் கட்சியினர், தமிழர் பகுதியின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு ஒரு உறுதியான சமாதானத்திற்கு ஆணை கேட்டிருந்தனர். சிங்கள வாக்காளர் ரணிலை ஆட்சிப் பீடமேற்ற மறுத்துவிட்டனர்.

ஆனால், சந்திரிகா - ஜே.வி.பி கூட்டணியினர் சிங்கள மேலாதிக்கத்துடன் கூடிய ஒரு சமாதானப் பேச்சிற்கான கொள்கையை முன்வைத்தனர். சிங்கள வாக்காளர் அதற்கே ஆணை வழங்கியுள்ளனர்.

தென் இலங்கையில் தமிழர்கள் கணிசமாக வாழ்ந்துவரும் தேர்தல் மாவட்டங்களில் ரணிலின் கட்சியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர். தனிச்சிங்கள தேர்தல் மாவட்டங்களில் தோற்றுள்ளனர்.

ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு தமிழரின் ஆதரவும், சிங்களவரின் எதிர்ப்பும் உள்ளதை இந்தத் தேர்தல்முடிவு காட்டுகின்றது.

நீண்ட போரும் - அது கொடுத்த அரசியல் விழிப்புணர்வும் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற பொதுவான அபிப்பிராயத்தை இந்தத் தேர்தல் முடிவு பொய்யாக்கியுள்ளது.

சிங்கள மக்களது இந்த இனவாத மனநிலை சர்வதேச சமூகத்தை ஆச்சரியப்படுத்தியிருக்கும். ஆனால், தமிழ்மக்களைப் பொறுத்தவகையில் இது பரீச்சயமான தொன்றாகும்.

சிங்களத்தில் ஆட்சியமைத்துள்ள புதிய கூட்டணியின் வெற்றி தமிழினத்திற்கு ஒரு சவாலாகவே விளங்கப்போகின்றது. புதிய கூட்டணி அரசு விரும்பும் சமாதானப் பேச்சுக்களின் திட்டங்கள் புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டிற்கு முரணாகவே உள்ளது.

புலிகள் இயக்கத்தின் சமாதான அரசியல் வெளிப்படையானதாகவும் - சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் உள்ளது. தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையும் புலிகளின் அரசியற்பலத்தை அதிகப்படுத்தியுள்ளது.

சிங்களவரின் இனவாத ஆசைகள் இராணுவ ரீதியாகவும் சரி - அரசியல் ரீதியாகவும் சரி நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலமாக உள்ளது. ●

---

*(1ம் பக்கத் தொடர்ச்சி...)*

சம்பந்தமுமில்லை என்பது தலைவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. எனவே, கருணாவையும் அவரது குற்றவாளிச் சகாக்களையும் தனிமைப்படுத்தி - போராளிகளைப் பாதுகாக்க தலைவர் நடவடிக்கைகள் எடுத்தார்.

ஆரம்ப நடவடிக்கையாக கருணாவை இயக்கத்திலிருந்து விலக்கியதுடன் - அவரை ஒரு துரோகி என பிரகடனப்படுத்திய புலிகளின் தலைமைச் செயலகம் கருணாவின் துரோகச் செயலை பேராசைகொண்ட ஒரு தனி மனிதனின் சுயநலச் செயற்பாடு என வகைப்படுத்தியது. கருணாவிலிருந்து விலகியிருக்குமாறு மட்டு - அம்பாறை போராளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

எமது தலைமைப்பீடத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் கருணாவின் தனிப்பட்ட குற்றச்செயல்கள் பற்றிய விபரங்கள் போராளிகளிடம் சென்றடைந்தால் தனது உண்மைச் சொரூபம் அம்பலமாகிவிடும் என்றுணர்ந்த துரோகி கருணா; அந்தத் தகவல்கள் போராளிகளைச் சென்றடையவிடாது தடுக்க முயன்றார்.

கருணாவின் துரோகம் பற்றிய உண்மைத் தகவல்களைத் தாங்கிச் சென்ற தமிழ்ப் பத்திரிகைகள் பறிக்கப்பட்டு தீயிடப்பட்டன. பத்திரிகை விநியோகங்கள் தடைசெய்யப்பட்டன. அத்துடன் போராளிகளின் வானொலிப் பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் தகவல் இருட்டில் வைக்கப்பட்டனர். தலைவர் பிரபாகரனின் உருவப் படங்கள் எமது முகாம்களில் இருந்து அகற்றப்பட்டன. எமது போராளிகளின் தினப் பணியாகிய உறுதிப் பிரமாணம் செய்வதிலிருந்து போராளிகள் தடுக்கப்பட்டனர். தலைவர் பிரபாகரனை இழிவுபடுத்தும் வகையில் கருணா குழுவினர் போராளிகளுக்கு கருத்துக்கள் கூறினர்.

என்ன நடைபெறுகின்றது என்று அறியாமலும் - குழப்பத்திலும் இருந்த போராளிகள் தலைவர் பிரபாகரனை அவமரியாதை செய்து கருணா குழுவினர் கருத்துக்கள் கூறியபோது அந்தத் துரோகிகளின் உண்மைச் சொரூபத்தை அறியத்தொடங்கினர்.

இதேசமயம் கருணாவின் அடாவடித்தனங்கள் மட்டு - அம்பாறை மண்ணில் அதிகரிக்கத்தொடங்கின. எமது ஆதரவாளர்கள் சிலரும் - போராளிகள் சிலரும் கருணா கும்பலால் கொல்லப்பட்டபோது நடவடிக்கையின் கடுமையான கட்டத்திற்குச் செல்ல தலைவர் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

துரோகி கருணாவை எமது தாயகத்திலிருந்து களைவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மட்டு - அம்பாறை விசேட தளபதி ரமேசின் தலைமையில் புலிகளின் படை, நடவடிக்கையில் இறங்கியது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடந்த போராளிகள் கருணா கும்பலின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுத்து - புலிகளின் மீட்பு அணிகளிடம் வந்துசேர்ந்தனர். இதையடுத்து துரோகி கருணாவும், அவருடன் இணைந்து கூட்டுக்குற்றம் புரிந்த ஒரு சில சகாக்களும் ஒன்றுசேர்ந்து தமிழர் தாயக மண்ணை விட்டோடி எதிரியிடம் சென்றடைந்தனர்.

புலிகள் இயக்கத்திற்குள் கருணா ஏற்படுத்திய சலசலப்பை ஒரு பாரிய பிளவுபோல வர்ணித்த சிங்கள - மற்றும் இந்திய ஊடகங்கள் கருணா கும்பல் தமிழ்மண்ணை விட்டு விரட்டப்பட்ட வேகமும் - விதமும் கண்டு வாயடைத்துப் போயுள்ளன.

கருணாவின் துரோகத்தால் எழுந்த சலசலப்பை ஒரு சாட்டாக வைத்து தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆப்புவைக்க ஆசைப்பட்ட பேரினவாத சக்திகளும் இப்போது ஏமாற்றம் அடைந்துள்ளன.

போர்க்களங்களில் தாம் சந்தித்த மாபெரும் இராணுவத் தோல்விகளைவிட; புலிகள் இயக்கத்தை நசுக்கும் ஒரு பெரிய வரலாற்று வாய்ப்பை இழந்துவிட்டதுபோல சிங்களதேசம் மனமுடைந்து போயுள்ளது.

புலிகள் இயக்கத்தின் எழுச்சியும் - வீழ்ச்சியும் என்றொரு நூலையே எழுத ஆசைப்பட்ட சிங்களப் பத்திரிகை உலகம்; கருணாவின் எழுச்சியும் - வீழ்ச்சியும் என்றொரு கட்டுரையுடன் முடித்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

என்றுமில்லாத அளவுக்கு தமிழர் ஒற்றுமையும் - தமிழர் தேசிய எழுச்சியும் தமிழர் தாயகத்தில் இன்று நிலவுகின்றது. தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழர் தேசியம் பலமடைந்து வருகின்றது. அரசியல் ரீதியாகவும் - இராணுவ ரீதியாகவும் தமிழர் பலம் வலுவடைந்து வருகின்றது. பிரகாசம் மிக்க ஒரு எதிர்காலத்தை நோக்கி தமிழ்மக்களைத் தலைவர் அவர்கள் வழிநடத்திச் செல்கின்றார். ●

# ஹைட்டி நேற்றுகளும் இன்றைகளும்

அத்திலாந்திக் சமுத்திரம் கரிபியன் கடலோடு உறவாடுகின்ற அந்தப் பகுதியிலே வீசிக் கொண்டிருந்த சூறாவளிக் காற்றிலே ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான கப்பலொன்று கட்டுப்பாட்டை இழந்து அலைப்புற்றுச் சென்று கொண்டிருந்தது. 1492ம் ஆண்டின் டிசம்பர் மாதத்து அந்த 5வது அல்லது 6வது தினம் விடிந்த போது 'சாந்தா மரியா' என்ற அக்கப்பலின் தளத்திலிருந்தபடி கரை ஏதாவது தெரிகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தனர். வரலாற்றுப் புகழ்பெற்ற ஆய்வுப் பயணாளரான கொலம்பஸ். கரையொன்றும் தெரிந்தது. அங்கே கரையிறங்கிய கொலம்பஸ் அதுவும் ஸ்பெயின் கரையோரத்தை ஒத்த தோற்றத்தை கொண்டிருந்ததால் 'எஸ்பானோலா'என்று பெயரிட்டு ஸ்பானிய அரசின் கொடியையும் அங்கு ஏற்றிவிட்டார்.

அங்கிருந்த ரெய்னோ இன சுதேசிய செவ்விந்தியர்கள் படுநாசம் ஒன்று கப்பலில் இருந்து இறங்கிவருகிறது என்பதை உணரவில்லை. இறங்கி வந்த கொலம்பஸையும், அவரது ஆட்களையும் பரிவோடு வரவேற்றனர். உபசரித்தனர். தம்மிடம் இருந்த கிளிகள், பருத்தி உருண்டைகள் மற்றும் பொருட்களுடன் தங்கத்தையும் பரிசளித்து மகிழ்ந்தனர் அந்த அப்பாவி மக்கள்.

"...ஐம்பது பேர்கள் இருந்தால் அவர்கள் எல்லோரையும் அடிமைப்படுத்தி நாம் விரும்புவதைச் செய்விக்கலாம்" என்று கொலம்பஸ் மதிப்பிடும் அளவுக்கு அப்பாவிகளாக அவர்கள் இருந்தனர்.

அந்த வருடத்து நத்தார் தினமன்று, கொலம்பஸின் கொடிக்கப்பலான 'சாந்தாமரியா'' அந்தத் தீவின் துறைமுகத்தினுள் மூழ்கிப்போயிற்று. அதனுடைய எஞ்சிய பகுதிகளை கொண்டு நவிடாட் என்ற அரண்செய்யப்பட்ட தளத்தை நிறுவி தன்னுடன் வந்தவர்களில் 39 பேரை அங்கு விட்டு, 1493 ஜனவரி 16ம் திகதி ஆறு ரெய்னோ அடிமைகளுடனும் கிளிகள், தாவரங்கள், தங்கம் முதலியவற்றுடன் ஸ்பெயின் பயணமானார் கொலம்பஸ்.

கொலம்பஸ் இரண்டாம் முறை அந்தத் தீவுக்கு வந்தபோது, அங்கு குடியேற்றங்களை நிறுவி அங்குள்ள மக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தீவின் வளங்களை சுரண்டுவதே அவரது நோக்கமாக இருந்தது.

17 கப்பல்கள், 1200 வீரர்கள், தீவுவாசிகளுக்கு திகில் மூட்டவென 20 குதிரைவீரர்களுடன் கொலம்பஸ் எஸ்பானோலாவுக்கு திரும்பிய போது அவர் விட்டுச் சென்றிருந்த 39பேரும் கொல்லப்பட்டிருந்தார்கள். அவர்கள் 'மாகுவான' அரசு மீது படையெடுத்தபின்னரே செவ்விந்தியர்களால் கொல்லப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் இச்சைதீர்க்கவென ஐந்து உள்ளூர் பெண்களை வைத்திருந்ததும் கசப்புக்கு காரணமாய் அமைந்ததாக இரண்டாவது பயணத்தில் கொலம்பஸுடன் வந்த, கியேர்மோ சோமா எழுதியிருக்கிறார். இதற்குப்பின்பு நவிடாட் இல் இருந்து, 40 லீக்குகள் (அண்ணளவாக 180 கி.மீ) தொலைவில் இஸபெலா என்ற புதிய நகரை நிறுவினார். இந்த நகருக்கு அருகேயுள்ள ஆற்றில்தான் பின்ஸோனன் தங்கத்தை கண்டுபிடித்திருந்தார். இஸபெல்லாவை நிர்மாணித்தபின் தன் காலாட்படை மற்றும் குதிரை வீரர்களுடன் சிபாஓ-வின் தங்கச் சுரங்கங்களை நோக்கி நடத்திச் சென்றார். அப்படி சென்ற வழிநெடுக பல அரண் செய்யப்பட்ட தளங்களை நிறுவிச் சென்றனர். இப்படி கொலம்பஸின் படை சென்றவேளை, உள்ளூர் வாசிகளான ஆயிரக்கணக்கான செவ்விந்தியர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறாக 1494 ஆண்டிலேயே கிளர்ச்சியின் விதைகள் விதைக்கப்பட்டுவிட்டன.

உள்ளூர் வாசிகளிடமிருந்து காலாண்டு வரி பெறுகின்ற; அடிமைகளை கொண்டு வேலை செய்கின்ற; திட்டங்களை கொலம்பஸ் அறிவித்தார். உள்நாட்டுப் பகுதிகளுக்கு சென்ற கொலம்பஸின் படையினர் பெண்கள் ஆண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 1500 பேரை பிடித்து வந்தனர். இவர்களில் சிறப்பான உடல்நிலை கொண்டிருந்த 500 பேரை தெரிவுசெய்த கொலம்பஸ் அவர்களை ஸ்பெயினுக்கு அனுப்பிவைத்தார். அவர்களில் 250 பேர் செல்லும் வழியிலேயே இறந்துவிட்டனர். கொலம்பஸ், அவரது சகோதரரான பாத்தலோமியூ மற்றும் அலொன்ஸோ டி ஹொஜேடி ஆகியோர் தீவின் சகல பகுதிகளிலும் படைய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ரெய்னோக்கள்மீது விதிக்கப்பட்ட வரியை செலுத்த முடியாதவர்கள் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டனர். இந்த வகையில் தீவின் மக்கள் தொகையினரில் மூன்றிலிரண்டு பங்கினர் ஒழிக்கப்பட்டதாக வரலாற்றாசிரியர் லாஸ் காஸஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

#### ஹைற்றியில் குடியேற்றம்

1502ம் ஆண்டில் நிக்கொலஸ் ஒவாண்டோ என்பவருடன் 2500 ஸ்பானியர்கள் ஹைற்றி வந்தனர். வந்ததுமே தங்க சுரங்கங்களை தேடி ஓடிய இவர்கள் மூலம் அவர்களோடு தொடர்பு பட்ட உள்ளூர் தொழிலாளர்களுக்கு ஐரோப்பிய நோய்கள் பரப்பப்பட்டன. இரு தரப்பினரும் பெரும் தொகையில் மடிந்தனர்.

1503ம் ஆண்டில் ஸராகுவா மீது படையெடுத்த ஒவாண்டோவின் வீரர்கள் ஆண்களை கம்பங்களில் கட்டிய பின் தீமூட்டிவிட்டனர். பெண்களும் குழந்தைகளும் துண்டுதுண்டாக வெட்டிக்






கொல்லப்பட்டனர். அவர்களுடைய அரசியான அனகவோனா காஸ்ரோ, டொமிங்கோ-வில் தூக்கிலிடப்பட்டார். 1504ம் ஆண்டில் ஹுவான் டி எஸ்குவிவெல் மற்றும் பொன்ஸ் டி லியோன் ஆகியோர், இதே போன்ற கொடூரமான நடவடிக்கையை ஹிகுவே யில் மேற்கொண்டார்கள். குடியேற்ற வாசிகளை உள்ளடக்கிய ஆட்சி சபையொன்றை ஒவாண்டோ அமைத்தார். தங்கம் கிடைப்பது வீழ்ச்சியடைந்ததோடு, ஸ்பானியர்கள் செழுமையான நாடுகளை தேடிச்சென்று விட்டதால் குடியேற்ற வாசிகளின் தொகையும் வீழ்ச்சியடைந்தது. 1509ம் ஆண்டில் ஒவாண்டோ ஓய்வு பெற்றதும், கொலம்பசின் மகனான டியேகோ கொலம்பஸ், எஸ்பானோலாவின் ஆளுனராக ஆனார்.

#### ரெய்னோக்களின் எதிர்ப்பும் கிளர்ச்சிகளும்.

ரெய்னோக்கள் அமைதியான மக்களாக இருந்தாலும் அவர்கள் தங்கள் மீதான ஒடுக்கு




முறைக் கெதிராக கிளர்ந்தெழுவதற்கு. கொலம்பசின் வருகைக்குப்பின், அதிக காலம் செல்லவில்லை. அவர்களது சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டது. அவர்களது பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது முதலியவற்றுடன் இந்த சக்திமிக்க அன்னியர்கள் தங்கள் நாட்டில் நிலைகொள்ளும் உத்தேசம் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு முதலியவையே ரெய்னோக்களை குடியேற்றவாசிகளுக்கு விரோதமானவர்களாக ஆக்கிவிட்ட பிரதான காரணங்களாகும். நவிடாட் தளத்தின் அழிவுக்கு காரணமான கா ஓ நாபோ -வை கொலம்பஸ் மறந்துவிடவில்லை. சமாதான ஒப்பந்தத்துக்கு வரும்படி அவரை அழைத்து வஞ்சகமாக அவரை சிறைசெய்தார்.

இது அதுவரையான வரலாற்றில் ஆகப்பெரியதான சுதேசிய அமெரிக்கர்களின் எழுச்சிக்கு வித்திட்டது. கா ஓ காபோவின் சகோதரர் மணிகாட்டெக்ஸ் ஸ்பானியர்களைத் தாக்கி கா ஓ நாபோவை விடுக்கும் நோக்கில், 7000 ரெய்னோக்களை திரட்டிக் கொண்டு ஸ்பானியர்களைத் தாக்கச் சென்றார்.

ஒழுங்கமைக்கப்பட்ட போர்முறைகளைப் பற்றி ரெய்னோக்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. குதிரைகளை அவர்கள் முன்பின் கண்டிருக்கவில்லை. நன்கு ஆயுதம் தரித்த 200 காலாட்படையினர் 20 குதிரைவீரர்கள், பட்டினியால் வெறியூட்டப்பட்ட 20நாய்கள், சில பீரங்கிகளுடன் வந்த ஸ்பானியர்கள், தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு ரெய்னோக்களை தோற்கடித்து போர்க்களத்தை படுகொலைக் களமாக ஆக்கிவிட்டார்கள். மணிக்காட்டெக்ஸ் கைது செய்யப்பட்டார். சகோதரர்கள் இருவரையும் ஸ்பெயினுக்கு அனுப்புவதற்காக அவர்கள் ஏற்றப்பட்ட கப்பல், ரெய்னோக்கர்களால் மூழ்கடிக்கபட, தாம் நேசித்த மண்ணிலிருந்து சிறிது தூரத்தில் அவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

கா ஓ நாபோவும் அவரது சகோதரரும் கொல்லப்பட்ட பின் எஞ்சிய ரெய்னோ தலைவர்கள் ஸ்பானியர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பாக யதார்த்தமான போக்கை கைக்கொண்டு தங்கத்துக்கு பதிலாக பருத்தியையும் மரவள்ளி ரொட்டிகளையும் வரியாக தருவதாக விருப்பம் தெரிவித்தனர். அது தங்கள் அதிகாரத்தையும் ஆட்சியையும் காக்கும் என அவர்கள் நினைத்தனர்.

எனினும், இந்த நிலைப்பாட்டில் ஒப்புதலில்லாத பலர், ஸ்பானியர்களுக்கெதிரான கிளர்ச்சியை மேற்கொள்ளும் படி மாகுவாவின் ஆட்சியாளரான குவாறியோநெக்ஸ் ஐத் தூண்டினர். அந்த வேளையிலே ஸ்பானியர்கள் முகாமில், ரோல்டான், கொலம்பஸ் ஆகியோரின் ஆதரவாளர்களிடையே தோன்றியிருந்த பிளவு காரணமாக அவர்களை இலகுவாக தோற்கடிக்க முடியும் என்று கருதினார்கள். வேகா றியல் அருகே குவாறியோ நெக்ஸ் தன் படைகளை குவித்தார். இதை அறிந்து கொலம்பசின் சகோரரான பாத்தலோமியூ 400 வீரர்களை சேகரித்து குவாறியோ நெக்ஸ்ஸை எதிர்கொள்ள வந்தார். ரெய்னோக்களின் கலாச்சாரம் இரவில் போரிடுவதை அனுமதிக்காது. குவாறியோ நெக்ஸின் படைகள் மீது இரவு நேரத்திடீர் தாக்குதல் ஒன்றை ஸ்பானியர்கள் மேற்கொண்டனர். குவாறியோ நெக்ஸும் பதினான்கு வேறு தலைவர்களும் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் குவாறியோ நெக்ஸ் விடுதலைசெய்யப்பட்டு ஒருவருடம் வரை ஸ்பானியரோடு முரண்படாமல் வாழ்ந்துவிட்டு பின்னர் அதுவும் செய்யமுடியாமல் வடக்கே தப்பிச் சென்றார். இவரை விட்டால் சுதேசிகள் இவரின் தலைமையில் அணிதிரளக்கூடும் என்று எண்ணி பார்த்தலோமியூ அங்கு அவரை விரட்டிச் சென்று கைதுசெய்தார்.

குவாறியோநெக்ஸின் தோல்வியுடன் சுதேசிகளின் எதிர்ப்பியக்கம் முடிந்துவிடவில்லை. கிழக்கு மாகாணமான ஹிகுவேயின் கஸாட்சியை பேணும் விதத்தில் ஹுவான் எஸ்குவிவெல்லின் கொடூரத்துக்கு எதிராக கொட்டுபனாமா நடத்திய போராட்டம் அதற்கு நல்ல சான்றாகும். பிரான்ஸிஸ்கன் ஆச்சிரமம் ஒன்றில் வளர்ந்த என்றிகுவில்லோ, தன்மனைவியான மென்ஸியாவை கிறிஸ்தவ முறைப்படி மணந்து கொண்டு எஸ்பானோலா வின் தெற்குக் கரையோரம் இருந்த தன் கிராமத்து தலைவனாக ஆனான். அனால், பலமுறை அவனை சிறுமைப்படுத்திய குடியேற்றவாசி - எசமானனாகிய வலென்சுவெலா இறுதியின் அவரது மனைவியையும் வல்லுறவுக்குட்படுத்தினார். ஸ்பானிய அரசின் நீதி முறைகளில் தனக்கு நீதி கிட்டாததை தொடர்ந்து பஹோறூக்கு மலைகளுக்குத் தப்பிச் சென்ற அவர் 1519இல் இருந்து 1538 வரை முழு அளவிலான கிளர்ச்சியை நடத்தினார்.

அந்த மலைப்பாங்கான பகுதியிலே முழுமையான இந்தியபாணி வாழ்க்கை முறையை என்றிகுவில்லோவும் அவரது ஆதரவாளர்களும் கைக்கொண்டனர். பெண்கள், முதியவர்கள் குழந்தைகளைப் பாதுகாத்துக்கொண்டே தனது அணியினருக்கெதிராக அனுப்பப்பட்ட ஒவ்வொரு ஸ்பானிய படையையும் அவர் முறியடித்தார். ஒவ்வொரு வெற்றியோடும் மேலும் மேலும் ரெய்னோக்கள் அவரோடு இணைந்து கொண்டிருந்தனர். ஸ்பானியர்களிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைக் கொண்டு வலுவான ஒரு படையை அவர் அமைத்துக் கொண்டார்.

என்றிகுவில்லோவின் கிளர்ச்சியைப் பற்றி அறிந்த 1ம் சாள்ஸ் அரசர் எஸ்பானோலாவை தாம் இழந்து விடக்கூடும் எனப்பயந்து, பேச்சுவார்த்தை நடத்த கப்டன் பிரான்ஸிஸ்கோ பாறியோ - நுவேவோ - ஐ அனுப்பிவைத்தார். பஹோறூக்கு மலைப்பகுதியில் என்றிகுவில்லோவும் அவரது ஆட்களும் சுதந்திரமாக வாழ்வதை அடக்கிய சமாதான திட்டம் ஒன்றை கப்டன் பிரான்ஸிஸ்கு முன்வைத்தார். என்றிகுவில்லே அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார். அதற்கு ஒரு வருடத்துக்குப் பின் அவர் இறந்து போய்விட்டார். ஒப்பந்தம் செய்து நான்கு வருடத்துக்குள்ளாகவே, ஸ்பானியர்கள் ஒப்பந்தத்தை முறித்து விட்டதாக வரலாற்றாளரான லாஸ்காஸாஸ் எழுதியிருக்கிறார்.

- வி.அருளாளன் -

புதிய உலகின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களின் முக்கிய பின்விளைவாக எஸ்பானோலாவின் ரெய்னோக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு இருந்தது. ஐரோப்பிய நோய்களால் பெரும்பகுதியினர் மடிந்தனர். உதாரணமாக 1518ம் ஆண்டில் ஏற்பட்ட பொக்குளிப்பான் நோயால் முழு மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் அழிந்து போயினர். தங்கம் தேடும்வெறியில் நகர்ந்த ஸ்பானிய படைகள் முழுக்கிராமங்களை எரித்து அழித்திருக்கின்றனர். இந்தவகையில் எஸ்பானோலாவின் ஆதிக்குடிகள் அழிந்துபோக சனத்தொகையை அதிகரிக்கவென பஹாமாஸ்சிலிருந்து செவ்விந்தியர்களை ஸ்பானியர் 1510 - 1520 காலப்பகுதியில் இறக்குமதி செய்தனர்.

#### அமெரிக்காவின் சுதந்திர போரில் உதவிய ஹைற்றி மக்கள்.

1779ம் ஆண்டில், அதாவது ஹைற்றி சுதந்திரம் பெறுவதற்கு 24 ஆண்டுகளுக்கு முன்னரே அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட ஹைற்றி மக்களில் 800 கறுப்பு, கலப்பின வீரர்கள் அமெரிக்கா சென்று ஜோர்ஜ் வோசிங்டனின் படையோடு இணைந்து வீரத்துடன் போரிட்டிருந்தார்கள். சவானாவில் வோசிங்டனின் படை பின் வாங்கிய போது இந்த அணியினரே தீரத்துடன் பின் காப்பை வழங்கினார்கள்.

தங்களை மீள அடிமை கொள்ள நெப்போலியன் அனுப்பிய படைகளை முறியடித்தபின் 1804ம் ஆண்டில் ஹைற்றி மக்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். 1806ம் ஆண்டளவில் ஹைற்றி இராசதந்திர ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

அமெரிக்காவுக்கும் ஹைற்றிக்குமிடையே குறிப்பிடத்தக்களவு வர்த்தகம் இடம்பெற்றது. ஆனால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெபர்ஸன் ஹைற்றியின் சுதந்திரத்தை ஏற்கவில்லை. ஹைற்றியின் சுதந்திர போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ரூசைன்ற்லூவேச்சரின் இராணுத்தை நரமாமிசம் புசிப்பவர்கள் என ஜெபர்ஸன் தூற்றினார். 1805 - 1806 காலப்பகுதியில் அமெரிக்காவுக்கும் ஹைற்றிக்குமிடையேயான வர்த்தகம் தடைசெய்யப்பட்டது. எனினும் உத்தியோகபூர்வமற்ற வர்த்தகம் தொடர்ந்தது. 12 வருடங்களாக நிகழ்ந்த

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

அத்திலாந்திக் சமுத்திரம் கரிபியன் கடலோடு உறவாடுகின்ற அந்தப் பகுதியிலே வீசிக் கொண்டிருந்த சூறாவளிக் காற்றிலே ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான கப்பலொன்று கட்டுப்பாட்டை இழந்து அலைப்புற்றுச் சென்று கொண்டிருந்தது. 1492ம் ஆண்டின் டிசம்பர் மாதத்து அந்த 5வது அல்லது 6வது தினம் விடிந்த போது 'சாந்தா மரியா' என்ற அக்கப்பலின் தளத்திலிருந்தபடி கரை ஏதாவது தெரிகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தவர், வரலாற்றுப் புகழ்பெற்ற ஆய்வுப் பயணாளரான கொலம்பஸ். கரையொன்றும் தெரிந்தது. அங்கே கரையிறங்கிய கொலம்பஸ் அதுவும் ஸ்பெயின் கரையோரத்தை ஒத்த தோற்றத்தை கொண்டிருந்ததால் 'எஸ்பானோலா' என்று பெயரிட்டு ஸ்பானிய அரசின் கொடியையும் அங்கு ஏற்றிவிட்டார்.

அங்கிருந்த ரெய்னோ இன சுதேசிய செவ்விந்தியர்கள் பழநாசம் ஒன்று கப்பலில் இருந்து இறங்கிவருகிறது என்பதை உணரவில்லை. இறங்கி வந்த கொலம்பஸையும், அவரது ஆட்களையும் பரிவோடு வரவேற்றனர். உபசரித்தனர். தம்மிடம் இருந்த கிளிகள், பருத்தி உருண்டைகள் மற்றும் பொருட்களுடன் தங்கத்தையும் பரிசளித்து மகிழ்ந்தனர் அந்த அப்பாவி மக்கள்.

"...ஐம்பது பேர்கள் இருந்தால் அவர்கள் எல்லோரையும் அடிமைப்படுத்தி நாம் விரும்புவதைச் செய்விக்கலாம்" என்று கொலம்பஸ் மதிப்பிடும் அளவுக்கு அப்பாவிகளாக அவர்கள் இருந்தனர்.

அந்த வருடத்து நத்தார் தினமன்று, கொலம்பஸின் கொடிக்கப்பலான "சாந்தாமரியா" அந்தத் தீவின் துறைமுகத்தினுள் மூழ்கிப்போயிற்று. அதனுடைய எஞ்சிய பகுதிகளை கொண்டு நவிடாட் என்ற அரண்செய்யப்பட்ட தளத்தை நிறுவி தன்னுடன் வந்தவர்களில் 39 பேரை அங்கு விட்டு, 1493 ஜனவரி 16ம் திகதி ஆறு ரெய்னோ அடிமைகளுடனும் கிளிகள், தாவரங்கள், தங்கம் முதலியவற்றுடன் ஸ்பெயின் பயணமானார் கொலம்பஸ்.

கொலம்பஸ் இரண்டாம் முறை அந்தத் தீவுக்கு வந்தபோது, அங்கு குடியேற்றங்களை நிறுவி அங்குள்ள மக்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தீவின் வளங்களை சுரண்டுவதே அவரது நோக்கமாக இருந்தது.

17 கப்பல்கள், 1200 வீரர்கள், தீவுவாசிகளுக்கு திகில் மூட்டவென 20 குதிரைவீரர்களுடன் கொலம்பஸ் எஸ்பானோலாவுக்கு திரும்பிய போது அவர் விட்டுச் சென்றிருந்த 39பேரும் கொல்லப்பட்டிருந்தார்கள். அவர்கள் 'மாகுவான' அரசு மீது படையெடுத்தபின்னரே செவ்விந்தியர்களால் கொல்லப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் இச்சைதீர்க்கவென இணைத்து உள்ளூர் பெண்களை வைத்திருந்ததும் சாவுக்கு காரணமாய் அமைந்ததாக இரண்டாவது பயணத்தில் கொலம்பஸுடன் வந்த கியேர்மோ சோமா எழுதியிருக்கிறார். இதற்குப்பின்பு நவிடாட் இல் இருந்து, 40 லீக்குகள் (அண்ணளவாக 180 கி.மீ) தொலைவில் இஸபெலா என்ற புதிய நகரை நிறுவினார். இந்த நகருக்கு அருகேயுள்ள ஆற்றில்தான் பின்னொண் தங்கத்தை கண்டுபிடித்திருந்தார். இஸபெல்லாவை நிர்மாணித்தபின் தன் காலாட்படை மற்றும் குதிரை வீரர்களுடன் சிபாஓ-வின் தங்கச் சுரங்கங்களை நோக்கி நடத்திச் சென்றார். அப்படி சென்ற வழிநெடுக பல அரண் செய்யப்பட்ட தளங்களை நிறுவிச் சென்றனர். இப்படி கொலம்பஸின் படை சென்றவேளை, உள்ளூர் வாசிகளான ஆயிரக்கணக்கான செவ்விந்தியர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறாக 1494 ஆண்டிலேயே கிளர்ச்சியின் விதைகள் விதைக்கப்பட்டுவிட்டன.

உள்ளூர் வாசிகளிடமிருந்து காலாண்டு வரி பெறுகின்ற; அடிமைகளை கொண்டு வேலை செய்கின்ற; திட்டங்களை கொலம்பஸ் அறிவித்தார். உள்நாட்டுப் பகுதிகளுக்கு சென்ற கொலம்பஸின் படையினர் பெண்கள் ஆண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 1500 பேரை பிடித்து வந்தனர். இவர்களில் சிறப்பான உடல்நிலை கொண்டிருந்த 500 பேரை தெரிவுசெய்த கொலம்பஸ் அவர்களை ஸ்பெயினுக்கு அனுப்பிவைத்தார். அவர்களில் 250 பேர் செல்லும் வழியிலேயே இறந்துவிட்டனர். கொலம்பஸ், அவரது சகோதரரான பாத்தலோமியூ மற்றும் அலொன்ஸோ டி ஹெஜேடா ஆகியோர் தீவின் சகல பகுதிகளிலும் படைய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ரெய்னோக்கள்மீது விதிக்கப்பட்ட வரியை செலுத்த முடியாதவர்கள் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்டனர். இந்த வகையில் தீவின் மக்கள் தொகையினரில் மூன்றிலிரண்டு பங்கினர் ஒழித்துக்கட்டப்பட்டதாக வரலாற்றாசிரியர் காஸ் காஸஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

**ஹைற்றியில் குடியேற்றம்**

1502ம் ஆண்டில் நிக்கொலஸ் ஓவாண்டோ என்பவருடன் 2500 ஸ்பானியர்கள் ஹைற்றி வந்தனர். வந்ததுமே தங்க சுரங்கங்களை தேடி ஓடிய இவர்கள் மூலம் அவர்களோடு தொடர்புபட்ட உள்ளூர் தொழிலாளர்களுக்கு ஐரோப்பிய நோய்கள் பரப்பப்பட்டன. இரு தரப்பினரும் பெரும் தொகையில் மடிந்தனர்.

1503ம் ஆண்டில் ஸராகுவா மீது படையெடுத்த ஓவாண்டோவின் வீரர்கள் ஆண்களை கம்பங்களில் கட்டிய பின் தீமூட்டிவிட்டனர். பெண்களும் குழந்தைகளும் துண்டுதுண்டாக வெட்டிக்







# ஹைட்டி நேற்றுகளும் இன்றைகளும்

கொல்லப்பட்டனர். அவர்களுடைய அரசியான அனாகவோனா கான்ரோ. டொமிங்கோ-வில் தூக்கிலிடப்பட்டார். 1504ம் ஆண்டில் யுவான்டி எஸ்குவிவெல் மற்றும் பொன்ஸ் டி லியோன் ஆகியோர். இதே போன்ற கொடூரமான நடவடிக்கைகளை ஹிகுவே யில் மேற்கொண்டார்கள். குடியேற்ற வாசிகளை உள்ளடக்கிய ஆட்சி சபையொன்றை ஓவாண்டோ அமைத்தார். தங்கம் கிடைப்பது வீழ்ச்சியடைந்ததோடு, ஸ்பானியர்கள் செழுமையான நாடுகளை தேடிச்சென்று விட்டதால் குடியேற்ற வாசிகளின் தொகையும் வீழ்ச்சியடைந்தது. 1509ம் ஆண்டில் ஓவாண்டோ ஓய்வு பெற்றதும், கொலம்பஸின் மகனான டியேகோ கொலம்பஸ், எஸ்பானோலாவின் ஆளுனராக ஆனார்.

**ரெய்னோக்களின் எதிர்ப்பும் கிளர்ச்சிகளும்.**

ரெய்னோக்கள் அமைதியான மக்களாக இருந்தாலும் அவர்கள் தங்கள் மீதான ஒடுக்கு




முறைக் கெதிராக கிளர்ந்தெழுவதற்கு, கொலம்பஸின் வருகைக்குப்பின், அதிக காலம் செல்லவில்லை. அவர்களது சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டது. அவர்களது பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது முதலியவற்றுடன் இந்த சக்திமிக்க அன்னியர்கள் தங்கள் நாட்டில் நிலைகொள்ளும் உத்தேசம் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு முதலியவையே ரெய்னோக்களை குடியேற்றவாசிகளுக்கு விரோதமானவர்களாக ஆக்கிவிட்ட பிரதான காரணங்களாகும். நவிடாட் தளத்தின் அழிவுக்கு காரணமான கா ஓ நாபோ -வை கொலம்பஸ் மறந்துவிடவில்லை. சமாதான ஒப்பந்தத்துக்கு வரும்படி அவரை அழைத்து வஞ்சகமாக அவரை சிறைசெய்தார்.

இது அதுவரையான வரலாற்றில் ஆகப் பெரியதான சுதேசிய அமெரிக்கர்களின் எழுச்சிக்கு வித்திட்டது. கா ஓ நாபோவின் சகோதரர் மணிகாட்டெக்ஸ் ஸ்பானியர்களைத் தாக்கி கா ஓ நாபோவை விடுக்கும் நோக்கில், 7000 ரெய்னோக்களை திரட்டிக் கொண்டு ஸ்பானியர்களைத் தாக்கச் சென்றார்.

ஒழுங்கமைக்கப்பட்ட போர்முறைகளைப் பற்றி ரெய்னோக்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. குதிரைகளை அவர்கள் முன்பின் கண்டிருக்கவில்லை. நன்கு ஆயுதம் தரித்த 200 காலாட்படையினர் 20 குதிரைவீரர்கள், பட்டினியால் வெறியூட்டப்பட்ட 20நாய்கள், சில பீரங்கிகளுடன் வந்த ஸ்பானியர்கள், தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு ரெய்னோக்களை தோற்கடித்து போர்க்களத்தை படுகொலைக் களமாக ஆக்கிவிட்டார்கள். மணிகாட்டெக்ஸ் கைது செய்யப்பட்டார். சகோதரர்கள் இருவரையும் ஸ்பெயினுக்கு அனுப்பு வதற்காக அவர்கள் ஏற்றப்பட்ட கப்பல், ரெய்னோக்கர்களால் மூழ்கடிக்கப்பட, தாம் நேசித்த மண்ணிலிருந்து சிறிது தூரத்தில் அவர்கள் மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

கா ஓ நாபோவும் அவரது சகோதரரும் கொல்லப்பட்ட பின் எஞ்சிய ரெய்னோ தலைவர்கள் ஸ்பானியர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பாக யதார்த்தமான போக்கை கைக்கொண்டு தங்கத்துக்கு பதிலாக பருத்தியையும் மரவள்ளி ரொட்டிகளையும் வரியாக தருவதாக விருப்பம் தெரிவித்தனர். அது தங்கள் அதிகாரத்தையும் ஆட்சியையும் காக்கும் என அவர்கள் நினைத்தனர்.

எனினும், இந்த நிலைப்பாட்டில் ஒப்புதலில்லாத பலர், ஸ்பானியர்களுக்கெதிரான கிளர்ச்சியை மேற்கொள்ளும் படி மாகுவாவின் ஆட்சியாளரான குவாறியோநெக்ஸ் ஐத் தூண்டினர். அந்த வேளையிலே ஸ்பானியர்கள் முகாமில், ரோல்டான், கொலம்பஸ் ஆகியோரின் ஆதரவாளர்களிடையே தோன்றியிருந்த பிளவு காரணமாக அவர்களை இலகுவாக தோற்கடிக்க முடியும் என்று கருதினார்கள். வேகா ரியல் அருகே குவாறியோ நெக்ஸ் தன் படைகளை குவித்தார். இதை அறிந்து கொலம்பஸின் சகோதரரான பாத்தலோமியூ 400 வீரர்களை சேகரித்து குவாறியோ நெக்ஸ்ஸை எதிர்கொள்ள வந்தார். ரெய்னோக்களின் கலாச்சாரம் இரவில் போரிடுவதை அனுமதிக்காது. குவாறியோ நெக்ஸ்ஸின் படைகள் மீது இரவு நேரத் திடீர் தாக்குதல் ஒன்றை ஸ்பானியர்கள் மேற்கொண்டனர். குவாறியோ நெக்ஸ்சும் பதினான்கு வேறு தலைவர்களும் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் குவாறியோ நெக்ஸ் விடுதலைசெய்யப்பட்டு ஒருவருடம் வரை ஸ்பானியரோடு முரண்படாமல் வாழ்ந்துவிட்டு பின்னர் அதுவும் செய்யமுடியாமல் வடக்கே தப்பிச் சென்றார். இவரை விட்டால் சுதேசிகள் இவரின் தலைமையில் அணிதிரளக்கூடும் என்று எண்ணி பார்தலோமியூ அங்கு அவரை விரட்டிச் சென்று கைதுசெய்தார்.

குவாறியோநெக்ஸின் தோல்வியுடன் சுதேசிகளின் எதிர்ப்பியக்கம் முடிந்துவிடவில்லை. கிழக்கு மாகாணமான ஹிகுவேயின் காட்சியை பேணும் விதத்தில் யுவான் எஸ்குவிவெல்லின் கொடூரத்துக்கு எதிராக கொட்டுபனாமா நடத்திய போராட்டம் அதற்கு நல்ல சான்றாகும். பிரான்ஸிஸ்கன் ஆச்சிரமம் ஒன்றில் வளர்ந்த என்றிகுவில்லோ, தன்மனைவியான மென்சியாவை கிறிஸ்தவ முறைப்படி மணந்து கொண்டு எஸ்பானோலா வின் தென்குக் கரையோரம் இருந்த தன் கிராமத்து தலைவனாக ஆனான். அனால், பலமுறை அவனை சிறுமைப்படுத்திய குடியேற்றவாசி - எசமானனாகிய வலென்சுவேலா இறுதியில் அவரது மனைவியையும் வல்லுறவுக்குட்படுத்தினார். ஸ்பானிய அரசின் நீதி முறைகளில் தனக்கு நீதி கிடைக்காததை தொடர்ந்து பஹோறுகோ மலைகளுக்குத் தப்பிச் சென்ற அவர் 1519இல் இருந்து 1533 வரை முழு அளவிலான கிளர்ச்சியை நடத்தினார்.

அந்த மலைப்பாங்கான பகுதியிலே முழுமையான இந்தியபாணி வாழ்க்கை முறையை என்றிகுவில்லோவும் அவரது ஆதரவாளர்களும் கைக்கொண்டனர். பெண்கள், முதியவர்கள் குழந்தைகளைப் பாதுகாத்துக்கொண்டே தனது அணியினருக்கெதிராக அனுப்பப்பட்ட ஒவ்வொரு ஸ்பானிய படையையும் அவர் முறியடித்தார். ஒவ்வொரு வெற்றியோடும் மேலும் மேலும் ரெய்னோக்கள் அவரோடு இணைந்து கொண்டிருந்தனர். ஸ்பானியர்களிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைக் கொண்டு வலுவான ஒரு படையை அவர் அமைத்துக் கொண்டார்.

என்றிகுவில்லோவின் கிளர்ச்சியைப் பற்றி அறிந்த 1ம் சார்ள்ஸ் அரசர் எஸ்பானோலாவை தாம் இழந்து விடக்கூடும் எனப்பயந்து, பேச்சுவார்த்தை நடத்த கப்டன் பிரான்ஸிஸ்கோ பாறியோ - நுவேவோ - ஐ அனுப்பிவைத்தார். பஹோறுக்கு மலைப்பகுதியில் என்றிகுவில்லோவும் அவரது ஆட்களும் சுதந்திரமாக வாழ்வதை அடக்கிய சமாதான திட்டம் ஒன்றை கப்டன் பிரான்ஸிஸ்கோ முன்வைத்தார். என்றிகுவில்லோ அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார். அதற்கு ஒரு வருடத்துக்குப் பின் அவர் இறந்து போய்விட்டார். ஒப்பந்தம் செய்து நான்கு வருடத்துக்குள்ளாகவே, ஸ்பானியர்கள் ஒப்பந்தத்தை முறித்துவிட்டதாக வரலாற்றாளரான காஸ்காஸாஸ் எழுதியிருக்கிறார்.

- வி.அருளாளன் -

புதிய உலகின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களின் முக்கிய பின்விளைவாக எஸ்பானோலாவின் ரெய்னோக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு இருந்தது. ஐரோப்பிய நோய்களால் பெரும்பகுதியினர் மடிந்தனர். உதாரணமாக 1518ம் ஆண்டில் ஏற்பட்ட பொக்குளிப்பான் நோயால் முழு மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் அழிந்து போயினர். தங்கம் தேடும்வெறியில் நகர்ந்த ஸ்பானிய படைகள் முழுக்கிராமங்களை எரித்து அழித்திருக்கின்றனர். இந்தவகையில் எஸ்பானோலாவின் ஆதிக்குடிகள் அழிந்துபோக சனத்தொகையை அதிகரிக்கவென பஹாமாஸ்சிலிருந்து செவ்விந்தியர்களை ஸ்பானியர் 1510 – 1520 காலப்பகுதியில் இறக்குமதி செய்தனர்.

**அமெரிக்காவின் சுதந்திர போரில் உதவிய ஹைற்றி மக்கள்.**

1779ம் ஆண்டில், அதாவது ஹைற்றி சுதந்திரம் பெறுவதற்கு 24 ஆண்டுகளுக்கு முன்னரே அடிமைத்தளத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட ஹைற்றி மக்களில் 800 கறுப்பு, கலப்பின வீரர்கள் அமெரிக்கா சென்று ஜேர்ஜ் வோசிங்ரனின் படையோடு இணைந்து வீரத்துடன் போரிட்டிருந்தார்கள். சவானாவில் வோசிங்ரனின் படை பின் வாங்கிய போது இந்த அணியினரே தீரத்துடன் பின் காப்பை வழங்கினார்கள்.

தங்களை மீள அடிமை கொள்ள நெப்போலியன் அனுப்பிய படைகளை முறியடித்தபின் 1804ம் ஆண்டில் ஹைற்றி மக்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். 1806ம் ஆண்டளவில் ஹைற்றி இராசதந்திர ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

அமெரிக்காவுக்கும் ஹைற்றிக்குமிடையே குறிப்பிடத்தக்களவு வர்த்தகம் இடம்பெற்றது. ஆனால் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெபர்ஸன் ஹைற்றியின் சுதந்திரத்தை ஏற்கவில்லை. ஹைற்றியின் சுதந்திர போராட்டத்துக்கு தலைமை தாங்கிய டூசைன்ற்லூவேர்சரின் இராணுத்தை நரமாமிசம் புசிப்பவர்கள் என ஜெபர்ஸன் தூற்றினார். 1805 – 1806 காலப்பகுதியில் அமெரிக்காவுக்கும் ஹைற்றிக்குமிடையேயான வர்த்தகம் தடைசெய்யப்பட்டது. எனினும் உத்தியோகபூர்வமற்ற வர்த்தகம் தொடர்ந்தது. 12 வருடங்களாக நீடித்த

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# விடுதலைப்போராட்டத்திற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை

எல்லாளன்



நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றிற்கான பொதுத் தேர்தல் முடிவுகள் தமிழ்மக்களின் அரசியல் நிலைப்பாட்டைத் . தெட்டத்தெளிவாக வெளிக்காட்டியுள்ளன.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கு பகுதிகளில் தமிழர் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு தமிழ் மக்கள் ஏகோபித்த ஆதரவை வழங்கி, தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் கரத்தை வலுப்படுத்தியுள்ளனர்.

இப்பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டமைப்பு முன்வைத்த அரசியல் கோரிக்கைகளில் முக்கியமானது தமிழ் மக்களின் ஏக அரசியல் பிரதிநிதிகள் தமிழீழவிடுதலைப்புலிகளே என்பதாகும். அத்துடன், தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகள் புலிகள் இயக்கத்துடன் மட்டுமே நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு பதவிக்கு வரும் சிங்கள அரசு புலிகளுடன் பேச வேண்டும் என்பதேயாகும்.

இந்த வகையில், சிங்கள அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தமிழ் மக்கள் தங்களது உள்ளக்கிடக்கையை சனநாயக வழியில் மக்கள ஆணையாக வழங்கியுள்ளனர்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை இனியும் ஒரு பயங்கரவாதப் போராட்டம் என்றோ! தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பை ஒரு பயங்கரவாத இயக்கம் என்றோ! ஏதாவது ஒரு சில வெளிநாடுகள் கருத முற்படுமாயின் அது தமிழ்மக்களின் மக்கள் ஆணைக்கெதிரான ஒருதலைப்பட்ச நிலைப்பாடாகவே கருதப்படும். அத்துடன் தமிழ் மக்களின் சனநாயக உரிமையை அந்தநாடுகள் கொச்சைப்படுத்துவதாகவும் கொள்ளப்படும்.

தமிழரின் விடுதலைப்போராட்டத்தை தலைமையேற்று நடாத்தும் உரிமையை தமிழ்மக்கள் புலிகள் இயக்கத்திற்கு வழங்கினரா! என்ற விதண்டாவாதக் கதைக்கும் இனி இடமில்லை.

1977இல் தேர்தல் மூலம் தமிழ்மக்கள் வழங்கிய மக்கள் ஆணையைச் சிங்கள அரசு பொருட்டாக மதிக்கவில்லை. அதன் விளைவே கடந்த 25வருடகால யுத்தமாகும். இந்த 25வருடகாலப் போர் தமிழ்மக்களது இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்க்கமுடியாது என்ற யதார்த்தத்தைச் சிங்கள தேசத்திற்கு உணர்த்திவிட்டது. இராணுவ அணுகுமுறை மூலம் பிரச்சினையைக் கையாள்வதைச் சர்வதேச சமூகம் நிராகரிக்கின்றது.

இத்தகைய புறநிலையில் சிங்களத்தில் புதிதாகப் பதவி யேற்றுள்ள புதிய அரசு இனப்பிரச்சினைத் தீர்வை எவ்வாறு அணுகப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

'சமாதானத்திற்கான போர்' என்ற கூலோகத்துடன் கொடுமையான போரை நடாத்தி அதன் விளைவுகளை கண்ணாரக் கண்ட பழைய சிங்களத்தலைமையே இப்போது புதிய அரசை அமைத்துள்ளது.

அப்போது நிர்ப்பந்தம் காரணமாக சமாதானத்துக்கான போரை நடாத்தியதாக சந்திரிகா அம்மையார் அண்மையில் கூறியுள்ளார். தான் போரை விரும்பவில்லை என்று இப்போது கூறுகின்றார். பதவியேற்றபின் புலிகளைப் பேச்சிற்கு அழைக்கப்போவதாகக் கூறியுள்ளார். புலிகள் சமர்ப்பித்த இடைக்கால அதிகார சபையை அடிப்படையாக வைத்து பேச்சை நடாத்த சம்மதிப்பதாகவும் கூறியுள்ளார். அத்துடன், இனப்பிரச்சினை இங்கு உண்டு என்று முதன் முதலில் ஏற்றுக்கொண்ட ஆட்சியாளர் தானே என அம்மையார் கூறியுள்ளார்.

ஆனால், ஆட்சியமைத்த பின்னர் அம்மையாரின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்று எவராலும் எதிர்வு கூறமுடியாது.

இதேவேளை, அம்மையாருடன் கூட்டணியமைத்துள்ள ஜே.வி.பி.யினர் சமாதானமுயற்சிக்குப் பங்கம் ஏற்படுத்தும் கருத்துக்களை கூறிவருகின்றனர். புதிய அரசுடன் சமாதானப்பேச்சுக்களை புலிகள் புதிதாகத் தொடக்கவேண்டும் என்று கூறியுள்ளனர். புதிதாகப் போர்நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டு கைச்சாத்திடப்படவேண்டும் என்று கூறியுள்ளனர். சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று கூறியுள்ளனர். தமிழரின் தாயகம் என்று ஒன்று இல்லை என்றுள்ளனர். வெளிநாட்டு மத்தியத்துவம் பேச்சிற்குத் தேவையில்லை என்கின்றனர்.

இவ்வாறு சமாதானத்திற்கு விரோதமாகவும் முரண்பட்ட கருத்துக்களையும் கொண்ட ஒரு கூட்டணி சிங்கள அரசை அமைத்துள்ளது.

இதேவேளை குணாம்ச ரீதியாக இனப்பிரச்சினையைப் பொறுத்தவகையில் கடும் போக்கைக் கொண்ட சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகள் (சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி) அரசமைத்துள்ளன. இந்த கூட்டணி அரசு திறந்த மனப்பான்மையுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வை அணுகுமா! என்பது முக்கியமான கேள்வியாகும்.

முன்னைய ரணில் அரசாங்கம் சமாதானப்பாதையில் தடம்பதிக்க முயன்றதற்குரிய முக்கிய காரணிகளில் ஒன்று, போருக்கெதிரான சர்வதேச அபிப்பிராயமாகும். இப்போதும் அத்தகைய கருத்து நிலைப்பாட்டுடனேயே சர்வதேச சமூகம் உள்ளது.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ! ஜே.வி.பி. கட்சியினரோ சர்வதேச அபிப்பிராயத்தை மதிக்காத வரலாற்றைக் கொண்டுள்ளனர். அதேவேளை, ஆழ்மனதில் தமிழ் விரோதக் கருத்துக்களைக் கொண்ட பேரினவாதிகளாவர்.

எனவே, சமாதானப் பேச்சுக்களின் தலைவிதி எவ்வாறாக அமையப்போகிறது என்பதையும் எவரும் எதிர்வுகூறமுடியாது.

சந்திரிகா- ஜே.வி.பி. கூட்டணியின் ஆசைப்படி அல்லது அவர்களது நிகழ்ச்சி நிரலின்படி பேச்சை நடாத்தப் புலிகள் இயக்கம் முனைய மாட்டாது. இது புதிய சிங்களக் கூட்டணிக்கும் நன்கு தெரியும்.

சர்வதேசத்தின் முன்நிலையில் முன்னைய சிங்கள அரசுடன் புலிகள் கண்ட இணக்கப்பாடுகளைப் புதிய அரசு நிராகரிக்க முனைவதைச் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

இதேசமயம் சந்திரிகா அம்மையாரின் கூட்டணியும் சரி, ஐ.தே.கட்சியின் கூட்டணிக் கட்சியும் சரி சமாதானத்தை வலியுறுத்தியே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்டன. ஆனால், ஐ.தே. கட்சியின் சமாதானப் பாதை தெளிவானது. அம்மையாரின் கூட்டணிக் கட்சியின் சமாதானப்பாதை குழப்பகரமானது. எனினும் ஜனாதிபதி பதவியும் - பாராளுமன்ற அதிகாரமும் ஒரே கட்சியிடம் இருப்பது சமாதானப் பேச்சிற்கு சார்பானது. ஆனால் இந்த அனுகூலத்தைப் புதிய அரசு பயன்படுத்துமா! என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

தமிழர் தரப்பைப் பொறுத்த வரையில் எந்தவொரு குழப்பமுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்திற்காக ஆணை வழங்கியுள்ளனர். ஏக பிரதிநிதிகளாக புலிகளை அங்கீகரித்து - உலகிற்குக் காட்டியுள்ளனர். புலிகள் இயக்கமும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்விற்கான ஆயத்தமாகவுள்ளது. சமாதானப் பாதையில் மேலும் ஒருபடி முன்னேறி இடைக்காலத் தன்னாட்சி வரைபு ஒன்றையும் சிங்களத்திடம் வழங்கியுள்ளது. இந்த வரைபு உலகநாடுகளின் வரவேற்பையும் பெற்றுள்ளது. சிங்கள மக்களுக்கு எந்தவொரு அச்சுறுத்தலையும் கொடுக்காத - அதேவேளை தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிரந்தரத்தீர்வு காணப்படும் வரை - பேணக்கூடியவகையில் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. இனி புதிய அரசின் கைகளிலேயே அனைத்தும் தங்கியுள்ளது. போரா! சமாதானமா! என்பதை முடிவு கட்ட வேண்டியது புதிய அரசாகும்.


சர்வதேச சமூகம் வாய்ச்சொல்லிற்கும் அப்பால் தனது கடமையை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. ஜனநாயக விதிமுறைகளுக்கமைய - சர்வதேச நியமங்களுக்கு அமைய புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை நிரூபித்துள்ளது. சிங்களத்தின் புதிய அரசை சமாதானப் பாதைக்கு அழைத்து வந்து அமைதி வழியில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்கவேண்டிய தார்மிகப் பொறுப்பு சர்வதேசத்திடம் உண்டு.

சர்வதேச சமூகம் வாய்ச்சொல்லிற்கும் அப்பால் தனது கடமையை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது

# பிரித்தாளும் தந்திரம்

# புதிய மொந்தையில் பழைய ...

## தென்னவன்




'பிரித்தாளும் தந்திரம்' - காலம் காலமாகவே ஆக்கிரமிப்பாளர்கள் தமது மேலாண்மையை மையமாகக்கொண்டு கடைப்பிடித்து வெற்றிபெற்று வந்த ஒரு சிறந்த தந்திரம்.

அதுவும் குறிப்பாக தமது விடுதலை வேண்டிப் போராட்டம் நடாத்தும் ஒரு சமூகத்தைப் பலவீனப்படுத்துவதற்கு, அந்தச் சமூகத்தினிடையே பிளவுகளை உருவாக்கி, அந்தப் பிளவுகளைக் கொண்டு அந்தச் சமூகத்தைத் துண்டாடி, கடைசியில் வெற்றிகொள்வதென்பது வரலாற்று ரீதியாக பல்வேறு ஆட்சியாளர்களுக்கும் வெற்றிவாகை சூடித்தந்த ஒரு பாரம்பரிய யுத்த தந்திரம்.

தமிழ்மக்கள் தமது விடுதலை வேண்டி மேற்கொண்ட அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களின் போதும்கூட, அந்தப் போராட்டங்களை வெற்றிகொள்ள பிரயத்தனம் செய்த சக்திகள், இதே பிரித்தாளும் யுத்த தந்திர யுக்தியைப் பிரயோகித்து தனது எதிர் நடவடிக்கைகளை வகுத்திருந்ததை, போராட்ட காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளையும், மாற்றங்களையும் ஆராயும்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

மிகவும் உறுதியாக ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், 'தமிழ் சமூகம்' என்கின்ற இன அடையாளத்துடன் இணைந்திருந்த சக்திகளை துண்டாடுவதிலும், பிரித்தெடுப்பதிலும் ஆதிக்க சக்திகள் மிகவும் அக்கறையாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்களை மிகவும் தெளிவாகக் காண முடியும்.

'தமிழ்பேசும் சமூகம்' என்ற அடிப்படையில் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் ஒரே அணியில் நின்று போராட்டத்தை மேற்கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தை தமிழ் சமூகத்தில் இருந்து வேறுபடுத்திப் பிரித்தெடுப்பதற்கு, சிங்கள அரசாங்கங்கள் எத்தனையோ பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன. சில முஸ்லிம் அரசியல் வாதிகளை முன்நிறுத்தி, முஸ்லிம் ஊர்காவற் படைகளை உருவாக்கித் தமிழ்மக்களுக்கு எதிரான நகர்வுகள் பலவற்றை மேற்கொண்டு முஸ்லிம் மக்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் பாரிய பிளவுகளை உருவாக்க முனைந்தது. சற்றில் அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தது.

தமிழ்பேசும் சமூகம் என்கின்ற இன அடையாளத்தில் இருந்து முஸ்லிம்களைப் பிரிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட பல தகிடுதத்தங்களில், தமிழ் இளைஞர்களுக்கு எதிராக அட்டூழியங்களை முஸ்லிம் அரசியல்வாதிகளையும், முஸ்லிம் பெயர்களை உடைய இராணுவ அதிகாரிகளையும் முன்வைத்தே மேற்கொண்டது தான், அதன் ஒரு வகையிலான வெற்றிகளுக்கு காரணமாக அமைந்ததாக ஆய்வாளர்களால் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது.

உதாரணமாக, 1970களில் தமிழ் இளைஞர்களின் உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்ததும், ஸ்ரீலங்கா என்ற சிங்கள தேசத்தில் இனியும் ஒன்றாக வாழமுடியாது என்று தமிழ் இளைஞர்களை தீர்மானம் எடுக்கச் செய்ததுமான ஒரு சம்பவத்தை குறிப்பிடமுடியும். அந்தக் காலத்தில் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களைத் தட்டிப் பறிக்கும் 'தரப்படுத்தல்' என்ற முறை ஸ்ரீலங்கா அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ் இளைஞர்களின் உணர்வுகளில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த 'தரப்படுத்தல்' அமுலாக்கலில்தான் ஸ்ரீலங்கா அரசு தனது பிரித்தாளும் திட்டத்தையும் முதன்முதலில் பரிட்சித்துப் பார்த்திருந்தது. தமிழ் இளைஞர்களின் உணர்வுகளுடன் விளையாடிய இந்த 'தரப்படுத்தல்' திட்டத்தை முஸ்லிம் அரசியல்வாதியான பதியுதீன் முகமட் அவர்களைக் கொண்டே அமுல்படுத்தியிருந்தது. அப்பொழுது கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முகமட் அவர்களிடம், 'இந்த தரப்படுத்தல் முறைமூலம் கிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்கள் பலருக்கு உயர் கல்வி வாய்ப்புக்கள் கிடைத்துவிடும்' என்று ஆசை காண்பித்தே ஸ்ரீலங்கா அரசு தனது காயை நகர்த்தியிருந்தது. தமிழ் இளைஞர்களால் அதிகம் வெறுக்கப்படக்கூடிய நபராக ஒரு முஸ்லிம் இருந்துவிடவேண்டும் என்பதில் சிங்களத் தலைமை எந்த அளவிற்கு கரிசனையாக இருந்தது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு உதாரணம்.

தொடர்ந்தும், தமிழ்மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டிருந்த பலவிதமான அடக்குமுறைகளின்போதும், அந்த அடக்குமுறைகளினால் வெளிப்படக்கூடியதான தமிழ்மக்களின் கோபம் முஸ்லிம்கள் மீது திரும்பிடவேண்டும் என்பதில் சிங்களத் தலைமைகள் எந்த அளவிற்கு திட்டமிட்டு செயலாற்றி இருந்தார்கள் என்பதற்கு பல சம்பவங்களை உதாரணமாகக் கூறமுடியும். முஸ்லிம்களின் பெயர்களில் அனுப்பப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் தமிழ்மக்களைத் துன்புறுத்திப், படுகொலை செய்ததுடன், இதுபோன்ற அட்டகாசங்கள் காரணமாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இயல்பான கோபத்தை முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராகத் திருப்பும் நடவடிக்கையிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். அதேபோன்று வியாபாரத்திற்காக தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்லும் முஸ்லிம் இளைஞர்களைக் கொலைசெய்து அவர்களின் உடல்களை தமிழ்க் கிராமங்களில் போட்டும், முஸ்லிம் - தமிழ் விரோதத்தை வடக்கு கிழக்கில் வளர்த்து வந்தார்கள். கடைசியில் தமது இந்தப் பிரித்தாளும் திட்டத்தில் அவர்கள் ஒரு வகையில் வெற்றி பெற்றதுதான் இங்கு நோக்கத்தக்கது.

இதேபோன்று, ஈழத் தமிழ்மக்களை, இந்தியத் தமிழ்மக்களில் இருந்து பெருமளவில் அன்னியப்பட வைத்ததிலும், மேலாதிக்க சக்திகளின் அதே பிரித்தாளும் தந்திரம் ஓரளவு வெற்றி சூடியிருந்தது.

இந்த அடிப்படையில் தனது பிரித்தாளும் தந்திரத்தின் அடுத்த கட்டத்திற்குள் நுழைவதற்கு மேலாதிக்க சக்திகள் மேற்கொண்டிருந்த நகர்வுகளின் ஒரு வெளிப்பாடுதான், கிழக்கில் அண்மையில் கிளம்பியுள்ள கருணா விவகாரம்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பது இந்த மேலாதிக்க சக்திகளை ஆரம்பம் முதலே மிகவும் அச்சுறுத்தி வந்த ஒரு விவகாரம். அதனாலேயே வடக்கு கிழக்கை பௌதீக ரீதியாகத் துண்டாடுவதற்கு ஆரம்பத்தில் சிங்களக் குடியேற்றங்களை இந்த மேலாதிக்கச் சக்திகள் திட்டமிட்டு மேற்கொண்டு வந்தன. தமிழ் மக்களின் போராட்டங்கள் சாத்வீக வடிவில் இருந்தபோது, கிழக்கின் தலைவர்களை விலைபேசி வடக்கில் இருந்து பிரித்துவிடுவதில் மேலாதிக்க சக்திகள் முனைப்புக் காண்பித்தன. கிழக்கில் தோன்றியிருந்த தலைமைகளுக்கு பிரதேசவாத நஞ்சை படிப்படியாக ஊட்டி, அதற்கு அடிமையாக்கும் திட்டங்களை அந்தச் சக்திகள் வெற்றிகரமாக மேற்கொண்டு வந்தன. இதில் அந்த சக்திகள் இரண்டு வகையில் நன்மை அடைந்தன. ஒன்று வடக்கு-கிழக்கு தலைவர்களிடையே பிரிவினையைத் தோற்றுவிப்பது. அடுத்தது, கிழக்கின் தலைமைகளுடாக கிழக்கு மக்களின் மனங்களில் நிரந்தரமாக பிரதேசவாதத்தை விதைப்பது.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான நல்லையா, இராஜன் செல்வநாயகம், செ.இராசதுரை, தேவநாயகம் என்று பல அரசியல் தலைவர்களும் இந்தப் பிரதேசவாத நஞ்சுக்குப் பலியாகி இருந்தார்கள். மக்களையும் பலியாக்கியிருந்தார்கள்.

ஆனால் ஆயுதப் போராட்டத்தை இளைஞர்கள் கைகளில் எடுத்ததும், இந்தப் பிரதேசவாதம் முற்றாகவே மக்களைவிட்டு அகன்றிருந்தது என்றுதான் கூறவேண்டும். தமிழ்ச் சமூகத்திடம் புரையோடிப்போய்க் காணப்பட்ட சாதிப் பிரச்சினைகள், மதப் பிரச்சினைகள், பிரதேசவாதம் என்பன, ஆயுதப் போராட்டத்தின் உறுதியினுள்ளும், கட்டுக் கோப்பினுள்ளும், பலமிழந்து போய்விட்டிருந்தன.

ஆனாலும் இந்தப் பிரதேசவாதத்தை போராளிகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஊட்டுவதற்கு அந்த மேலாதிக்க சக்திகள் பகிரதப் பிரயத்தினம் செய்து வந்ததையும் நாம் குறிப்பிட்டேயாக வேண்டும்.

யுத்த காலங்களில், அதுவும் யுத்தம் மும்முரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வடக்கு-கிழக்கு பிரிவினையை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் 'உளவியல் நடவடிக்கைகள்' (Psychological Operations- Psyops) என்கின்ற ஒருவித நடவடிக்கையை கிழக்குவாழ் மக்களிடையே மேற்கொண்டிருந்தனர்.

கிழக்கில் சோதனைச் சாவடிகளில் வைத்து ''அன்பார்ந்த கிழக்குவாழ் மக்களே'' என்ற தலைப்பிலும், ''போராளிகளின் பெற்றோர்களே'' என்ற தலைப்பிலும் வெளியிடப்பட்ட அந்தப் பிரசுரங்கள், கிழக்குவாழ் மக்கள் மத்தியில் பிரதேசவாதத்தை தோற்றுவித்து, வடக்கு கிழக்கு பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.


ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒரு தனிப் பிரிவான, 'உளவியல் நடவடிக்கைகளுக்கான பணியகம்' ( Directorate of Psychological Operation – DPO ) திட்டமிட்டு இதுபோன்ற சதிகளை மேற்கொண்டு வந்தது.

வெளிநாட்டு உளவு அமைப்புக்களால் பயிற்றப்பட்டு, மிகவும் நூதனமான திட்டமிடல்களுடன் நகர்வுகளை மேற்கொண்டு வரும் இந்தப் பிரிவினர், வடக்கு-கிழக்கு பிரிவினையை ஏற்படுத்துவதற்குப் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்கள். தற்பொழுதும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

போராடும் ஒரு இனத்தில் பிளவுகளை ஏற்படுத்தி அந்தப் போராட்டத்தின் வீச்சை மழுங்கடிப்பதற்கும், சந்தர்ப்பம் கிடைத்தால் அந்தப் போராட்டத்தையே நசுக்கிவிடுவதற்கும் காலா காலமாக ஆக்கிரமிப்பாளர்கள் கையாண்டுவந்த 'பிரித்தாளும் தந்திரத்தை', ஸ்ரீலங்கா அரசும் தமிழ்பேசும் மக்களின் போராட்ட விடயத்தில் அவ்வப்பொழுது கவனமாகக் கையாண்டு வருகின்றது. இதுபோன்றதொரு பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாகி கருணாவும் இப்போது ஈழத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் துரோகியாகிவிட்டார். ●

# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

# உயிர்கூட்டிலிருந்து பிரிந்த பறவை



## கப்பல் கப்டன் சிலம்பரசன்/ ரஞ்சன்

**வேலாயுதம்பிள்ளை ஜெயரஞ்சன்**
ஆழியவளை,
வடமராட்சி கிழக்கு

பிறப்பு - 31.11.1972
வீரச்சாவு - 10.03.2003

"ஜெயரஞ்சன் A/L. சோதினையிலை பாஸ் பண்ணிட்டானாம். அவனுக்கு பி.கொம் கிடைச்சிருக்காம்" என்ற செய்தி அப்பாவின் காதுக்கெட்டியது. வீட்டில் எல்லோருக்கும் அவனை நினைக்கப் பெருமிதமாயிருந்தது. அப்பா அந்தச் செய்தியையும் காவிக்கொண்டு ரஞ்சனிடம் போனார். ஆனால் அந்தச் செய்தி அவன் காதுகளுக்கு எட்டமுன்பே அவன் தன் திறமைகளை இந்த தேசத்திற்காக அர்ப்பணிக்கத்தயாராகியிருந்தான். அப்பாவினால் அவன் முன்வைத்த வினாக்களிற்கு பதிலளிக்க முடியவில்லை. ஏனென்றால் அவை மறுக்கப்பட முடியாததாயிருந்தது. அப்போது அவன் பல்கலைக்கழகப் படிப்பிற்குள் முடங்கிப்போகாமல் அவன் எடுத்த முடிவு எங்கள் கடற்சேனையின் ஒரு கடற்தளபதி என்ற நிலைக்கும் எழுதுகோல்களுக்குள் புகுத்தமுடியாத அவன் சாதனைகளுக்கும் வழிவகுத்தன.

அந்த வீரனைப் பற்றி இப்போது சொல்லக் கூடியவற்றை மட்டும் சுமந்தபடி அவனின் கடந்தகால வாழ்க்கைக்குள் எண்ணங்கள் நுழைகின்றன.

1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட்டுச் செயற்பட்டவன், 1994ஆம் ஆண்டளவில் தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டான். அந்த நாட்களில் அவனுக்கு முதலில் கிடைத்தது அரசியற்பணி. இளம் வயதிலேயே ஒரு முதிர்ச்சியாளனுக்கேயுரிய அறிவைக்கொண்டு அரசியற்பணியை சரிவரச் செய்துவந்த அவனுக்கு 1995ஆம்ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற யாழ்குடாநாட்டிலிருந்தான இடப்பெயர்வு பெரும் சவாலாக அமைந்தது. குறுகிய கால அவகாசத்திற்குள் எமது போராளிகளையும் எமது வளங்களையும் ஒருங்கிணைத்து வன்னிக்கு அனுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்படுகின்றது. குறைந்தளவு வளங்களோடு கூடிய அளவு செயற்திறனைக்காட்ட வேண்டியநிலை அவனுக்கு. ஆனாலும் துணிவோடு அதைச் சவாலாக ஏற்று குருநகர் ஐந்து மாடிக்கட்டிடத்தில் நின்றபடி கடற்புலிகளின் போராளிகளுக்கு நிதானமானதும் சாதுரியமானதுமான கட்டளைகளை வழங்கி சிக்கலான அந்தப் பணியைச் செய்து முடித்தது, அவன் திறமையின் முதற்சான்றாய் அமைந்தது.

ஒவ்வொருவருக்கும் ஏதோஒரு துறையில் ஈடுபாடும் திறமையும் உள்ளதென்பது சாதாரணமான விடயம். ஆயினும் எல்லாத்திறமைகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குபவர்கள் பலர் இருக்கமுடியாது. இந்த சிலம்பரசன் அந்தச் சிலருக்குள் அடங்குகிறான். ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பான எங்களின் கடல் அணியில் இருந்தபடி தான் வாழ்ந்த காலத்தில் கடந்துவந்த கடினபாதையின் எல்லாச் சுமைகளிலும் தோள்கொடுத்துச் சுமந்தவனவன்.

அது 1998ஆம் ஆண்டின் நாட்கள். யாழ்ப்பாணத்தினை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படைகள் கடல்வழியை நம்பியே உயிர்வாழ்வதால் அதற்குத் துணைபோகும் கடற்கலங்களை வழிமறித்து தாக்கி அழிக்கத்திட்டம் தீட்டப்படுகின்றது.

சிங்களக் கடற்படையின் கப்பல்கள் பயணம் செய்யும் ஒரு இரவுப்பொழுதில் கடற்புலிகளின் தளத்தில் இருந்து லெப்.கேணல் நிரோஜனின் கட்டளையின் கீழ் கடற்சமர்க்களம் புக கடற்புலிகள் தயாராகினர். அங்கே தாக்கப்படப்போகும் கப்பலொன்றை அழிக்கும் பொறுப்பு சிலம்பரசனிடம் வழங்கப்படுகின்றது.

சிலம்பரசன் தன் திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கும் போராளிகளையும் கடற்கலங்களையும் தயாராக்கினான். புறப்படுவதற்கு முன்பாகவே தன் போராளிகளுடன் சேர்ந்து, கப்பலை அழிக்காது தளம் திரும்புவதில்லை என்று உறுதியெடுத்துக்கொள்கிறான். புலிகளின் கடற்கலங்கள் கடலுக்குள் இறக்கப்பட்டு கடற்சமர்க்களம் நோக்கி புறப்படுகின்றன. கூடவே கரும்புலிப்படகுகளும் புறப்படுகின்றன. மூன்று சண்டைப்படகுகளும் இரண்டு கரும்புலிப்படகுகளும் கொண்ட கடற்புலிகளின் தாக்குமணி எதிரியின் பாரிய வழங்கல் அணியில் பயணித்த 'பபதா', 'வலம்புரி' ஆகிய கப்பல்களையும் ஒரு தரையிறங்கு கலத்தையும் அவற்றிற்குப் பாதுகாப்பாகப் பயணித்த அதிவேக டோறாப்படகுகள் ஆறினையும் அவற்றிற்கான துணைப்படகுகள் நான்கினையும்



எதிர்கொள்ளப்போகின்றன. படகுகளின் பலம் என்று பார்க்கும் பொழுது கடற்புலிகளின் பலம் எதிரியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாததாய் இருந்தது. ஆனாலும் துணிச்சல் மிக்க வீரர்களால் அந்தக்கடற்சமர் எதிர்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவுக்கு நேராக அந்தக் கடற்படையின் கப்பல் அணியை தடுத்துச் சமர்புரிய முனைந்தபோதும் அவை தாக்குதலில் இருந்து தப்பிக்க முயன்றன. ஆனாலும் பருத்தித்துறைக்கு நேரே கடற்புலிகள் கடற்படையின் கப்பல்களை வழிமறித்துச் சமர்புரியத்தொடங்கினர்.

கடற்புலிகளின் தலைமையகத்துடன் தொடர்பில்லாது முற்றிலும் சாதகமற்றதும் எதிரியின் எல்லைக்குள்ளும் நின்றபடி கடற்சமரை லெப்.கேணல் நிரோஜன் வழிநடத்த அதற்குத்துணையாக சிலம்பரசன் தன்படகை வழிநடத்தி சமர்புரிந்துகொண்டிருந்தான். அந்தக்கப்பற் தொகுதியில் பயணித்த வலம்புரிக்கப்பல் மீது இலக்கு வைத்து சிலம்பரசனின் படகு தாக்குதல் நடாத்தியது. எதிரியின் கப்பல்களை நெருங்கவிடாது டோறாக்கள் நெருப்பு மழை பொழிந்த போதும் துப்பாக்கிச் சன்னங்களிடையே தன்னுடன் வந்த கரும்புலிப்படகிற்குப் பாதை அமைத்துக்கொடுத்து வலம்புரிக் கப்பலை அழிக்கும் நடவடிக்கையில் வெற்றிகண்டான் சிலம்பரசன்.

வலம்புரிக்கப்பலும், பபதாக்கப்பலும் கடலில் மூழ்கிக்கொண்டிருக்க சாதகமற்ற சூழலுக்குள் இருந்து தளம் திரும்பின கடற்புலிகளின் அணிகள்.

கடற்புலிகள் அணியின் பல்துறை சார்ந்த செயற்பாடுகளில் எந்தச் செயற்பாட்டிலும் இறுக்கநிலைவந்து அடுத்த கட்டங்களிற்கு நகருவதற்கு தடைஏற்படின் அந்தத் தடைகளை உடைக்கும் முதல்மனிதனாக சிலம்பரசனின் உருவம் கடற்புலிகளின் சிறப்புத்தளபதியின் முன் தோன்றும். அவ்வாறுதான் கடற்புலிகளின் விநியோக அணியானது நெருக்கடி நிலையைச் சந்தித்தபோது தமிழீழத் தேசியத்தலைவராலும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதியாலும் அந்தப் பணிக்கு சிலம்பரசன் நியமிக்கப்பட்டான்.

இயல்பாயே தனித்துவமான திறமைகளைக் கொண்டிருந்த சிலம்பரசன் கடல்சார்ந்து தான் பெற்றிருந்த கல்வி மூலமும் தனது துணிவும் மதிநுட்பமுமான செயற்திறன் மூலமும் நெருக்கடிகளைத் தாண்டி கடலில் கடற்புலிகள் விநியோகப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து எமது விடுதலைப் போராட்டக்களங்களில் ஏனையபோராளிகள் களங்களில் புரிந்த பல சாதனைகளுக்கு வெளித்தெரியாமல் உழைத்தவன்.

கடற்புலிகளின் விநியோகப்பணியில் ஈடுபட்ட நாட்களில் தனது விநியோக அணியின் உதவியுடன் சிறிலங்காவின் கடற்கலங்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவன் மனதில் எழுந்தது. தன் எண்ணக்கருவைச் செயல் வடிவமாக்க கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் அனுமதியுடன் திருகோணமலையில் இருந்து காங்கேசந்துறை நோக்கி பயணிக்கும் உகின கப்பல் மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு லெப்.கேணல் பழனி தலைமையில் கடற்புலிகளின் தாக்குதற் படகுகள் கடலிற்குள் இறக்கப்படுகின்றன.

முல்லைத்தீவுக்கு நேரே 30மைல்களைக் கடந்த தூரத்தில் கப்பலை வழிமறித்துத் தாக்க கடற்புலிப்படகுகள் பயணித்துக்கொண்டிருந்தன. ஆனால் அந்தப் பயணத்தின்போது கடல் ஒத்துழைக்க மறுத்துக்கொண்டிருந்தது. அதிகரித்து வீசிய கடற்காற்றின் வேகம் படகுகளைச் சரியான இலக்கை நோக்கி நகர்த்தத் தடையாய் இருந்தது. ஆனாலும் எடுத்த முயற்சியிலிருந்து பின்வாங்குவதில்லை என்பதற்காய் கடல்கொந்தளித்துக்கொண்டிருந்த இரவுப்பொழுதில் இலக்கிற்காகக் காவலிருந்து தாக்குதலைத்தொடுத்தனர் கடற்புலிகள்.

தாக்குதலின் உச்சக்கட்டம். கரும்புலிப்படகுகள் கப்பலை மோதித்தகர்க்கப்போகின்றன. அந்த வெடியதிர்வின் பின்னால் நான்கு கடற்கரும்புலிகள் இந்த மண்ணிற்காய் மடியப்போகின்றார்கள். சமர்க்களத்தை நோக்குகிறான் சிலம்பரசன். எதிரியிடமிருந்து கிடைக்கும் எதிர்ப்பு சற்றுத்தணிந்து கொண்டு போகிறது. உடனடியாகவே இரண்டு கடற்கரும்புலிகளைக் கடலுக்குள் குதிக்கும்படி கட்டளைவழங்குகிறான். இரண்டு கடற்கரும்புலிகளுடன் அந்தக் கரும்புலிப்படகு உகின கப்பலில் மோதி வெடிக்கின்றது. நிலையில்லாது தளம்பிக்கொண்டிருக்கும் ஒரு படகில் நின்றபடி தன் கடல்சார்ந்த அறிவின் மூலம் அந்தக் கடற்சமர்க்களத்தில் அவன் எடுத்த முடிவானது இரண்டு கடற்கரும்புலிகளை அந்த தாக்குதலில் இழக்காது அந்தக் கப்பலை அழிப்பதற்காக நாங்கள் செலுத்த வேண்டிய உயிர்விலையைக் குறைத்திருந்தது.

அந்த இரு கரும்புலிகளையும் தனது படகில் ஏற்றியபடி தளம் திரும்பினான் சிலம்பரசன்.

இப்படியான அவனின் நிதானித்த செயற்பாடுகள் பல கடினமான பணிகளை நிறைவேற்றக்கூடிய மனிதனாக அவனை இனங்காட்டியது. அதனால்த்தான் ஓயாதஅலைகள் 3 நடவடிக்கையின் முதற்கட்டத்தில் கடற்புலிகளுக்கு வழங்கப்பட்ட பணி


(10ம் பக்கம் பார்க்க)

> முன்னே இருந்து சுட்டுக்கொண்டிருக்கும் எதிரிக்கு முன்னால் திருப்பிச் சுடமுடியாத கருவியோடு நின்று படம் எடுப்பது என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

# களப்படப்பிடிப்பும் படத்துறை வளர்ச்சியும்

கண்ணால் பார்த்தவற்றைப் படமாக்கவேண்டும் என்ற பெருவிருப்பு பண்டுதொட்டு மனிதர் மனதில் இருந்து வருகிறது. எழுத்துருவம் தோன்றுவதற்கு முன்பாகவே மனிதன் தான் வாழ்ந்த குகைச் சுவர்களில் சித்திரங்களையும் ஓவியங்களையும் தீட்டியுள்ளான். இவை சிறந்த கலைநயத்துடன் மிளிர்கின்றன. ஏறத்தாழ பதினையாயிரம் தொடக்கம் இருபதாயிரம் வரையான ஆண்டு பழமை வாய்ந்த குகை ஓவியங்களைப் பிரான்சு, ஸ்பெயின் நாடுகளில் இன்றும் காணலாம். தென் - மேற்கு பிரான்சின் லஸ்கோ குகைச் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்களும் செதுக்கப்பட்ட சித்திரங்களும் காணப்படுகின்றன. ஸ்பெயின் நாட்டின் அல்ராமீரா குகைகளில் மறைந்த பிசன்ற விலங்கினத்தின் பிரமாண்டமான ஓவியம் கிடைக்கின்றது.

பிரான்சின் பிரனீஸ் மலைத்தொடர் நியோ குகைகளில் ஓவியங்களும் ஓவியம் தீட்டுவதற்குப் பயன்பட்ட தூரிகை, மை என்பனவற்றின் எச்சங்களும் கிடைத்துள்ளன. குதிரை மயிரை விலங்கின் எலும்புக் குழாயில் செருகி தூரிகை செய்யப்பட்டுள்ளது. நிலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணக் களி மண்ணை மாட்டுக் கொழுப்புடன் கலந்து மை உருவாக்கப்பட்டுள்ளது. கொழுப்பை உருக்குவதற்கு மூட்டிய அடுப்பின் சான்றுகளும் குகையில் கிடந்தன. குகைச் சுவர் ஓவியங்கள், கீறுச் சித்திரங்கள் என்பனவோடு தான் தின்ற விலங்குகளின் என்புகளில் உருவங்களைச் செதுக்கியுள்ளான். பிரான்சின் கூர்தான் குகையில் மான் எலும்பில் செதுக்கப்பட்ட மான் தலைச் சித்திரங்கள் மீட்கப்பட்டுள்ளன.



புகைப்படத்தை ஓவியம், சித்திரம் ஆகியவற்றின் வழிவந்ததாகக் கொள்ளலாம். புகைப்படத்துறையின் நவீன காலம் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கின்றது. ஆடியின் ஊடாக ஒளியை இரசாயனக் கலவை பூசப்பட்ட தட்டின்மீது பாய்ச்சி அதன்மேல் விம்பங்களைப் பதிவு செய்வதை படமெடுத்தல் என்று வரையறை செய்கிறார்கள். ஆரம்பகாலத்தில் வெள்ளித் தட்டுக்களும், கண்ணாடித் தட்டுக்களும் பயன்படுத்தப்பட்டன. படச்சுருள் வருவதற்குச் சில காலம் பிடித்தது. புகைப்படங்கள் படமாக்கப்பட்ட மூலத்தின் துல்லியமான நகலாகக் கருதப்படுகின்றன. ஓவியங்களில் வேறுபாடுகள் காணப்படலாம், புகைப்படங்கள் ஓரளவுக்கு உண்மைப் பிரதிகளாகவே இருக்கின்றன. உருவம், காட்சி, நிகழ்ச்சி அல்லது ஆவணத்தின் நகலாக புகைப்படம் இடம்பெறுகின்றது. புகைப்படமும் ஆவணம் என்று வகைப்படுத்தப்படுகின்றது.

புகைப்படம் போன்ற ஓவியம் தீட்டும் பாணியை 'போட்டோறியலிசம்' (PHOTOREALISM) என்று அழைக்கிறார்கள். இதில் வல்லவர்கள் மனிதர்களையும், விலங்குகளையும், காட்சிகளையும் தத்ரூபமாகத் தீட்டுவார்கள். புகைப்படக்கலை பழக்கத்திற்கு வரமுன்பு இக்கலை பெரும் வளர்ச்சி கண்டிருந்தது. ஐரோப்பாவில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போர்க்களக் காட்சிகள் இப்பாணியில் ஓவியமாகக் கப்பட்டுள்ளன. இவற்றை இன்றும் ஐரோப்பியத் தலைநகரங்களிலுள்ள ஓவியக் கண்காட்சியகங்களில் கண்டுகளிக்கலாம். நவீன ஓவியத்தின் முன்னோடியான கியூபிசம் (CUBISM) புகைப்படம் போன்ற ஓவிய முறைக்கு எதிராக உருவானது. பிராக், பிக்காசோ (BRAQUE, PICASSO) ஆகியோர் கியூபிசத்தை 1906-1908 காலப்பகுதியில் உருவாக்கினர். கேர்னிக்கா என்ற ஸ்பெயின் நகர்மீது நடத்தப்பட்ட மிகக் கொடூரமான விமானக் குண்டுவீச்சை 1937ல் பிக்காசோ கியூபிச முறையில் ஓவியமாக்கினார். நவீன ஓவியத்துறையின் கலங்கரை விளக்கமாக இந்த ஓவியம் இடம்பெறுகின்றது.

நவீன புகைப்படக் கலை பிரெஞ்சுக்காரர் நிசேபோர் நீப்பே (NICEPHORE NIEPCE) 1816இல் நடத்திய ஆராய்ச்சிகளுடன் ஆரம்பிக்கின்றது. இரசாயனத் திரவம் பூசப்பட்ட கண்ணாடித் தட்டில் விம்பத்தைப் பதிவு செய்வதில் இவர் 1822ல் வெற்றிகண்டார். அதன்பின் நீப்சே, இதே துறையில் ஆய்வு நடத்திய டகுரே (DAGUERRE) என்பவருடன் கூட்டுச் சேர்ந்தார். சிறிது காலத்தில் நீப்சே இயற்கை எய்தினார். 1837இல் டகுரே தனது முதலாவது புகைப்படங்களை எடுத்தார். இவை டகுரே-ரைப் புகைப்படங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நவீன புகைப்படத்தின் முன்னோடியான டகுரேரைப் படங்கள் இன்றும் காட்சியகங்களில் பார்வைக்குக் கிடைக்கின்றன. 20ம் நூற்றாண்டில் படச்சுருள்கள் உருவாக்கப்படும் வரை தட்டுக்களில்தான் விம்பங்கள் பதியப்பட்டன. 1935இல் அமெரிக்காவின் ஈஸ்ற்மன் கோடாக் நிறுவனம் கலர் படச்சுருள்களை உருவாக்கமுன் புகைப்படங்கள் கறுப்பு வெள்ளையில் இருந்தன.

இன்றைய வாழ்வின் முக்கிய அங்கமாக புகைப்படம் அமைகின்றது. திரைப்படம், தொலைத்தொடர்பு, மருத்துவம், வர்த்தகம், விண்வெளி ஆய்வு போன்ற வேறுபட்ட துறைகளில் புகைப்படம் பின்னணி சக்தியாக இடம்பெறுகின்றது. தூரநோக்கியும், புகைப்படக் கருவியும் இணைந்து பிரபஞ்ச இரகசியம் பற்றிய ஆய்வில் ஈடுபடுகின்றன. களப்படப்பிடிப்பு முதலாம் உலகப் போருடன் (1914-18) ஆரம்பிக்கின்றது. போரில் ஈடுபட்ட நாட்டுத் தலைவர்களின் மார்பு அளவுப் படங்களுடன் தொடங்கிய படப்பிடிப்பு போரை முடிவுக்கு கொண்டுவந்த வேர்சேல்ஸ்(1919) மாநாட்டுப் படப்பிடிப்புடன் சிறந்த முன்னேற்றம் காண்கின்றது. படக்கருவிகள் வேகம் குறைந்தவைவாக இருந்தாலும் படங்கள் தரமானவையாக இருக்கின்றன. 1918இல் பிடிக்கப்பட்ட எரியும் விமானத்தில் இருந்து தலைகீழாக விழும் ஜேர்மன் விமானமோட்டியின் படம் ஆகாயத்தைப் பின்னணியாகக் கொண்டு எடுக்கப்பட்டது. இக்காலப்பகுதியின் மிகச் சிறந்த போர்க்களப் படமாக இது மதிப்பிடப்படுகின்றது.

'புகைப்படம் பிடிக்கப்பட்ட நூற்றாண்டு' (THE PHOTOGRAPHED CENTURY) என்ற சிறப்பு இருபதாம் நூற்றாண்டிற்கு உண்டு. 1800 - 1815 காலப்பகுதியில் ஐரோப்பாவில் தரையிலும் கடலிலும் நடந்த 'நெப்போலியனிக் வார்ஸ்' எனப்படும் தொடர்ச்சியான போர் நடவடிக்கைகள் மிகக் கூடுதலாகக் கள ஓவியமாக்கப்பட்ட போர் என்று வர்ணிக்கப்படுகின்றது. நெப்போலியனின் படைகள் இழப்புக்களோடு மொஸ்கோவிலிருந்து பின்வாங்கிச் செல்லும் ஓவியம் இவற்றுள் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. கடற்போரில் குண்டடிபட்டு இறக்கும் இங்கிலாந்தின் கடற் தளபதி நெல்சன் தனது கப்பலில் இறக்கும் காட்சி மிகச் சிறந்ததொரு ஓவியமாகக் கணிப்பிடப்படுகின்றது.

உலகின் விடுதலை இயக்கங்கள் யாவற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே மிகக் கூடுதலாகப் புகைப்படங்களை தமது பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்துபவர்கள். வரலாற்று ஆவணமாகவும், பிரசாரச் சாதனமாகவும், ஊடகக் கருவியாகவும், புலம்பெயர்ந்தோரின் விழிப்பைத் தூண்டும் பாலமாகவும் புகைப்படங்களைப் புலிகள் பயன்படுத்துகின்றனர். 'கொம்பாற் செர்வைவல்' (COMBAT SURVIVAL) என்ற போரியல் செய்திகளையும் படங்களையும் தாங்கிவரும் சஞ்சிகை புலிகளின் ஓயாதஅலை 02 சம்பந்தமான புகைப்படங்களை வியந்து பாராட்டியுள்ளது. வேறு துறைசார் நிபுணர்களும் எமது படங்களை வியப்புடன் நோக்குகின்றனர்.

1994இல் மன்னார் பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய கொமாண்டோத் தாக்குதல்



புலிகளின் புகைப்பட நடவடிக்கைகளைத் தொடக்கி வைத்தவர் கிட்டு என்றழைக்கப்படும் சதாசிவம் கிருஸ்ணகுமார் ஆவார். புலிகள் அமைப்பின் முதலாவது கேணல் தர அதிகாரியான இவர் கலையார்வம் மிக்கவர், சாதனையாளர், இராணுவத் தந்திரோபாயங்களில் வல்லவர். ஜனவரி 02, 1960ல் பிறந்து 33 வருடம் 02 வாரம் மாத்திரம் மண்ணுலகில் வாழ்ந்தார். நிதர்சனம் என்ற பெயரைத் தானே உருவாக்கி அதைப்புலிகளின் பல்லூடக அமைப்பிற்கு அவரே சூட்டினார். 1985ல் அவர் புலிகளின் குரல் என்ற பெயர் தாங்கிய வானொலிச் சேவையைத் தொடக்கினார். பெப்ரவரி 02, 1987ல் அவர் புலிகளின் முதலாவது தொலைக் காட்சிச் சேவையை தொடக்கி வைத்தார். நிதர்சனம் என்ற பரந்த அமைப்பின் கீழ் வானொலி, தொலைக்காட்சி, புகைப்படப் பிரிவுகள் அக்காலகட்டத்தில் இயங்கின.



ஆனையிறவு மீட்புச் சமருக்கான புகழ் பெற்ற இத்தாவில் தரையிறக்கம்

அருச்சுனா என்ற புலிப்போராளி எமது இயக்கத்தின் வீரகாவியமான முதலாவது புகைப்படப்பிடிப்பாளர் என்று சிறப்பிக்கப்படுகின்றார். எமது ஆரம்பகாலப் பயிற்சி முகாம்களையும் போராளிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளையும் படம் பிடித்தார். 1985 வரையிலான காலப்பகுதியில், தன்னோடு இணைந்து செயற்பட்ட போராளிகளிற் சிலருக்கு கமரா போன்ற புகைப்படக் கருவிகளை வழங்கி அவர்களை இத்துறையில் கிட்டு வழிநடத்தினார். இது விடுதலைப்புலிகளின் புகைப்படப் பிரிவின் உதயமாக மதிப்பிடப்படுகின்றது. எண்ணிக்கையில் குறைந்த போராளிகள் புகைப்படம் எடுப்பதில் ஈடுபட்டனர், என்றாலும் அதுவே தொடக்கம். இயக்கத்தின் ஆட்தொகைக்கும் வளவுக்கும் அது போதுமாக இருந்தது. புகைப்படப் பிரிவு என்ற அலகு தோன்றுவதற்கு ஓரிரு வருடங்கள் பிடித்தன.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் (1939 - 1945) களப்படப்பிடிப்பு பெரும் முன்னேற்றம் அடைந்தது. வேகமாக படம்பிடிக்க உதவும் புகைப்படச் சுருள்களும் அதேயளவு வேகத்தில் இயங்கும் 35 எம்எம் எஸ்எல்ஆர் (SLR) கமராக்களும் களப்படப்பிடிப்பில் செயற்பட்டன. 16எம்எம் திரைப்படக் கமராக்களும் களப்படப்பிடிப்பில் ஈடுபட்டன. முதலாம் உலகப் போரிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையில் புகைப்படங்கள் பிடிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான படப்பிடிப்பாளர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். பலர் அரசு ஊடகங்களின் பணியாளர்களாகவும் அதே அளவினர் தனியாராகவும் படப்பிடிப்பில் ஈடுபட்டனர். புகைப்பட வரலாற்றில் தடம்பதித்த பலர் இக்காலப் பகுதியில் உருவாகினர்.

1942இல் போர்க்களச்செய்தியாளராக ஆரம்பித்த அமெரிக்கர் வில்லியம் இயூஜின் ஸ்மித் (WILLIAM EUGENE SMITH) போர் முடியும் வரை பசுபிக் பிராந்தியப் படப்பிடிப்பில் ஈடுபட்டார். ஏப்ரல், 1945இல் ஜப்பானுக்குச் சொந்தமான ஒகினாவத் தீவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றியபோது அவர் மிகச்சிறந்த அது சம்பந்தமான புகைப்படங்களை எடுத்தார். மே 23ல் இவர் படம் பிடித்துக் கொண்டிருந்தபோது ஒரு ஷெல் துண்டு இவரது கையைத் துளைத்து முகத்தைத் தாக்கிக் காயப்படுத்தியது. இவர் இருவருடங்கள் மருத்துவ

மனையில் தங்க நேரிட்டது.

ஜுன் 06, 1945ல் நடைபெற்ற நோர்மாண்டித் தரை யிறக்கத்தை இரண்டாம் உலகப் போரின் மிகச் சிறந்த களப்படப் பிடிப்பாளர்களில் ஒருவரான றொபேட் கப்பா (ROBERT CAPA) படம் பிடித்தார். ஹன்கேரி நாட்டில் 1913ல் பிறந்த இவர் வியற்நாம் போரின்போது ஒரு கண்ணிவெடியை மிதித்து உயிரிழந்தார். களப்படப்பிடிப்பில் ஈடுபடும் பல்லாயிரக் கணக்கானோருக்கு றொபேட் கப்பா ஒரு மானசீக குருவாகத் திகழ்கிறார். தனது உயிரைத் துச்சமாக மதித்துப் பணியாற்றுவது இவருடைய தனித்துவமான பாணி. தொழில் நுட்பச் சிறப்பிற்காக இவருடைய புகைப்படத் தொகுதிகள் பாடமாகப் படிக்கப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போரின் பெண் களப்படப்பிடிப் பாளர்களில் லீ மில்லர் (LEE MILLER) என்ற அமெரிக்கர் முதலிடம் வகிக்கிறார். 1904ல் நியூயோர்க் நகரில் பிறந்த இவர் இளம் வயதில் ஒரு மொடல் அழகியாகப் பரிணமித்தார். 1942ல் அவர் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்கப் படைகளின் உத்தியோகபூர்வப் படப்பிடிப்பாளராக நியமிக்கப் பட்டார். பிரான்சிற்குள் முதன்முதலாக நுழைந்த அமெரிக்கப் படைகளுடன் இவரும் சென்றார். சோவியத் ஒன்றியத்தின் செம்படையும் அமெரிக்கப் படைகளும் ஜேர்மனியில் வரலாற் றுச் சந்திப்பை மேற்கொண்டபோது லீ மில்லர் அதைப் படமாக் கினார். ஒரு பொறியலாளரின் மகளான இவர் மிகச் சிறுவயதி லேயே கமராக்களை திருத்தம் செய்யும் திறமையைப் பெற்றி ருந்தார். மாகரேற் பூர்க்கே - வைற் என்ற இரண்டாம் உலகப் போர்க்காலப் பெண் படப்பிடிப்பாளர் ஒரு புகைப்படத்துறை சம்பந்தமான அரிய தத்துவத்தை முன்வைக்கிறார். 'தன் வாழ் நாளில் ஒரு படப்பிடிப்பாளர் பல்லாயிரம் படங்களைப் பிடிக்க லாம், ஓரிரு படங்கள்தான் காலத்தால் அழியாது நிலைக்கின்றன' இரண்டாம்உலகப்போரில் பிடிக்கப்பட்ட புகைப்படங்களின் மொத்தத் தொகை பலகோடிகளைத் தாண்டும், ஆனால் ஒரு சிலதான் நிலைத்து நிற்கின்றன.

கார்ள் மைடன்ஸ் பிடித்த இரு புகைப்படங்கள் இந்த வகையைச் சார்ந்தவை. அமெரிக்காவின் மிசூரிபோர் கப்பலின் மேற்தட்டில் நிபந்தனையற்ற சரணாகதி உடன்படிக்கையில் மெக் ஆர்தர் முன்னிலையில் ஜப்பான் கைச்சாத்திட்ட புகைப் படம் அதிலொன்று. அடுத்தது பிலிப்பீன்ஸ் தீவுகளை அமெரிக் கப் படைகள் மீளக் கைப்பற்றியபோது கடல் நீரை மிதித்தவாறு ஜெனரல்மெக் ஆர்தர் தரைக்கு வரும் காட்சி. ஆணையிறவுப் போரின்போது கேணல் பால்ராஜ் தலைமையிலான ஆண்பெண் போராளிகள் மாமுனை - இத்தாவில்தரையிறக்கத்தை மேற் கொண்டபோது புலிப்படப்பிடிப்பாளர்களால் பிடிக்கப்பட்ட வர்ணப் புகைப்படங்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவை.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் டொக்கியூ மென்றி பில்ம்ஸ் (DOCUMENTARY FILMS) விவரணப் படங்கள் தோற்றம் பெற்றன. இவை செய்திப் பின்னணியையும், மக்கள் வாழ்வையும், தலைவர்கள் நிலைப்பாட்டையும் போருக் கான தயார்படுத்தலையும் தொகுத்து வழங்குவனவாக அமைந் தன. இதுவரை காலமும் தயாரிக்கப்பட்ட டொக்கியூமென்றி படங்களில் மிகச் சிறந்ததாக 1934ல் ஜேர்மன் படப்பிடிப்பாளர் லேனி றீபன்ஸ்ரால் (LENI RIEFENSTAHL) தயாரித்த 'திடசங்கற்பத்தின் வெற்றி' (THE TRIUMPH OF THE WILL) என்ற திரைப்படம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஹிற்லரின் வலது கைபோன்ற இப்பெண் போர் முடிந்த பின் நேச நாடுகள் நிறுவிய குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டார். போரை ஊக்குவித்த குற்றத்திற்காக அவருக்கு நான்கு வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. 2003ல் அவர் தனது 101ம் வயதில் இயற்கை எய்தினார்.

செய்திப் படச்சுருள் (NEWS REEL) தயாரித்து திரை யரங்குகளிலும் திறந்தவெளிகளிலும் காண்பிக்கும் வழமை இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. போர் செய்திகளை தொகுத்து இவை வழங்கின. நேச நாடுகளின் வெற்றிகளையும் எதிரியின் தோல்விகளையும் இப்படங்கள் கூட்டியும் குறைத்தும் வெளியிட்டன. பிரித்தானியா தயாரித்த செய்திப் படச்சுருள் காலனித்துவ நாடுகள் யாவற்றிலும் காண்பிக்கப்பட்டன. திரைப்படம் தொடங்குமுன் இவற்றைக் காண்பிக்கவேண்டும் என்ற கட்டாயம் அப்போது இருந்தது. இப்படியான திரைப்படங்களில் பிரித்தானியாவையும் காலனி களையும் ஆட்சிசெய்த ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் படமும், பின்னணியில் பிரித்தானியாவின் தேசிய கீதமும் முதற்கண் தோன்றும் அப்போது பார்வையாளர்கள் யாவரும் எழுந்து நின்று மரியாதை செய்வார்கள்.

1993 மே தொடக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒளிவீச்சு என்ற செய்திப்படச் சுருளை வெளியிடுகின்றனர். இதில் தமிழீழச் செய்திகளும், மாவீரர்களின் பெயர், படமும், மக்கள் அவலத்தை உணர்த்தும் சிறிய திரைப்படமும் இணைக் கப்பட்டிருக்கும். புலம்பெயர்ந்த தமிழர்களுக்குத் தாயகச் செய்தி களை வழங்குவதோடு தாயகத் தொடர்பை வலுப்படுத்தும் நோக்கையும் ஒளிவீச்சுச் சுருள்கள் வலுப்படுத்துகின்றன. ஒளிவீச்சு என்ற பெயரை உருவாக்கியவர் அதன் இயக்குநர் களில் ஒருவரான ஞானரதன். இதுவரையில் 103 ஒளிவீச்சு இதழ்கள் வெளிவந்துள்ளன. நிதர்சனம் படத்தயாரிப்பு நிறுவனம் இவற்றைத் தயாரிக்கின்றது. நிதர்சனத்தின் பிற தயாரிப்புக்களாக 20 முழுநீளத் திரைப்படங்களும் 70குறும்படங்களும் இற்றை வரை வெளிவந்துள்ளன. இவை அனைத்தும் தமிழ்கூறும் நல்லுலகெங்கனும் சிறந்த வரவேற்புப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் களப்படப்பிடிப்பு உட்பட புகைப்படம், திரைப்படம் சார்ந்த நடவடிக்கைகள் யாவும் அமைப்பின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இது கேணல் கிட்டு காலந்தொட்டு நிலவும் நடைமுறை. புகைப்படம், திரைப்படம் சார்ந்த ஆய்வுகூட நடவடிக்கைகள் (LAB WORK) திருத்தம் மற்றும் தொகுப்பு நடவடிக்கைகள் (EDITING) என்பனவும் போராளிகளால் மேற்கொள்ளப் படுகின்றன. உலகின் இத்தொழில்சார் வளர்ச்சி காரணமாக புதிது புதிதாக வெளிவரும் நவீன கருவிகளை உள்வாங்கிக் கையாளும் திறமை புலிகளுக்கு நிறைய உண்டு. கேணல் கிட்டு காலத்திலேயே புகைப்பட ஆய்வுகூடங்கள் ஆரம்பிக்கப் பட்டன. அவரை இத்துறைசார் 'பிதாமகர்' என்று அழைப்பது மிகையில்லை.

மிகச் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட புகைப்படப் பிரிவு 1990ம் ஆண்டு தொட்டுப் பல போராளிகளைக் கொண்டதொரு முக்கிய பிரிவாக வளர்ச்சி கண்டுள்ளது. இதில் ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கின்றனர். யாழ்குடா, வன்னிப் பெருநிலப் பரப்பு, திருகோணமலை, மட்டு-அம்பாறை பிராந்தியங்கள் யாவற்றிலும் புலிகள் ஈடுபட்ட படை நடவடிக்கைகள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. எமது வரலாற்றின் சான்றுகளை புகைப் படங்களாகவும், திரைப்படங்களாகவும் உள்ளூர் மக்களுக்கும், புலம்பெயர்ந்தோருக்கும் பிறருக்கும் இப்பிரிவினர் வழங்கு கின்றனர். பல படங்களுக்காக படத்துறைப் போராளிகள் தேசியத்தலைவர் அவர்களிடமிருந்து பரிசுகளையும் சான்றிதழ் களையும் பெற்றுள்ளனர். களப்படப்பிடிப்பை மாத்திரமல்லாது புலிகள் பங்குபற்றும் முக்கிய நிகழ்ச்சிகளையும், சந்திப்புக் களையும் இவர்கள் படமாக்குகின்றனர்.

புகைப்படப் பிடிப்பை அடிப்படையாகக் கொண்ட முக்கிய ஊடகத்துறைப் பிரிவாக 'புகைப்பட இதழியல்' (PHO-TOJOURNALISM) இரண்டாம் உலகப் போருடன் ஆரம்பித் துள்ளது. ஓராயிரம் சொற்களிலும் பார்க்க ஒரு சிறப்பான புகைப்படம் கூடுதல் வலுவுடன் இருக்கின்றது. இந்த அடிப் படையில் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. களப்படங்களை பெருவிலை கொடுத்துக் கொள்வனவு செய்வதற்கு ஊடகத்துறை நிறுவனங்கள் தயா ராகவுள்ளன. களப்படப் பிடிப்பாளர்களிடமிருந்து படங்களைக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் முகவரகங்கள் இன்று காணப்படுகின்றன. இவற்றுள் 'மக்னம்' (MAGNUM) என்ற நிறுவனம் முதலிடம் வகிக்கின்றது. எழுத்தைக் குறைவாகவும் படங்களைக் கூடுதலாகவும் கொண்ட 'லைப்' (LIFE) என்ற அமெரிக்கச் சஞ்சிகை 1936ல் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர், கோரியத் தீபகற்பப் போர், வியற்நாம் போர் பற்றிய முழு அளவுப் புகைப்படங்கள் இதில் பிரசுரிக்கப்பட் டுள்ளன. சில வருடங்களுக்கு முன் லைப் இடைநிறுத்தப் பட்டுள்ளது. அதன் சகோதரச் சஞ்சிகை 'ரைம்' (TIME) தொடர்ந்து பிரசுரமாகின்றது.

களப்படப்பிடிப்பு என்பது மிகவும் ஆபத்தான தொழில், உயிரிழப்பு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக நடக்கின்றது. இதுவரை களத்தில் பலியான படப்பிடிப்பாளர் எண்ணிக்கை பல நூறுகளைத்தாண்டுகின்றன. விபத்தில் இறப்போர் ஒரு புறமிருக்க வஞ்சினம் கொண்ட படைகளின் சூட்டில் இறந்தோர் எண்ணிக்கை கணிசமானளவு உண்டு. சென்ற வருடம் (2003) நடந்த ஈராக் போரில் அல் - ஜசீரா என்ற அரபு தொலைக்காட்சி நிறுவனத்தின் இரு படப்பிடிப்பாளர்கள் அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இஸ்ரேலியப் படைகள் பாலஸ்தீனர் களின் ஜெனிம் அகதி முகாம்மீது இராணுவத் தாக்குதல் நடத்தியபோது ஒரு ஆங்கிலேயப் படப்பிடிப்பாளர் யூதப் படை யினரால் குறி வைத்துச் சுடப்பட்டார்.

இன்றைய உலகின் மிகச் சிறந்த களப் படப்பிடிப் பாளராக மதிப்பிடப்படும் ஜேம்ஸ் நச்றவே, (JAMES NACHTWAY) வயது 55, கடந்த இரு தசாப்தங்களாக களப் படப்பிடிப்பில் பல இன்னல்களுக்கு மத்தியில் ஈடுபடு கிறார். 1994இல் மூன்று மாத இடைவெளியில் ஒரு மில்லி யனுக்கும் கூடுதலான ருட்சி இனத்தவர் குட்டு இனத்தவர்களால் கொல்லப்பட்ட போது நச்றவே அங்கு படப்பிடிப்பில் செயற் பட்டார். மச்செற் என்று அழைக்கப்படும் காட்டுக் கத்தி வீச்சில் இருந்து பலமுறை மயிரிழையில் உயிர்தப்பினார். செச்சென் போரில் ருஷ்யப் படைகள் இவரை கொல்லும் நோக்கில் சுட்டனர் ஆனால் தப்பிவிட்டார்.

'உன்னுடைய படம் திருப்தியாக இல்லாவிட்டால் நீ கிட்டப் போகவில்லை என்றுதான் அர்த்தம்' என்கிறார் நச்றவே. இதுதான் உயிராபத்தின் இரகசியம். நாமும் களப்படப்பிடிப்பின்போது பல பெறுமதிமிக்க போராளிகளை இழந்துள்ளோம். இதுவரை களப்படப்பிடிப்பின் போது 45 போராளிகளும் 04 நாட்டுப்பற்றாளர்களும் வீரச்சாவடைந் துள்ளனர். சலனப்படக் களப்படப்பிடிப்பில் வீரச்சாவடைந்த முதலாவது மாவீரர் லெப் பட்டேல் என்பது வரலாறு. இவர் 1986ம் ஆண்டு சிங்கள இராணுவம் வடமராட்சியைச் சுற்றி வளைத்தபோது, உலங்கு வானூர்தியில் இருந்து சுடப்பட்டு உயிர் நீத்தார். இவருடைய வீரச்சாவை அவர் பயன்படுத்திய சலனப் படக்கருவி பதிவு செய்துள்ளது. ஓயாதஅலை 03 ஆனையிறவு மீட்புச்சமரில் களப்படப்பிடிப்பில் ஈடுபட்ட யசோவின் வீரச்சாவு நிகழ்வு இன்னுமோர் களப்படப்பிடிப்பில் ஈடுபட்ட போராளியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. களப்படங்களின் தொகுப்பாக இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட விவரணப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.


இன்று நிகழும் தகவல் புரட்சின் அடிக்கோடாக மாற்றங்கள் நிகழ்கின்றன. இது டிஜிற்றல் அடிப்படையிலான கணனியுகம். உயிரினும் மேலாக மதித்த படக்கருவிகளை கைவிட வேண்டியவர்களாக இருக்கிறோம். டிஜிற்றல் கமராவின் வருகையால் படச்சுருளின் தேவை அற்றுப்போய்விட்டது. ஒரு சின்னஞ்சிறிய அட்டையில் நூறுவரையிலான படங்களைப் பதிவு செய்யமுடியும். பிடித்த படத்தை உடனடியாக கமராத் திரையில் பார்க்க முடிகின்றது. உடனடித்திருத்தம் செய்யும் வசதியும் கிடைத்துள்ளது. புலிகளின் படப்பிரிவு கணனி யுகத்திற்குள் நுழைந்து விட்டது. கணனியுகத்தின் மிகச் சிறந்த அனுகூலங்களில் ஒன்றாக படங்களையும் நெகற்றிவுகளையும் ஒரு மெமறி அட்டையில் பதிவு செய்து களஞ்சியப்படுத்தும் வசதி கிடைத்துவிட்டது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்ணாடித் தட்டுக் களைக் கைவிட்டுப் படச்சுருள்களைப் பயன்படுத்தியதால் பெரும் புகைப்படப் புரட்சி வெடித்தது. இப்போது டிஜிற்றல் கமராவின் வருகையால் அதையொத்த புரட்சி தொடங்கிவிட்டது. முன்பெல்லாம் நாம் புகைப்படங்களை தபால் மூலம் வெளிநாடு களுக்கு அனுப்பி வந்தோம். இதிலுள்ள சிரமத்தை இதில் ஈடுபட்டோர் அறிவார்கள். இன்று டிஜிற்றல் கமராவால் படம் பிடித்து, லப்ரொப் கணனியில் எடிற் செய்து, கைத்தொலைபேசி மூலம் படங்களை மின்னல் வேகத்தில், சென்றடைய வேண்டிய முகவரிக்கு அனுப்புகிறோம். புதிய தொழில்நுட்பத்தை உரிய முறையில் பயன்படுத்துவதில் புலிகள் நிகரற்று விளங்கு கின்றனர்.

**கலாநிதி க.சோமஸ்கந்தன்.**

**உலகின் விடுதலை இயக்கங்கள் யாவற்றிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே மிகக் கூடுதலாகப் புகைப் படங்களை தமது பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்துபவர்கள். வரலாற்று ஆவணமாகவும், பிரசாரச் சாதனமாகவும், ஊடகக் கருவியாகவும், புலம் பெயர்ந்தோரின் விழிப்பைத் தூண்டும் பாலமாகவும் புகைப்படங்களைப் புலிகள் பயன்படுத்துகின்றனர்.**

1997இல் புல்மோட்டை 10ம் கட்டைப்பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்காப் படைகள் மீதான பதுங்கித் தாக்குதலின்போது



(7ம் பக்கத்தொடர்ச்சி)
சிலம்பரசனின் வழிநடத்தலில் விடப்படுகின்றது. இதுவரை அவன் எதிர்கொண்ட சமர்களுடன் ஒப்பிடும்போது இது சற்று வித்தியாசமானதாயிருந்தது. இதுவரை கடலிலிருந்து கொண்டு கடலிற்குள் நிற்கும் எதிரியுடன்தான் சமர்புரிந்தார்கள். ஆனால் இங்கே கடலில்நின்றபடி தரையில் இருக்கும் எதிரிக்குத் தாக்கும் பணி. கடற்புலிகள் இப்படியான சமரைச் சந்திப்பது இதுவே முதற்தடவை.

சமர்க்களம் தரைப்புலிகளால் தொடக்கிவைக்கப்படுகின்றது. கட்டைக்காடு முன்னரங்க நிலைகளை உடைத்து உள்நுழையும் முயற்சியில் தரைப்புலிகள் ஈடுபட்டனர். சிலம்பரசன் தனது படகுடன் ஏனைய கடற்புலிப்படகுகள் சிலவற்றையும் அழைத்துக்கொண்டு கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கரையோரமாக உள்ள காவலரண்களை துடைத்தழிக்கும் நடவடிக்கையில் இறங்குகிறான். தரையில் நிலையாக மூடி அடைக்கப்பட்ட காப்பரணுக்குள் நின்றபடி துப்பாக்கிச் சன்னங்களையும் குண்டு மழையினையும் பொழியும் எதிரிமீது கடலில் நின்றபடி தாக்குவதென்பது இலகுவானதாயிருக்கவில்லை. கடற்புலிகளின் படகுகள் கடலில் நின்ற படி தாக்குதல் நடாத்தத் தொடங்கியதும் சிங்களப் படையின் போராப்படகுகள் கடற்புலிகளின் படகுகளைத் தாக்கத் தொடங்கின. அன்றைய கடற்சூழ்நிலையும் கடற்புலிகளின் சிறிய சண்டைப்படகுகளுக்கு உகந்ததாக இருக்கவில்லை. கடற்காற்று பலமாக வீசிக்கொண்டிருந்ததால் இலக்குகளை குறிவைத்து தாக்குவது சிரமமாகவிருந்தது. ஆனாலும் அன்றைய சமர்க்களத்தில் அது முக்கியமான பணியாகவிருந்தமையினால் அவன் தொடர்ந்தும் எதிரியின் இருப்பிடங்கள் மீது கடலில் நின்றபடி தாக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பணியின் ஒரு கட்டத்தில் சிங்கள விமானப்படையின் உலங்குவானூர்தித் தாக்குதலில் அவன் தலையில் காயப்படும்வரை எதிரியின் இலக்குகளை அழித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமரின் முடிவில் அந்த ஊர்கள் எங்களது கட்டுப்பாட்டிற்குள் வந்திருந்தன.

இப்படியான அவனின் வெற்றிகளுக்கு காரணமாயிருந்தவையெல்லாம் அவனின் திறமைகளே. எந்தச்சமர்க்களத்திலும் எந்த இறுக்கமான கட்டத்திலும் நிதானித்து பதட்டமில்லாமல் முடிவெடுத்துச் செயற்படுவது அவனது வெற்றிகளுக்கு முதற்காரணமாயிருந்தன. சண்டைக்காகவோ அல்லது விநியோகப்பணிக்காகவோ அவன் செல்லும் போது ஆண் போராளிகளுக்குச் சமமாக பெண்போராளிகளையும் அழைத்துக்கொண்டு செல்வான். இன்று கடற்புலிகளில் கட்டளை அதிகாரிகளாகச் செயற்படும் ஆண், பெண் போராளிகளை வளர்த்தெடுத்ததில் கணிசமான பங்கு சிலம்பரசனுக்கே உரியது.

பெண்போராளிகளும் கடலில் சாதிக்கமுடியும் என்பதை கடலில் நிரூபித்த கடற்புலிப்பெண் போராளிகளின் வளர்ச்சிக்கு சிலம்பரசன் கொடுத்த ஊக்குவிப்பும், சந்தர்ப்பமும் முக்கியமானது.

ஒவ்வொரு தாக்குதலின் முடிவிலும் அல்லது ஒவ்வொரு விநியோகப் பணியின் முடிவிலும் தன்னுடன் செயற்பட்ட போராளிகளை ஓய்வாயிருக்கும் நேரங்களில் அழைத்து அந்தப் பணியில் அவர்களின் செயற்பாட்டில் இருந்த சரியான, தவறான செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டி அடுத்த கட்டத்தில் அதை எப்படி முன்னெடுக்கலாம் என்பதை அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பான்.

அவன் சாள்ஸ் படையணியின்



பொறுப்பாளனாக இருந்த காலங்களிலெல்லாம் தான் ஒருகட்டளை அதிகாரி என்ற நிலையில் மட்டுமே நின்று கொள்ளாது, ஒரு கடற்புலிப்போராளியின் பல்வேறு சுமையான பணிகளுக்குள் தானும் முகம்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி விளைவுகளை பயன்மிக்கதாய் ஆக்கும் திறமை

**" எந்தச்சமர்க்களத்திலும் எந்த இறுக்கமான கட்டத்திலும் நிதானித்து பதட்டமில்லாமல் முடிவெடுத்துச் செயற்படுவது அவனது வெற்றிகளுக்கு முதற்காரணமாயிருந்தன. "**

அவனிடமிருந்தது.

ஒரு போராட்ட அமைப்பாகவிருந்து வளர்ந்து கொண்டிருக்கும் படை என்கின்றரீதியில் வீணாக எந்தவொரு வளத்தையும் இழந்துவிடக்கூடாதென்பதில் அவன் அக்கறையாய் இருந்தான் என்பதை அவன் கடற்சமர்க்களங்களில் எடுக்கும் முடிவுகள் காட்டிநின்றன.

ஒருமுறை வன்னித்தளம் நோக்கி போராளிகளை ஏற்றி இறக்கும் பணி கடற்புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அந்தப் பணியில் சிலம்பரசனும் சென்றிருந்தான். போராளிகளை இடம்மாற்றும் இந்தச் செயற்பாட்டை எதிரி அறிந்து கொண்டதால் எதிரி கடலில் வைத்து சண்டை புரிவதற்குத்தயாராகியிருந்தான். போராளிகளை ஏற்றிய படகுகள் பயணிக்க அவற்றிற்குக் காவலாய் கடற்புலிகளின் சண்டைப்படகுகளும் வந்துகொண்டிருந்தன. எதிர்பார்த்திருந்த கடற்படையின் தாக்கும் கலங்கள் போராளிகளின் படகுகள் மீது குறிவைக்கின்றன. தாங்கள் கொண்டு செல்லும்போராளிகளுக்கு எதுவும் நடக்கக்கூடாதென்பதற்காக கடற்புலிகளின் சண்டைப்படகுகள் முன்சென்று எதிரியை எதிர்கொண்டன. கடற்புலிகளின் படகுகளைச் செல்லவிடாது எதிரிதடுத்துச் சண்டையை இடைவிடாது தொடர்ந்தவண்ணமிருந்தான்.

சண்டையின் ஒரு கட்டத்தில் கடற்புலிகளின் சண்டைப்படகு தாக்குதலுக்குள்ளாகின்றது. அதிலிருந்த போராளிகள் சிலர் வீரச்சாவடைகின்றனர். படகின் இயந்திரங்கள் செயலிழக்கின்றன. படகின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்ட அவனுக்கு படகை இயக்க முடியாவிட்டால் அதனை அழித்துவிட்டு வரும்படி கட்டளை கிடைக்கின்றது. ஆனாலும் சிலம்பரசன் அந்தப்படகை இழக்க விரும்பவில்லை. ஏனெனில் அந்தப்படகை கடற்புலிகளின் தாக்குதற் கலமாக மாற்றுவதற்காகப் பட்ட கஸ்டங்களைத்தாங்கியதில் அவனுக்கும் பங்கிருந்தது. அதனை விட அவன் படகின்கட்டளை அதிகாரியாக மட்டுமல்லாமல் படகின் எந்தநிலையினையும் கையாளக்கூடிய திறமையிருந்ததால், அவன் அந்தப் படகின் இயங்கமறுத்த இயந்திரங்களை இயங்கும் நிலைக்கு கொண்டுவர கடும்முயற்சி செய்தான். அவன் முயற்சியின் பலனால் அன்றைய நாளில் இழக்கப்பட வேண்டிய அந்தப்படகு இழக்கப்படாமல் இருந்தது.

இப்படித்தான் சின்னச்சின்ன விடயங்களிலெல்லாம் முன்மாதிரியாகச் செயற்பட்டுப் போராளிகளுக்கு கடலின் நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்தான். ஒரு படகில் பல்வேறுபட்ட வேலைகளை ஒவ்வொரு நிலையிலும் திறம்படச் செய்வார்கள். ஒருகட்டளை அதிகாரியாக, படகோட்டுபவனாக, தொலைத்தொடர்பாளனாக, இயந்திரத்துப்பாக்கிச் சுட்டாளனாக எனவிரியும் பணிகளில் எல்லாப்போராளிகளும் எல்லா நிலைகளுக்கும் உரியவர்களாக வளர்க்கப்படவேண்டும் என்பதில் அவன் கவனமெடுத்துச் செயற்பட்டான். அதற்கேற்றாற்போல தன்கீழ் பணிபுரியும் போராளிகளுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தான். ஏனெனில் சண்டைக்களங்களில் படகின் ஏதாவது ஒரு நிலையில் நிற்கும் போராளி செயலிழந்துவிட்டால் அதை உடன் நிவர்த்தி செய்யக்கூடியவாறு இருக்க வேண்டும் என்பதை அவன் அனுபவங்களினூடாக உணர்ந்திருந்தான்.

இந்த அனுபவங்களோடு தான் வரலாற்றுச்சிறப்புமிக்க குடாரப்பு தரையிறக்கப் படைநடவடிக்கையின் ஆரம்பத்தில் ஒரு படகுத்தொகுதியின் கட்டளை அதிகாரியாகச் செயற்பட்டான். விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் சவாலாக ஏற்றுச் செய்த இந்தப்பணியில் சிலம்பரசனின் பங்குமிருந்தது. கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப்பகுதியைக் கைப்பற்றும் சமரில் தலையில் விழுப்புண்பட்டு அதன் வேதனைகள் முழுமையாக ஆறுவதற்கு முன் இந்தச் சண்டையிலும் அவன் கலந்துகொண்டான். இதனால் சண்டையின் ஒரு கட்டத்தில் அவன் கடலில் இருந்து கரைக்கு அழைக்கப்பட்டான். கரையில் நின்றபடி கடற்புலிகளின் சிறப்புத்தளபதியின் கட்டளைக்கேற்றபடி போராளிகளையும், தரையிறங்கிய போராளிகட்குரிய ஆயுத, உணவு விநியோகங்களையும் ஒழுங்குபடுத்தி நகர்த்திக்கொண்டிருந்தான்.

இந்தச் சண்டைகள் முடிந்து ஊர்கள் பல எங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்ததும் சிலம்பரசனுக்கு கடற்புலிகளின் அரசியற்பணி மீண்டும் வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட ஊர்களை மீண்டும் புதுப்பித்து வளமாக்குவதற்காக அவன் உழைத்துக்கொண்டிருந்தான். அதிலும் வடமராட்சி கிழக்கில் ஒரு மாவீரர் துயிலும் இல்லமொன்றினை நிறுவவேண்டும் என்ற விருப்போடு தமிழீழ மாவீரர் பணிமனையுடன் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளையும் செய்துவந்தான்.

மீண்டும் அவன் தன் கடமையைப்பொறுப்பேற்கும் காலம் வந்தது. எந்த வேளையிலும் எந்த வேலையையும் செய்யக்கூடிய ஆற்றலும் திறமையும் அறிவும் மிக்க அந்தவீரன் அந்தப்பணியை பொறுப்பெடுத்துக்கொண்டான். ஒரு கப்பலின் கப்டனாக அவன் கடலில் பயணித்தபோது இந்தச் சமாதான காலத்தின் விலையாய் அவனையும் அவன் தோழர்கள் பத்துப்பேரையும் இழந்துபோனோம்.

அவன் ஆசைப்பட்டபடி அவனது ஊரில் ஒரு துயிலுமில்லம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் முதற்கல்லாய் அவன்தான் வருவானென்று நாங்கள் கனவிலும் எண்ணவில்லை.

-புரட்சிமாறன்-

ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

யாழ்ப்பாணத்தை விட்டு எமது விடுதலை அமைப்பின் போராளிகள் வன்னிக்கு வந்த இரண்டாவது ஆண்டில், ஆனையிறவு-பரந்தன் கூடுகளில் தாக்குதலின்பின், 2ம்லெப்.மாலதி படையணியின் கொம்பனிகளிடையே ஒரு மாபெரும் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. போட்டியின் முடிவான பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் விளையாட்டு வீராங்கனைகளுக்கும், உண்மைவெற்றி (1996) எதிர்நடவடிக்கையில் கிளிநொச்சியில் சிறீலங்கா இராணுவத்தினரின் T85 ரக ராங்கியொன்றைத் தகர்த்த கப்டன் துவாரகிக்கும் தன் கைகளால் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார். நிகழ்வின் மறுநாள் தனது நுண்ணிய தொலைநோக்குச் சிந்தனைகளைப் போராளிகளோடு பகிர்ந்துகொண்டார்.

''நெருக்கடியான இந்தக் காலகட்டத்தில் ஆயிரம் பேரையும்

# திசைகளெல்லாம்

மலைமகள்



ஒன்றாகச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.'' என்று தனது உரையை ஆரம்பித்த தலைவர் அவர்கள், இன்னுமொரு இடைமறாப் பெருஞ்சமரொன்றை நாம் சந்திக்கவேண்டி வரும் என்றும், அதற்கு எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும் சிறீலங்காப் படைத்தரப்பால் (வெற்றிநிச்சயம் - ஜெயசிக்குறு - என்ற பெயரில்) மேற்கொள்ளப்படவிருந்த பாரிய திட்டம்(?) சம்பந்தப்பட்ட தனது தார்மீகக் கருத்துக்களை அவர்களிடம் வலியுறுத்தினார்.

அவர் சொன்னது போலவே நாம் ஒன்றரை வருடகாலம் ஓய்வேயில்லாத இடைமறாச் சமரில் ஈடுபட்டோம். ஆசியாவின் வரலாற்றில் முதலாவது நீண்ட இராணுவ நடவடிக்கையாகவும் (1997.05.13 - 1998.12.04) பேசப்பட்ட வெற்றி நிச்சயம் படைநடவடிக்கை எமது தலைவர் அவர்களை ஒப்பற்ற படைத்தளபதியாகவும் மிகச் சிறந்த யுத்த தந்திரியாகவும் மறுபடியும் ஒரு முறை உலகுக்கு உணர்த்திவிட்டிருந்தது. அந்த மாபெரும் எதிர்நடவடிக்கைக்கான தயார்ப்படுத்தல்கள் அவரின் பணிப்பில் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன. அணிகளுக்குத் தாக்குதலணிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகள் வேவுப்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பதுங்கிச் சூட்டாளர்கள் தீவிர பயிற்சியில் இறங்கினார்கள். தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வீரர்களையும், மன்னார் பகுதியில் அப்போதிருந்த படையணிகளின் RPG போராளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் உள்ளடக்கியதான லெப். கேணல் விக்ரர் கவசஎதிர்ப்புப் படையணி தோற்றம் பெற்றுவளர்ந்திருந்தது.

***

காடுகள், மேடுகள், ஆறுகள், அருவிகள் கடந்து அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். எங்கெங்கோ எல்லாம் பரந்திருக்கின்ற சிறீலங்கா இராணுவ பலத்தை ஒரு முனைக்கு இழுத்துவந்து அழிப்பதற்காகத் தலைவர் அவர்களின் அழைப்பையேற்று அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். வந்துகொண்டிருக்கும் வழியிலேயே சிறீலங்கா இராணுவ காவலரண்களோடும், சிறப்பு அணிகளோடும் சண்டையிட்டபடி பெரும் சண்டையொன்றை எதிர்கொள்வதற்காக அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

***

''இப்படியானதொரு சண்டை வவுனியாவிலிருந்து ஆரம்பமாகப் போவதாக வருட ஆரம்பத்திலேயே என்னிடம் குறிப்பிட்ட தலைவர் அவர்கள், வேவு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படி கூறினார். வவுனியாவிலிருந்து வருகின்ற இராணுவத்தை இடைமறித்துத் தாக்கவேண்டிய சில இடங்களை அவர் குறிப்பிட்டார். அவர் எனக்குக் கூறியதன்படி இராணுவத்துக்கும் எங்களுக்குமான உண்மையான சண்டை புளியங்குளத்திலேதான் ஆரம்பமாகும். ஆனால் புளியங்குளம் வரை இராணுவம் சாதாரணமாக வரவும் கூடாது. அவர்களது வருகையை நாம் தடுக்கவும் கூடாது. இழப்புகளை ஏற்படுத்தியபடியே அவர்களை நாம் வரவிடவேண்டும். அவர்களுக்கான பொறி புளியங்குளம்தான் என்பதாகும். எனவே அவர் குறிப்பிட்டபடி வேவு நடவடிக்கைகளை நான் தொடங்கினேன்.''

என்கின்றார் அந்நாட்களில் வன்னிப்பகுதியின் கட்டளைத் தளபதியும், தற்போது வடபோர்முனைக் கட்டளைத் தளபதியுமான கேணல் தீபன் அவர்கள்.

மாபெரும் பாதைத் திறப்பு(?) சமருக்காக சிறீலங்கா இராணுவ இயந்திரம் எங்கெங்கோ எல்லாம் பரவியிருந்த தனது படையினரை வவுனியாவில் குவிந்துக்கொண்டிருந்தது.

நம்மவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். தமிழீழ விடுதலைப்போரின் வேரைக் காத்த நிலம்தானே. வேர்நிலத்தில் காவலைப்போரின் வேரை அறுப்பதற்காக அவர்கள் வேகமுடன் வந்துகொண்டிருந்தார்கள்.

வந்துவிட்டார்கள். ஆனால் லெப். கேணல் மதனா வரவில்லை. மதனாவின் தோழியர் வந்திருந்தனர். தாங்க முடியவில்லையவள் வாசத்தைக் காவிவரும் தென்றல் போல தென் தமிழீழத்தின் வாசம் கலந்த சென்ற வருடம்தான் மதனா இங்கே வந்துபோயிருந்தார். திரும்பிப்போன சில நாட்களிலேயே வவுனியா படைத்தளம் மீதான தாக்குதலில் அவர்

மண்ணுக்கு விதையானபோது இங்கிருந்த அவருக்கு வீரவணக்கம் செலுத்தியோர் பலர்.

இங்குவந்து நின்றபோது எமது விடுதலை அமைப்பின், மகளிர் படையணிகள், பிரிவுகளின் கட்டுமானத்தைப் பார்த்த மதனா, திரும்பிப்போய் தான் செய்யவேண்டிய வேலைகளை, கனவைப் பற்றி எங்களோடு பகிர்ந்துகொண்டவற்றை அவர்களுக்கு நாங்கள் சொல்ல, எங்களைப்பற்றி பெருமையோடு மதனா சொன்னவற்றை எங்களுக்கு அவர்கள் சொல்ல, உணர்வுகள் கலந்தன, உறவு பிணைந்தது.

***

வவுனியாவிலிருந்து சிறீலங்கா இராணுவ அணிகள் மன்னார்வீதியில் 'ஈட்டிய' என்ற பெயரில் ஒரு வெள்ளோட்ட நகர்வைச் செய்தபோது, எமது விடுதலை அமைப்பு அவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை.

''வெற்றி நிச்சயம் படை நகர்வின் ஆரம்ப நாட்கள் அவை. பரந்துபட்ட நிலப்பரப்பைக் கண்காணிப்பில் வைத்திருப்பதற்கு எங்களிடம் போதிய ஆளணியில்லை. எனவே சம்பளங்குளம், ஓதியமலை, உடங்கா, தண்ணீர்முறிப்புப் பகுதிகளில் மாலதி படையணி சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து நின்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

உடங்காப் பகுதியிலே இரண்டு தடவைகள் இராணுவத்தினரின் வேவு அணிகள் தாக்கியிருந்ததால், படையினர் முன்னேறப்போகின்றார்கள் என்று உறுதியாகத் தெரிந்தது. அன்று உடங்கா, ஓதியமலை, தண்ணீர்முறிப்புப் பகுதிகளால் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் மாலதி படையணிக்குமிடையே சண்டை ஆரம்பமாகியது. சிறு வேவு அணிகளாகப் பிரிந்து, படைத்தரப்பினர் முன்னேறும் இடங்களிலெல்லாம் அடியைக் கொடுத்ததுடன், அவர்களின் அடுத்த நகர்வை அறிந்து வியம் வியமாக அந்தக் காட்டுப்பகுதியிலே பெரியதொரு அணி நின்றதுபோன்ற தோற்றத்தை உருவாக்கிச் சண்டையிட்டனர்.''

என்று சொல்கிறார் 'வெற்றிநிச்சயம்' படைநடவடிக்கை தொடங்கிய முதல்நாளன்று 1997.05.13இல் நெடுங்கேணியில் எதிர்நடவடிக்கையைத் தொடக்கிவைத்த கேணல் பால்ராஜ் அவர்கள்.

***

''படை நகர்வு யாழ்.நெடுஞ்சாலையில் ஆரம்பித்து வந்தபோது வழியில் அவர்களை இடைமறித்து சிறுத்தைப்படையணியினர் சிதைவையும் இழப்பையும் ஏற்படுத்துகின்ற தொந்தரவுத் தாக்குதல்களை செய்து கொண்டிருந்தனர். சண்டை விளக்குவைத்தகுளத்தை நெருங்கியதும், புளியங்குளத்தைத் தளமாக்கி நிலைகொள்ளுமாறு தலைவர் அவர்கள் என்னைப்பணித்தார்.

லெப். சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியினரை சேர்ந்து அமைக்கப்பட்ட அந்தத்தளத்திலே சிறுத்தைப் படையணி, குட்டிசிறி - பாண்டியன் படையணி, அரசியல்துறை தாக்குதல் மகளிரணி, லெப். கேணல் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி என்பன காவத்துக்குக் காவல் பணியாற்றின



........... மாதங்கள் புளியங்குளத் தளத்தை நாம் தக்கவைத்திருந்தோம். சண்டை புளியங்குளத்தை நெருங்கியதும் நான் தொடர்ந்து தளத்திலுள்ளேயே தங்கிவிட்டதால், தலைவர் அவர்களைச் சந்திக்கவென வெளியே போய்வருவதில்லை. எனினும் தேவையான காலங்களில் பொருத்தமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அவர் சொல்லியனுப்பிக்கொண்டிருந்தார்.''

என்றார் வெற்றிநிச்சயம் எதிர் நடவடிக்கையை யாழ் நெடுஞ்சாலையில் ஆரம்ப காலத்தில் வழிநடத்தியவரான கேணல் தீபன் அவர்கள்.

***

வந்த விருந்தினர்களை விருந்தாக்க வன்னியின் காடுகள் தயாராகின. குறுமரப்புதரும் வீரரும் எல்லாம் கொந்தளிக்கொந்தளிப்பாகக் கிளைகளில் தொங்க, மீண்டும் நகரிலிருந்து வந்திருந்த புலவர்களுக்கு அந்த அனுபவம் வந்தது. பயிற்சிகளையும், புதிய காட்டைப் பழக்கப்படுத்துவதையும் இடைநிறுத்திய கப்டன் ஜெயந்தன் படையணி தாண்டிக்குளம் மீதான ஊடறுப்பு நடவடிக்கைக்குப் புறப்பட்டது.

ஆட்லறித் தளம் அமைந்திருந்த கரும்பலகைகளும் தாக்கப்பட, தாண்டிக்குளம் படைத்தளம் லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, 2ம்லெப்.மாலதி படையணி, சிறுத்தைப் படையணி ஆகியோரால் தாக்கப்பட்ட படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தி அணிகள் யாவும் பணிமுடித்து வெளியேறின.

***

''புளியங்குளச் சந்திப் பகுதியில் உள்ள தளத்தை லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பாதுகாக்கும். சந்திக்கருகே இராணுவம் நிலைகொள்ளுமானால், தளத்திலுள் நாம் நடமாடுவது கடினம். நீண்டகாலம் புளியங்குளச் சந்தியை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டுமானால், நீங்கள் அவர்களுக்கு வெளிப்புறமாகப் பாதுகாப்புத் திரையொன்றை அமைத்துநின்று சண்டையிட்டு, இராணுவத்தினரைத் தடுத்துத் தாமதப்படுத்தி இழப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருங்கள்.''

என்றார் தலைவர் அவர்கள் கேணல் யாழினியிடம்.

நெடுங்கேணி - புளியங்குளம் வீதியில் வெற்றிநிச்சயம் நகர்வைத் தடுத்து நிறுத்தியவாறும், தாண்டிக்குளம்மீதான ஊடறுப்புத் தாக்குதலில் பங்கேற்றுவிட்டும் நின்ற அவரது கொம்பனிகள் உடனேயே புளியங்குளம் போயின.

1997.06.23 அன்று புளியங்குளத்தை நோக்கிப் பாரிய எடுப்பிலான படை நகர்வை அதிகாலையிலும் பிற்பகலிலுமாக ஒரு நாளிலேயே இரு தடவைகள் படையினர் செய்தபோது, புளியங்குளத்தளத்தின் வெளிப்பாதுகாப்பு நிலைகளில் நின்ற பெண்போராளிகளுடனேயே மோதநேரிட்டது.

சண்டை மிகக் கடுமையாக நடந்தது. குறிப்பிட்ட பகுதியை செறிவான குண்டுகளாலும் எரிகணை வீச்சுகளாலும் இராணுவம் தாக்கிக்கொண்டிருந்தது. காப்பரண்கள் தாங்கி வீச்சுப் படைக்கலங்களும் குழிகளை அமைத்த போராளிகள், தொடர்ந்தும் போரிட்டனர். அந்தப்பகுதிக்குக் காயமும் வீரச்சாவும் அதிகரிக்க, அருகருகாகக் காப்பரண்களில் நின்றவர்கள் அடி அடியென்று அடித்த இணைப்பை ஏற்படுத்தினார்கள்.

காலையில் தொடங்கி மதியம் ஓய்ந்த சண்டை பிற்பகலில் மறுபடி தொடங்கியபோது இன்னமும் கடுமையாக இருந்தது. படையினரின் ராங்கிகள் செறிவாகத் தாக்கியபடி முன்னகர முயல, படையணியின் கீழ் யானைகளோ எமது காப்பரண்களுக்கு முன்னுமாகப் போய் நின்று தாக்க, 120மி.மீ எறிகணைகள் சொன்னபடி விழ, முன்னேற முயன்ற இராணுவம் ஒரு நாளிலேயே இரண்டாவது தடவையாகவும் பலத்தசேதங்களுடன் பின்வாங்கியது.

''புளியங்குளத்தை நெருங்க முனையும் இராணுவத்தினரைத் தடுத்து தாமதப்படுத்தி இழப்புகளை ஏற்படுத்தி சோர்வடையச் செய்ய வேண்டும் என்று தலைவர் அவர்கள் சொன்னதை நாம் செய்தோம். இரண்டாவது முறை (1997.08.20) படையினர் முன்னேறியபோதும் அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தினோம்''

என்றார் தளத்தின் வெளிப்பாதுகாப்பு நடவடிக்கையைப் பொறுப்பேற்றிருந்த கேணல் யாழினி அவர்கள்.

இந்நிலையில், புளியங்குளம் மீதான படையினரின் முதலாவது முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்ட மறுநாளே (1997.06.24) பெரியமடுத் தளத்தை எமதணிகள் கூடுருவித் தாக்கின.

2ம் லெப்.மாலதி படையணியும், கப்டன் ஜெயந்தன் படையணியுமாக இராணுவக் காவலரண்களை உடைத்து உட்புகுந்து பெரிய அழிவை ஏற்படுத்தின. புளியங்குளத்திலிருந்து பெரியமடுவை நோக்கிய திசையில், அழிப்பு நடவடிக்கையை இவர்கள் முடிக்கும்போதும் புலியில் கட்டளைத் தளபதி நிலையம் அவர்களுடன் கப்டன் அன்பரசி படையணி வேறொரு வழியால் வந்து நின்றது. பணி முடிந்ததும் எல்லோருமே வெளியேறி அவர்கள் இடங்களுக்குப் போய்விட்டிருந்தோம்.

***

ஒன்றரை வருடங்கள் நீண்ட தொடர்ந்த எதிர்ச்சமரில் எங்காவது திசையிலுமுள்ள விடுதலைப்புலிகளும் களமிறங்கிப் போரிட்டோம். தலைநகரத்துப் படையணி, சிறுத்தை மகளிரணி, லெப்டினன் கேணல் படையணி, கப்டன் அன்பரசி படையணி, தலைவரின் எண்ணத்தில் எதிர்நடவடிக்கைக்கென்று தோற்றம் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி, புலனாய்வுத்துறைத் தாக்குதலணி ______ யார் வரவில்லை களமிறங்க

பல்வேறு முனைகளில் நாம் தேடிப் போய்த் தாக்கவேண்டிய படைய இலக்குகளையெல்லாம் 'வன்னி' என்ற ஒரு முனைக்கு அழைத்து வந்து அழிக்கும் தலைவர் அவர்களின் மூலோபாயத்துக்குப் பெரும் பலம் சேர்த்தோம், பகையை அழித்தோம்.

எதிர் நடவடிக்கை நீண்டு தொடர்ந்ததால் முதலில் தென் தமிழீழத்தின் திசைகள் வெளித்தன. எதிர் நடவடிக்கையின் முடிவில் வடதமிழீழத்தின் திசைகளும் வெளித்தன.

***

தேர்தல்...
இதுவும் ஒரு போர்க்களம்
இன்றுமொரு பொங்குதமிழ்
வாக்குகளால் எங்கள்
வல்லமை காட்டிய
வரலாறு...

தேர்த்திருவிழாவெனத்
திரண்டனர் தமிழர்
வாக்களிப்பு போட்டனர்...
வழிகாட்டியெம்மை
வாழ்த்திட வைத்தவர்
பாராளுமன்றத்தின்
பூமித்திசையெங்கும்
முட்டி - முரசறைந்தனர்
பிரபாகரன் தானெங்கள்
முதல்வனென முழங்கினர்
வரலாற்றைத்திருப்பினர்...
விடுதலைக்கு வலுசேர்க்கும்
வழியொன்றைத் திறந்தனர்
எதிலும் தோற்காது
புலிப்படை...
என்பதைப் புகட்டினர்

ஓயாத அலைகளாய்ச்
சுழன்று - தமிழன்
வீழாத திடத்தினைக்
கொடுத்த - திசையில்
மாறாத மறவரைப்
பணிந்து நிமிர்ந்தவர்
எல்லைப் படையெனக்
களத்தில் நடந்தவர்
பொங்குதமிழெனப்
புயலாய் நிமிர்ந்தவர்
பள்ளிடி இட்டொரு
புதுயுகம் படைத்தனர்

நடுங்கிய கரங்களும்
நடக்கமுடியாக் கால்களும்
படுக்கையில் கிடந்தவரும்
எழுந்துவந்து
எழுச்சியூட்டினர்
சாவணைக்கும் வயதினிலும்
விடுதலைக்கோர் விழுதெறிந்த
மகிழ்வினில் நிறைந்தனர்



புலிகள் புறம்பெனப்
புலம்புதல் பிழையெனப்
பிழையினைப் போட்டே
புரிந்திட வைத்தனர்

எங்கள் பிள்ளைகள்
கொண்ட
கொள்கையே - எங்கள்
கொள்கையும் என்று
மந்திரம் சொல்லி
எழுந்தனர்


வீட்டு வெற்றியே
எங்கள் வீட்டைத்தரும்
வீட்டு வெற்றியே
எமக்கு விடுதலை தரும்
விளங்கிக் கொண்டவர்
விளக்கம் கொடுத்தனர்

படை நடத்திப் பெற்ற
வெற்றிப் பெரு உயர்வில்
மடை திறந்து வந்த
அமைதிப்பயிர் விளைவில்
அறுவடைக்காய் ஓர்
ஆணை கொடுத்தனர்

...யாதது திசைகளெங்கும்
மலர்கின்ற பூக்களிற்கு
...ன்றே - வேறில்லை
...தமும் சுதந்திரத்தின்
வி... கொடுமை மறப்பதில்லை
என...த்தேர் முடிவெடுத்தனர்
...ரணியில் கொடிபிடித்தனர்

... ஆணையை
ம...தில் ஏற்றால்
...ந்தை தாயகம்
கொண்ட வீட்டினில்
தமிழர் தாயகம்
மீண்டும் வென்றது

எவ்வழி போயினும்
எங்களின் வேண்டுகை விடுதலை
என்பதை இன்னொரு முறையும்
நாங்கள்
எடுத்தியம்பி எழுகின்றோம்



வீட்டில் இருக்கும் பொழுதே கடற்றொழில் செய்து வீட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்திய கடும் உழைப்பாளியான அந்த ஆடை உருவத்தைச் சூழல் போராளியாக்கியது. அதுவும் கடற்புலிப் போராளியாக...

வீடு சிறிய வட்டம். படையணி, போராட்டம் என்பவை விரியும் வட்டங்கள். இப்போது அந்த உருவத்தில் பொறுப்புணர்ச்சி இன்னும் கூடியது.

படகுகளுக்குக் கயிறு போட வேண்டுமென்றால் எல்லோரும் தேடுவது அந்த உருவத்தைத்தான். அனுபவ ரீதியான எந்த விடயத்திலும் அந்த உறுதியான உருவத்திடம் சரியான தெளிவிருக்கும். ஆகவே சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கும் தேடுவார்கள்.

பெண் போராளிகளுடன் அந்த உயரமான உருவம் நடந்து கொள்ளும் முறை வித்தியாசமானது. தான் ஒரு பெரிய கிழவன் போலவும் அவர்கள் முன்பள்ளிப் பிள்ளைகள் எனவும் எண்ணுவதுண்டு. எந்தப் பெண் போராளியையும் அந்த உருவம் விளிக்கும் சொல் 'பிள்ளை' என்பதாகத்தானிருக்கும்.

தனது படகிற்குரியவர்களுக்குரிய உணவைத்தானே கொடுத்து, இறுதியாய்த் தான் சாப்பிட்டு அழைத்துச் செல்லும் அன்னையின் பக்குவம் கொண்டது அந்த உருவம்.

# அறிய முடியாத ஆழங்கள்

தண்ணீர் முதற்கொண்டு ஒரு படகிற்கு அவசியமான அனைத்தையும் கரையில் வைத்தே பார்த்து எடுத்து வைத்துவிடும் அவதானம். கடலிற்கும் போய் நின்று கொண்டு பேசும், பதட்டப்படும் இயல்புகள் இல்லாத ஒரு அன்பான ஆசான் அந்த உருவம்.

அந்த உருவத்துடன் படகில் போகின்றவர்கள் சிரமப்படவே தேவையில்லை. தானே முன்னின்று மற்றவர்களைச் சிரமப்படவிடாமல் எல்லாவற்றையும் செய்து முடித்து விடுகின்ற பொறுப்புணர்ச்சி நிறைந்த தந்தை அந்த உருவம்.

குடும்பம் என்றால் அதற்குள் ஆயிரம் பிரச்சினைகள். சின்னச் சின்னச் சிக்கல்கள் எல்லாம் வரும். அது இயல்பு. படையணி என்பது பெரிய குடும்பம். அந்தப் பெரிய குடும்பத்திற்குள் எவருடனும் கோபப்படாத ஒரே ஒரு ஆள் அந்த ஆடை உருவம் மட்டுமே.

ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாக இருந்து அதிகம் சாதித்துக் கொண்டிருந்தது அந்த உருவம்.

எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் ஒருவரையும் நம்பிக்கை இழக்க விடாமல் உற்சாகப்படுத்திக் கரை சேர்த்துவிடும் வல்லமை அந்த உருவத்திடம் இருந்தது.

வழமையான சண்டையும், இழப்புக்களுமாய் ஓடிக்கொண்டிருந்த நாட்களில் ஒருநாள்...

அதுதான் அந்த உருவத்தை நாங்கள் கண்ணால் கண்ட இறுதி நாள்.

குறிப்பிட்ட மைல்களுக்கப்பால் இயற்கையின் சீற்றத்தால் இரண்டு படகுகள் செயலிழந்து நிற்பதாய்ச் செய்தி வந்தது.

அவசரமாய் இறக்கப்பட்ட கரும்புலி வண்டியில் தானும் ஒரு 50கலிபர் சூட்டாளராய் ஏறியது அந்த உருவம். அது தனக்குரிய படகல்ல என்ற பொழுதும் இரண்டு படகுகள் இறுதி நின்று எதிரிடம் பிடிபடப் போகின்றனவே என்ற தவிப்பு. கரையில் நிற்க முடியாத ஓர்மத்தில் ஒரு சாதாரண நிலையிலாவது படகில் ஏறிப்போய்விட வேண்டும் என்ற துடிப்பு.

அந்த உருவம் ஒரு சிறந்த படகோட்டி என்பதனால் மற்றவர்கள் அந்த இடத்தை விட்டுக் கொடுக்க ஒரு சிறு பொழுதிற்குள் கரும்புலிப்படகு இயங்காமல் நின்ற படகுகளை அடைந்தது.

அந்த உருவம் வந்தால் தப்பலாம் என்று அனைவருக்கும் தெரியும். முதலில் ஒரு படகில் நின்றவர்களுக்கு உணவைக் கொடுத்துவிட்டு கரும்புலிப்படகு மற்றப் படகை அண்மிக்கவும் எதிரியின் படகு கண்ணுக்குத் தெரியவும் சரியாக இருந்தது.

கரும்புலிப்படகு மற்ற இரு படகுகளையும் பாதுகாப்பதற்காகச் சண்டையிடத் தொடங்கியது. எதிரிகளிடமிருந்து சரமாரியான சூடுகள். கரும்புலிப்படகு மட்டும் ஓடிக்கொண்டிருக்க மற்றவை இரண்டும் நகர முடியாமல் எதிரிக்கு அசையாத இலக்குகளாக நின்று கொண்டிருந்தன.

ஒரு கட்டத்தில் படகை ஓடிக்கொண்டிருந்த அந்த உருவம் பொறுமை இழந்தது 50 கலிபர் இயந்திரத்துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்த போராளியிடம்,

"நீ ஓடு பிள்ளை. நான் அடிக்கிறன்"

என்று கூறி இயந்திரத் துப்பாக்கியை வாங்கிக் கொண்டது.

அந்த உருவத்திற்குக் கடவுள் நம்பிக்கை அதிகம். துப்பாக்கியை இயக்கு முன் தனது கழுத்திலிருந்த சிலுவையை எடுத்துக் கொஞ்சி விட்டுச் சுடத் தொடங்கியது.

எதிரியின் படகு அடித்து நொறுக்கப்படும் என்று எல்லோரும் நம்பினார்கள். ஆனால் தன்னாலும் அந்த அன்பான உருவத்தைக் காப்பாற்ற முடியாது என்பது அந்தச் சிலுவைக்குத் தெரியும்.

எதிரியின் துல்லியமான சூடு. முதலில் சிதறிய சிலுவையின் துண்டுகளும் தொடர்ந்து குருதியும் பக்கத்தில் நின்ற பெண் போராளியின் முகத்தில் தெறித்தன.

தொடர்ந்து வந்த சண்டைப் படகுகள் போராளிகளைக் காப்பாற்றின. எல்லோரையும் காப்பாற்ற அந்த உருவம் தன்னை எதிரியின் குறிகாட்டி முன்னிறுத்தி விதையாகிப் போனது.

இப்பொழுதும் எங்களது படகுகளுக்குக் கயிறு போட வேண்டிய தேவை உள்ளது. போனவர்கள் ஒவ்வொருவரும் சொல்லித் தராமலா போனார்கள்? இல்லையே.

படகுகளுக்குக் கயிறுகள் கட்டப்படுகின்றன. அவை இறங்கி ஏறுகின்றன. எல்லாமே வழமைபோல்..

ஆனால் நினைவுகள் மட்டும் மறக்கப்படுவதில்லை.

# பதியப்படாத பக்கங்கள்

## அந்திதொடக்கம் அதிகாலைவரை

**ஆ.ந.பொற்கோ**

அவனுக்குள் கவலை குடிகொண்டிருந்தது. மருத்துவ வீட்டிலுள்ள போராளிகளுக்குக்கூட பலநாட்களாக உணவுக்கு இறைச்சி வழங்கப்படவில்லை.

எப்படியாவது நாளை அவர்களுக்கு உணவுக்கு இறைச்சி வழங்கவேண்டுமென நினைத்தான். ஆனால் அதற்கேற்ற பொருளாதார நிலை இருக்கவில்லை. என்ன செய்யலாமென சிந்திக்கலானான்.

பக்கத்தூரிலுள்ள குளத்திற்கு காட்டிலிருந்து கட்டாக்காலி குழுவன் காளைகள் வருவதாக ஊரவர் ஒருவர் சொன்னது நினைவிற்கு வந்தது. அவனுக்குள் நம்பிக்கை பிறந்து கவலை கரைந்துபோனது. பணியாளர்களில் ஒருவரை அழைத்துக் கொண்டு குளக்கட்டு நோக்கிப் பயணித்தான்.



அவர்கள் குளக்கட்டை அண்மித்தபோது அவனுக்குத் தெரிந்த ஊரவர்கள் மான், மரை வேட்டையாடுவதற்காக 'சொட்கண்ணோடு' குளக்கட்டு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவன் அவர்களுக்கு வந்த நோக்கத்தைத் தெரியப்படுத்தினான். அவர்கள் அவனை, தாங்கள் வேட்டையாடுவதற்காக அமைத்திருந்த மறைவிடத்திற்கு கூட்டிச் சென்றார்கள். மறைவிடம் குளக்கட்டுக்கருகில் புதர்நடுவில் இருந்தது.

இருள் திட்டுக்கள் சூழலை முழுமையாக ஆக்கிரமிப்பதில் பெரு வெற்றி கண்டுகொண்டிருந்தன. அவன் அவர்களோடு மறைவிடத்தில் கட்டாக்காலி குழுவன் காளைகளை வேட்டையாடுவதற்காகக் காத்திருந்தான்.

துப்பாக்கியை தயார்நிலையில் வைத்தபடி குளக்கரையையே பார்த்தபடியிருந்தான். அவனோடு இருந்த ஊரவர்கள் சுருட்டுப் புகைத்தபடி இருந்தார்கள். சுருட்டுப்புகை அவனுக்கு ஒவ்வாமையாக இருந்தபோதும் பொறுமையாக இருந்தான்.

மாசிப்பனி மூசிப்பெய்யத் தொடங்கியிருந்தது. சருகுண்ணிகளும் நுளம்புகளும் அவனின் உடலிலிருந்து குருதியைக் குடித்துக்கொண்டிருந்தன.

ஆட்காட்டிப் பறவையொன்று கத்தியபடி குளத்துக்குமேலால் பறந்தது. அவன் குளக்கரையை உற்றுநோக்கினான். அசுமாத்தம் எதுவுமில்லை. பொழுது நள்ளிரவைத் தாண்டியபோதும் வேட்டை மிருகங்கள் எதுவும் வரவில்லை. ஊரவர்கள் சோர்ந்து போய் உறங்கிவிட்டார்கள்.

அவனுக்கு உறக்கம் வரவில்லை. மருத்துவ வீட்டிலுள்ள போராளிகளே நினைவில் வந்தார்கள். கிழக்கு வெளிக்கும் நேரம் அண்மித்துக் கொண்டிருந்தது. அவனை மீண்டும் கவலை தொற்றிக்கொண்டது. ஆனால் அவன் சோர்ந்து போகவில்லை.

அந்தக் கணத்தில் குளக்கரைநோக்கி யானைபோன்ற பெரிய உருவமொன்று வருவது அவனின் கண்களில் தெரிந்தது. உற்று நோக்கினான். வருவது யானையில்லை. கட்டாக்காலி குழுவன் காளைதான். துப்பாக்கியை நிலைப்படுத்தினான். குழுவன்காளை குளக்கரையை வந்தடைந்திருந்தது. விசையினை அழுத்தினான்.

குறிபிசகாத சூடு. வெடியோசை மயான அமைதியைக் குலைத்தது. காளை அந்த இடத்திலேயே விழுந்தது. சூட்டுச்சத்தம் கேட்டு ஊரவர்கள் விழித்துக் கொண்டார்கள்.

அவனுக்குள் மகிழ்ச்சி பிறந்தது. அவனும் பணியாளரும் ஊரவர்களும் காளையை நோக்கி நடந்தார்கள். பனி கொட்டிக்கொண்டே இருந்தது. கிழக்கு வெளிப்போடு அவர்களின் மனங்களும் வெளித்திருந்தன.

---

(04ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான விடுதலைப் போரினால் பாதிக்கப்பட்ட ஹைற்றியின் பொருளாதாரம் மேற்படி நடவடிக்கையால் மேலும் சீர்குலைந்தது. அமெரிக்க உள்நாட்டுப் போர் அடிமை வர்த்தகத்தை முடிவுக்கு கொண்டுவரும் வரை அடிமைகளை வைத்திருந்த அமெரிக்கர்கள், ஹைற்றியை அங்கீகரிக்க விடவில்லை. 1862 இல் மூதவை உறுப்பினர் சார்ள்ஸ் சம்னர் ஹைற்றி மற்றும் லைபீரிய ஆகியவற்றின் சுதந்திரப்பற்றிய விவகாரத்தை கிளப்பிய போது எல்லைப்புற மாநிலங்களான மேரிலாண்ட் மற்றும் கென்ருக்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் வோஷிங்ரனில் கறுப்பு இன இராஜதந்திரிகள் பிரசன்னமாக இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

1821ம் ஆண்டில் பிரெஞ்சுப் பாதுகாப்பு பிரதேசம் என்ற வகையிலான உள்ளக சுயாட்சியை வழங்க பிரான்ஸ் முன்வந்தது. சுதந்திரமான நாடு என அங்கீகரிப்பதற்குப் பிரதியாக 150மில்லியன் தங்க பிராங்குகளை (இது கிட்டத்தட்ட 21 பில்லியன் டொலர்களுக்கு சமமானதாகும்) இழப்பீடாகவும் ஏனைய நாடுகளுக்கான சுங்க வீதங்களில் அரைப் பங்காக பிரான்ஸ் பொருட்களுக்கு விதிக்கப்படுவான முன்மொழிவுகளை ஜனாதிபதி ஜூன் பியரே போயர் முன்வைத்தார். மேற்படி தேவையானது ஹைற்றி புரட்சிக் காலத்தில் அடிமைகளை இழந்த முதலாளிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கானதாகும். விடுதலைக்காக தங்கள் உதிரத்தை விலையாக கொடுத்த ஹைற்றி மக்கள் அடிமை நிலையிலிருந்தமைக்காக ஆக்க பணத்தையும் கொடுக்க வேண்டியிருந்தது.

1900களில் புதிய காலனித்துவ எஜமானர்களாக இருந்த பிரான்ஸும் அமெரிக்காவும் தம்மால் முடிந்த அளவுக்கு நாட்டின் வளங்களை சுரண்டின. பிரான்சின் அங்கீகாரத்தை பின்பற்றி பெரிய பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய அரசுகள் விரைவாகவே ஹைற்றியை அங்கீகரித்தன.

அமெரிக்கா 1915இல் தன் முதலாவது ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் வரை ஹைற்றி மீதான பிரான்சின் பொருளாதார ரீதியானகட்டுப்பாடு தொடர்ந்தது.

1915 - 1934 இடையேயான காலப்பகுதியில் நிலவிய அமெரிக்க ஆக்கிரமிப்பின் புதிதாக உருவாகிய ஹைற்றி இராணுவத்தை சேர்ந்த இளம் மேஜர் போல் மக்லோயர், ஜனாதிபதி எலி லெஸ்கொட்டின் பழமைவாதமான ஆட்சியை 1946இல் கவிழ்த்தார். கறுப்பின மக்லோயரும் வேறு இரு வெள்ளை நிற அதிகாரிகளும் இணைந்து உருவாகிய படைய ஆட்சிக்குழு டுமார்செய்ஸ் எஸ்டிமேயை ஜனாதிபதி ஆக்கியது. அவர் கறுப்பின மக்களின் நலனை அதிகம் பேணமுயன்றதால், மக்லோயரை ஜனாதிபதியாகும்படி ஆட்சிக்குழு கோரியது. 1950 - 1954 வரை மக்லோயர் ஆட்சியிலிருந்தார். ஊழல், வளர்ந்து கொண்டிருந்த ஒடுக்குமுறை, 'ஹேஸல்' என்ற புயல் விளைவித்த சேதங்கள், நிர்வாக நிதிகளை கையாடியமை அனைத்தும் சேர்ந்து மக்லோயரின் ஆதரவு அலையை 1956இல் அவருக்கு எதிராக திருப்பி விட, நாட்டை விட்டு ஓடிய அவரின் குடியுரிமையும் பறிக்கப்பட்டது.

ஒரு வருடம் நிலவிய அரசியல் குழப்பங்களுக்குப் பின்பு மோசடியான தேர்தல் ஒன்றின் மூலம் பப்பா டொக் டுவாலியர் ஜனாதிபதியானார்.

1971இல் பப்பா டொக் எனப்படும் பிரான்கொயிஸ் டுவாலியரை தொடர்ந்து அவரது மகன் பேபி டொக் டுவாலியர் அவரது 19வது வயதில் ஆயுட்கால ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார். 29 வருடகாலம் நீடித்த டுவாலியர் பரம்பரை ஆட்சியில், பத்தாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் திருடப்பட்டன.

1986ம் ஆண்டில் சேரிகளில் மதபோதகராக இருந்த ஜீன் பேட்ரண்ட் அரிஸ்ரைட் தனது கண்டிப்புக்குரிய பிரசங்கங்களின் மூலம் டுவாலியரை கவிழ்த்தார். டுவாலியர் பிரான்சுக்கு ஓடிப்போனார்.

டுவாலியர் ஓடிப்போனபோது படைய ஆட்சி சபை ஒன்றை பின்னால் விட்டுச் சென்றார். 1986 பின் வந்த சில வருடங்களில் ஆட்சிக்கவிழ்ப்புகள் பெருமளவில் நிகழ்ந்தன. படைய ஆட்சி சபையின் உறுப்பினர்கள் பலர் மீதும் போதைப் பொருள் வியாபார குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்தக் காலப்பகுதியில் ஹைற்றியின் றோமன் கத்தோலிக்க திருச்சபையும், அரசியல் கட்சிகளும் தமக்குள்ளேயே பிளவு பட்டு நின்றதால் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை ஏற்படுத்துவதில் பயன்விளைவுள்ளவர்களாக அவர்கள் இருக்கவில்லை.

19ம் நூற்றாண்டில் ஹைற்றியானது இராஜதந்திர ரீதியாக பெருமளவில் தனிமைப்பட்டிருந்த பொழுது அதனை அமெரிக்கா பயன்படுத்தியது. 20ம் நூற்றாண்டின் பிற்கூறுகளிலும் 21 நூற்றாண்டின் முற்கூறுகளிலும் ஹைற்றியின் ஏழ்மையை அமெரிக்கா பயன்படுத்தியது.

ஹைற்றியின் தேர்தல்களில் மோசடி வேலைகளை மேற்கொள்ள அமெரிக்கா விரும்பினாலும் அவ்வாறு ஹைற்றியில் செய்ய முடியவில்லை. 1991ம் ஆண்டில் முதன்முதலாக அரிஸ்ரைற் வெற்றி பெற்ற அந்த தேர்தல் வெறும் தேர்தலாக மட்டும் இருக்கவில்லை. அது ஒரு பாரிய இயக்கமாகவே இருந்தது. மக்கள் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்வதில் பல தரப்பு காலத் தலைவர்கள் மற்றும்




அமெரிக்க ஆதரவிலான டுவாலியர் பயங்கரம் முதலிய தடைகளின் எச்சங்கள் அனைத்தையும் மக்கள் தூக்கியெறிந்தனர். அரிஸ்ரைற் தெரிவு செய்யப்பட்டது அமெரிக்காவுக்கு அதிர்ச்சியாகவே முடிந்தது.

1991ம் ஆண்டில் அரிஸ்ரைற்றை கவிழ்ப்பதற்கு நடந்த புரட்சி சதியில் 5000 உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. சகல விதமான கருத்துருப்பு வேலைகளிலும் CIA ஈடுபட்டது எனினும் அரிஸ்ரைற்றுக்கான ஆதரவு வலுவானதாகவே இருந்தது. 1995 டிசம்பரிலிருந்து 2000 டிசம்பர் வரை றெனே பிறிவால் ஜனாதிபதியாக இருந்தார். அவரது தனியார் மயமாக்கல் கொள்கை அவரை புகழிழக்கச் செய்தது.

2000ம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்காவின் ஆதரவிலான வேட்பாளர் தோல்வியடைந்ததால் ஆத்திரமுற்ற அமெரிக்கா, அமெரிக்க அபிவிருத்தி வங்கியில் இருந்து வழங்கப்பட்ட கடன்கள் மீது தடையை விதித்தது. ஐரோப்பிய யூனியனையும் அவ்வாறே செய்யச் செய்தது.

தேர்தலின் பின் வந்த இரண்டு வருடங்களாக ஹைற்றியின் சிதைவடைந்த ஜனநாயகத்தை சீரமைக்கும் போலியாக கூறிக்கொண்ட அமெரிக்க மாநிலங்களின் அமைப்பு (OAS) அரிஸ்ரைற்றின் கட்சியையும் தோற்கடிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளையும் புதிய தேர்தல் ஒன்றுக்கு உடன்பட செய்ய எடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

அதைத் தொடர்ந்து நிலவிய குழப்பநிலைகள், டுவாலியர் கவிழ்க்கப்பட்டதற்கு முன்னர் நிலவிய குழப்பநிலைகளை நினைவூட்டுவனவாக இருந்தன.

வழக்கம்போலவே அமெரிக்க ஆதரவிலான எதிரணிகள் தலைநகரை நோக்கி முன்னேறின. பேச்சுவார்த்தைக்கு வரும்படி வஞ்சகமாக அரிஸ்ரைற்றை CIAவினர் வெளியேற்றிவிட ஐ.நா அமைதிப்படை தற்போது ஹைற்றியில் நிலைகொண்டு எதிரணியிலிருந்து ஆயுதக் களைவை மேற்கொள்ள முயன்று வருகின்றது.

வெளியேற்றப்பட்ட அரிஸ்ரைற்றோ இன்னமும் தான்தான் ஹைற்றியின் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதி என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

ஹைற்றியில் நீதியான சமாதானமும் ஜனநாயகமும் நிலைநாட்டப்படுமா என்பதை காலந்தான் கூறவேண்டும். ●

# தேர்தல் அரங்கில் சிங்கள மனோபாவம்

— சஞ்சனன் —

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது சிங்கள தேசத்தைத் தமிழரிடம் தாரைவார்த்துக் கொடுப்பதாகிவிடும் என்று சிங்கள மக்கள் நம்புகிறார்கள். இதுவே நடந்து முடிந்துள்ள பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் அளித்துள்ள தீர்ப்பு. சு.க, ஜே.வி.பி கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், ஜாதிக ஹெல உறுமயவிற்கும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் தீவடங்கலான ரீதியில் 51.57 வீதமாகும்.

ஆட்சி அதிகாரத்தைக் கையாளவேண்டிய யதார்த்தத்தின் பெயரில் சு.க சற்று அடக்கி வாசித்தாலும் ரணில் அரசாங்கத்தின் தீர்வு முயற்சிகள் எமது நாட்டைத் தமிழரிடம் பிரித்துக்கொடுக்கும் செயல்தான் என்பதை இம்மூன்று கட்சிகளும் மக்களிடம் தெளிவாக முன்வைத்தன.









"புலிகள் - ஐ.தே.க கூட்டை உடைப்போம்", "ரணில் நாட்டைத் தமிழரிடம் பிரித்துக் கொடுக்கப்போகிறார்" போன்ற கோஷங்கள் தேர்தலில் பிரதான இடம் வகித்தன.

சு.க தனக்குப் பேசக் கூச்சமான இனவாத வார்த்தைகளையெல்லாம் தனது மேடையில் வைத்துத் தனமுன்னிலையில் ஜே.வி.பி யின் வாயால் பேசுவித்தது. வாக்குகள் குவிந்தன. அப்படிக் கூசாமல் இனவாதம் பேசிய விமல் வீரவன்சவுக்குத்தான் அதிக விருப்பு வாக்குகள் குவிந்தன என்பதும் கவனிக்கத்தக்கது.

இச்சக்திகள் ஒருபுறம் வார்த்தை ஜாலத்தில் சமாதானம் பற்றிப் பேசினாலும் மறுபுறம் மிகக் கூரிய சொற்களால் ரணிலின் "சமாதான" நடவடிக்கைகளை வெட்டிக் கொத்தினார்கள். இறுதி அர்த்தத்தில் ரணிலின் சமாதானம் என்பது நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் செயல் என்ற கருத்து மக்கள் மனங்களில் இலகுவாகப் பதிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் மக்களுக்கு ஒரு சமாதானம் தேவைப்பட்டது. அதற்கு ஒரு சோடனை சமாதானத்தை அவர்கள் முன்னிறுத்தினார்கள். இதன்மூலம் சமாதானம் என்பது சண்டையில்லாத ஒரு நிலையே தவிர தமிழ்மக்களின் பிரச்சினைக் கான தீர்வென்பதல்ல என்பது மேலோங்கியது.

மறுவளமாக ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையோ தீர்வை முதன்மைப்படுத்திப் பரப்புரை செய்யத் தவறியதுடன் ஒரு "கள்ளப் பெண்டாட்டி" உறவுபோலவே "சமாதானம்" பற்றிய நிலைப்பாட்டை அதிகம் பயப்பீதியுடன் முன்வைத்தது. அதாவது தீர்வு என்பது ஒரு "தூக்குப் பொருள்" என்ற நிலை உருவானது. இது விடயத்தில் போதிய வீரத்தைக் காட்டவும் முன்னெடுப்புக்களைச் செய்யவும் ரணில் முன்வரவில்லை. இது ஒரு சிங்கள மனோபாவம்.

முன்கூறிய மூன்று கட்சிகளும் அந்தச் சிங்கள மனோபாவத்தை நேரடியாக வெளிப்படுத்திய போது ரணிலும் வேறொரு வகையில் அத்தகைய சிங்கள மனோபாவத்தின் கைதியாகவும் பிரதிநிதியாகவும்தான் செயற்பட்டார்.

இப்பின்னணியில் சிங்கள தமிழர் பற்றிய, தீர்வு பற்றிய சிங்கள மனோபாவத்தைப்பற்றி ஆராய வேண்டியது அவசியம்.

ஒரு தேசிய இனத்திற்கு அது தேசிய இனமாகக் கருதப்படுவதற்கு பின்வரும் நான்கு அம்சங்களும் அவசியமென்று கூறுவர்.

(01) பொதுப் பிரதேசம்.
(02) பொதுப் பொருளாதாரம்.
(03) பொது வரலாறு, பொது மொழி மற்றும் பொதுப் பண்பாட்டு அம்சங்கள்.
(04) பொதுவான உளவியல் உருவாக்கம்.

இதில் நான்காவதாகக் கூறப்படும் பொது உளவியல் என்பது முன்கூறிய மூன்று அடிப்படையிலும் வளர்ந்து உருவான ஒரு பொது உளவியல் உருவாக்கம்.

இலங்கையில் சிங்கள மக்களிடம் இந்தப் பொது உளப்பாங்கு ஒரு விபரீதமான திசையில் உருப்பெற்று வளர்ந்துள்ளது. அதாவது சிங்கள இனம் தம்மைத் தேசியம் என்று உணரும் ஒவ்வொரு கணமும் அதனைத் தமிழின எதிர்ப்புடன் தன்னை இணைத்து வைத்திருக்கின்றது என்பதுதான்.

அதாவது சிங்களத் தேசியம் என்ற ஒரு பொது உளவியல் உருவாக்கத்தில் தமிழின எதிர்ப்பு என்பதும் ஒரு முக்கிய உளவியல் அம்சமாய் இடம்பெற்றுள்ளது. எனவே சிங்களத் தேசியம் என்ற மனப்பாங்கில் தமிழின எதிர்ப்பு என்பதன் ஒரு பக்கமாகும்.

இதன் வரலாற்று மூலங்களை நாம் தேடுவதற்கு அப்பால் குறைந்தது கடந்த அரை நூற்றாண்டுகால அரசியல் வரலாறானது இத்தகைய போக்கை முழுமையாகக் கொண்டுள்ளது என்பது உண்மை.

இந்த சிங்கள மனோபாவத்தை மாற்றாமல் இத்தகைய எதிர்க்கணியமான அம்சத்தை அகற்றாமல் சமாதானம் என்கின்ற ஒன்றை ஸ்தாபிக்க முடியாது.

தேசியவாதம் (Nationalism) என்ற நவீன பதத்திற்கு சிங்களத்திலுள்ள பதம் "ஜாதி வாதய". ஜாதிவாதய என்ற இச்சொல் இனவாதம் என்கின்ற பொருளில்தான் சிங்களத்தில் உண்டு. அது தேசியம் என்ற பரந்த பொருளைக் கொள்ளவில்லை. அவர்கள் தேசியம் என்று உண்மையில் கருதுவது சிங்கள இனவாதத்தைத்தான். இத்தகைய சிந்தனைப் பின்னணியிலிருந்துதான் அவர்களின் மனோபாவம் திரட்சி பெற்றது.

இத்தகைய மனோபாவத்தைத் தணிப்பதற்கேற்ற பரப்புரைகள் செல்வாக்குமிக்க கட்சிகளினாலோ அன்றி நிறுவனங்களினாலோ அன்றி வெகுஜன தொடர்பு சாதனங்களினாலோ மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டு தசாப்தங்களைத் தாண்டிய இரத்தம் சிந்திய தமிழ் மக்களின் போராட்டத்தின் பின்பு அவர்கள் போராட்டம் நியாயம் என்று உணர்வதற்குப் பதிலாக போரின் மூலம் அவர்களுக்கேற்பட்ட பாதிப்புக்கள் அல்லது அசௌகரியங்களின் நிமித்தம் போராட்டத்தை நிறுத்தச் செய்வதே சமாதானம் என்று அவர்கள் விளங்கிக்கொள்கின்றனர். எனவே அவர்களுக்குச் சமாதானம் என்பதுகூட தமிழ்மக்களின் உரிமைக்கெதிரான குரல்தான்.

இங்கு பிரச்சினை இதுதான். சமாதானம் என்ற வார்த்தையால் தமிழ்மக்கள் விளங்கிக் கொள்ளும் பொருளும் சர்வதேசம் விளங்கிக்கொள்ளும் பொருளும் வேறொன்றாயிருக்க சிங்கள மக்கள் விளங்கிக்கொள்ளும் பொருள் இன்னொன்றாயிருக்கிறது. இது ஒருவகை சிங்கள மனோபாவமாகும். இத்தகைய நிலைதான் ரணில் கூறிய சமாதானம் பற்றிய நடவடிக்கைக்கு எதிராக சு.க. + ஜே.வி.பி கூறும் சமாதானத்திற்காக சிங்கள மக்கள் வாக்களித்துள்ளனர்.

இங்கு ஜே.வி.பி கருதும் சமாதானத்தீர்வு என்பது தமிழ்மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்கிற அடிப்படையிலான தீர்வுதான். அதாவது தமிழ்மக்களுக்கென குறித்த உரிமையேதும் இல்லை என்பதுதான் ஜே.வி.பி கூறும் சமாதானம். தமிழ்மக்களுக்கு உரிமையில்லையென்பது எப்படிச் சமாதானமாக முடியும். தமிழ்மக்களுக்கு உரிமையில்லை என்பதற்கு வாக்களிப்பதென்பது எவ்வாறு சமாதானத்திற்கு வாக்களிப்பதாகும்.

இத்தகைய குழப்பகரமான ஒரு கொள்கை முன்வைப்பை ஜே.வி.பி, சு.க வின் இணைந்த பரப்புரைகளில் காண முடிந்தது. ஒருபுறம் சமாதானம் பற்றிய ஏதோ சிறு வார்த்தைப் பிரயோகங்கள் மறுபுறம் சமாதான முயற்சிகளின் மீதான பாரிய தாக்குதல்கள். அதில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளின் மீது ஈவிரக்கமற்ற தாக்குதல்கள் என அமைந்த இத்தகைய கலவையானது சிங்கள மக்களின் அடிமனதில் குவிந்திருந்த தமிழின எதிர்ப்பை மிக இலாவகமாகத் தட்டியெழுப்பியது. இத்தகைய சிங்கள மனோபாவத்திற்கு எதிராக ரணில் தரப்பினர் மனதாலும் செயலாலும் செயற்பட்டிருக்கவில்லை.

எல்லா அனுபவங்களுக்கும் பின்னாலும்கூட சிங்கள மக்கள் தமது மனோபாவத்தில் தமிழின எதிர்ப்புத்தான் முதன்மையானது என்பதை இத்தேர்தல்மூலம் மீண்டுமொருமுறை நிரூபித்துவிட்டனர்.

தமிழ்மக்கள் சமாதானத்தை முன்னிறுத்தி அதன் பொருட்டு தமது ஏகோபித்த ஆதரவை தேர்தலின்போது முழு மனதுடன் வெளிக்காட்டியிருக்கும்போது சிங்கள மக்கள் இதற்கு மறுவழமாய் சிந்திப்பதுபோல் தெரிகிறது.

அதாவது தேசிய உருவாக்கத்தில் நான்காவது அம்சமாகிய உளவியல் உருவாக்கம் என்பது தமிழின எதிர்ப்பு மனோபாவமாக இருக்கிறது என்ற துயரத்தை இந்த 21ம் நூற்றாண்டிலும் தரிசிக்க நேர்ந்திருப்பது ஒரு துயரகரமான உதாரணம்தான்.

ஜாதிக ஹெல உறுமய என்ற தேரர்கட்சி ஒன்பது ஆசனங்களைப் பெறமுடிந்தமை தேர்தல்கள் அரசியல் வரலாற்றில் ஒரு வியப்பூட்டவல்ல விடயமாகும். அவ்வாறு அது பெறுவதற்கான பலம் தமிழின எதிர்ப்புவாதத்திலிருந்தான் குடிகொண்டிருந்தது.

சமாதானம் பற்றிக் கதைக்கும் வெறும் இந்தச் சிங்கள மனோபாவத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் இறங்கி அதற்குரிய செயற்பாடுகளைக் கொண்டிருக்காத வரையும் சமாதானம் பற்றிய பேச்சு ஒரு அரசியல் நாடகமே தவிர வேறில்லை.

ஓர் இன எதிர்ப்பே ஒரு மக்கள் கூட்டத்தின் மனப்பாங்காக இருக்கும் நிலையில் அந்த மக்கள் கூட்டத்தின் விருப்பங்களும் செயல்களும் ஜனநாயகமாகிவிடாது. பெட்டிக்குள் போடும் புள்ளடிகளினால் தமிழ்மக்களின் உரிமைகளை மீறலாமென்பது ஜனநாயகமல்ல. எனவே தேர்தல்மூலம் தீர்வு நடவடிக்கைகளுக்கு எதிராக வாக்களிக்கப்படுமேயானால் அத்தகைய வாக்களிப்புக்களை ஜனநாயகமென்று போற்றிப் புகழமுடியாது.

தமிழ்த் தேசிய உரிமை பொறுத்து சிங்கள மனோபாவம் என்பது தமிழின எதிர்ப்பு உணர்வை ஒரு முக்கிய அம்சமாகக் கொண்டது. இந்த மனோபாவம்தான் தேர்தலில் முதன்மை பெறுமாயின் அது மீண்டுமொருமுறை ஜனநாயகத்தின் தலையில் விழுந்த பலத்த அடியாகவே அமையும்.

இப்போதும் ஜனநாயகவாதி யார் என்று கேட்டால் இத்தகைய பிழையான தமிழின எதிர்ப்பு சிங்கள மனோபாவத்தை எதிர்ப்பவர்தான். வெளிநாடுகளின் நிதியுதவிக்கு இரங்கி சமாதானம் பற்றிய ஒரு சோடனை செய்வதல்ல. சமாதானத்திற்கான நடவடிக்கைகள் என்பது உண்மையில் தமிழ்மக்களின் பிரிக்கப்படமுடியாத அவர்களின் பிறப்புரிமையை ஏற்பதும் அதன் பொருட்டு சிங்கள மனோபாவத்திற்கு எதிராக தைரியத்துடன் செயற்படுபவர்தான் உண்மையான சமாதான விரும்பியாக இருக்கமுடியும்.

தேசியம் என்பது இதுவரை மனிதகுலம் கண்ட கூட்டு வாழ்வுமுறைகள் எல்லாவற்றினும் மேலானதும் முற்போக்கானதுமாகும். இத்தேசியத்தின் நாலாவது அம்சமாகிய பொது உளவியல் உருவாக்கம் என்பது சிங்கள மக்களிடம் இன எதிர்ப்பினால் பிற்போக்கான தாய் வடிவம் பெற்றுவிட்டது. இப்பிற்போக்குத் தன்மைதான் சிங்களத் தேசிய இன வளர்ச்சிக்கும் ஊறு விளைவிப்பதாயுள்ளது. இலங்கைத் தீவுக்கும் அது பாதகமாயுள்ளது. எனவே முற்போக்கு என்று கதைப்பதென்றால், ஜனநாயகம் என்று கதைப்பதென்றால் இத் தேர்தல் மூலம் அபாய ஒலி எழுப்பியுள்ள சிங்கள மனோபாவத்தைச் சீர்செய்ய வேண்டியது அவசியமாகும். அங்கிருந்துதான் சமாதானமும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற உண்மையை இத்தேர்தல் முடிவுகள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. ●

# 'தமிழீழத் தாயகம் தமிழரின் தாகம்'
## உலக முன்றலில் எழுச்சிகொண்ட தமிழ்தேசியம்

**அன்புமாறன்**

மரபுவழித்தாயகம் - ஈழத்தமிழ்தேசியம் - தன்னைத்தானே ஆளுகின்ற தன்னாட்சியுரிமை இவையே, ஈழத்தமிழனின் ஏகோபித்த எழுச்சிக் குரலாக, பொங்குதமிழ் எழுச்சியின் குரலாக, கடந்த மூன்று வருடங்களாக தளத்திலும், புலத்திலும் ஓங்கி ஒலிக்கும் ஈழத்தமிழனின் ஆன்மாவின் குரல்.

சுற்றிச் சூழ்ந்த துப்பாக்கி முனைகளினால் காவலிடப்பட்ட காவலரண்கள் சூழ்ந்த வாழ்வினுள், எப்போதும் கொல்லப்படும் அந்தரிப்பினுள் நின்று, இராணுவத் திரையின் அடக்குமுறைகளை மீறி ஒலிக்க தொடங்கியதே ஈழத்தமிழனின் பொங்குதமிழ் கோசம்.

தாயகத்தில் திசைகளெங்கும் அந்த விடுதலையின் கோசம் ஒலித்தபோது, தமிழன் தன்னை பிணைத்திருந்த ஆக்கிரமிப்பின் அச்சுறுத்தல்களை மீறி எழுந்தான்.

'உயர்ந்தவர்கள் நாமெல்லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்
நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்'

என அவன் உரத்த குரலில் ஏகோபித்து ஆர்ப்பரித்தபோது ஈழத்தமிழனின் நாடிகளில் எல்லாம் புது இரத்தம் பாய்ந்தது.

முன்னர் 2001, ஜனவரி 17இல் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டினுள், பல்கலைக்கழக மாணவர்களினால், விடுதலைக்கான தடையுடைத்து மேற்கொள்ளப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி, கடந்த கால் நூற்றாண்டின் ஈழத்தமிழர்களின் எழுச்சிகளில் முதன்மையானது. அதுவே பொங்குதமிழின் முதல் எழுச்சியாகவும் அமைந்தது.

ஈழத்தமிழினம் தனது அபிலாசைகளை, அதனைத் தொடர்ந்த பொங்குதமிழ் எழுச்சிகளின் மூலம் தொடர்ச்சியாக காலத்திற்குக் காலம் தளத்திலும், புலமெங்கும் மாபெரும் மக்கள் எழுச்சியாக, அடக்கப்பட்ட ஆன்மாவின் விடுதலைப் பிரவாகமாக வெளிப்படுத்தி வந்தது.

ஏப்ரல் 05, 2004, புலம்பெயர்ந்த உறவுகளெல்லாம் அந்த நாளுக்காகப் பரபரத்தன. தளத்தில் தமது ஏகோபித்த மக்கள் ஆணைத் தீர்ப்பின்மூலம் தமிழீழ விடு தலைப்புலிகளின் தலைமையையும், வழிகாட்டலையும் ஏற்று, அணிதிரண்ட தம் உறவுகளின் ஆத்ம எழுச்சியில் தாமும் பங்கெடுத்துவிடத் துடித்தனர்.

தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டினடிப்படையில் உச்சநிலையடைந்துவிட்ட ஈழத்தமிழ் தேசியத்தின் எழுச்சியில் பங்காளிகளாகி, தாமும் விடுதலைக்கான மாபெரும் ஆத்மார்த்த பங்களிப்பை செலுத்திவிட அணிதிரண்டனர்.

ஏப்ரல், 05இல் முழுநாள் பொழுதும், புலம்பெயர்ந்த நாடுகளெங்கனும் வாழ்ந்த ஒவ்வொரு ஈழத்தமிழனதும் சிந்தனையும், அவாவும் ஜெனிவா நோக்கிய பொங்குதமிழ் எழுச்சிகளாகவே இருந்தது.

ஆயிரம் ஆயிரமாகத் திரண்ட மக்கள், ஜெனிவா நகரில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன முன்றலில், அடக்குமுறையின், சமத்துவமின்மையின் குறியீடாக, விடுதலை வேண்டிய வாழ்வின் அவாவுதலின் குறியீடாக நிமிர்ந்து நிற்கும் ஒருகால் முறிந்த பிரமாண்டமான கதிரையின் முன்னால் கூடினர்.

சுவிஸ்லாந், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, கொலண்ட் என ஐரோப்பா எங்கனும் இருந்து வந்த மக்களுடன் தன்சானியா, தென்னாபிரிக்கா, மலேசியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்தும் பலர் பொங்குதமிழ் நிகழ்வில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

கைகளில் தமிழீழ தேசியத்தலைவரின் படங்களைத் தாங்கியவாறு உரத்துக் கூவினர்.

'எங்கள் சூரியத்தேவன் பிரபாகரன்'
'எங்களின் காப்பரண் புலிப்படையே'
'வடக்கு கிழக்கே எமது தாயகம்'
'தமிழீழத் தாயகம் எங்களது தாகம்'

புலத்தில், பேரெழுச்சிகண்ட ஈழத்தமிழன் தளத்தில், தமது ஏகோபித்த ஆணைமூலம் ஒன்றுதிரண்ட ஈழத்தமிழ் தேசியத்தை சர்வதேசத்தின் முன்றலில் நிரூபித்துள்ளனர்.

ஒவ்வொரு தமிழனதும் ஆன்மாவின் குரலாக, நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பரிதவிப்பின் குரலாக, தமது அபிலாசைகளை உலகத்தின் முன் சொல்லும் ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக பொங்குதமிழ் மீண்டுமொருமுறை ஓங்கி ஒலிக்கிறது.

ஈழத்தமிழினம் தனக்கெதிரான எல்லாத் தடைகளையும், சவால்களையும் கடந்து, ஒன்றுபட்ட தமிழ்த் தேசியத்தின் எழுச்சியுடன் நிமிர்ந்து நிற்கின்றது. ●





### "தாக்குதல் நிலையும் ........."

(03ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்பாட்டின் புதுப்பித்தல் மூலம். இந்துக்களின் பூமியில் இருப்பதும் இருக்கப் போவதும் இந்துதேசமே. முசுலிம் அற்ற இந்து இராச்சியமே இலக்கு என்கிற அன்றைய கருத்தாக்கத்தின் வளைவான இந்து, இந்தி, இந்துஸ்தான். இங்கோ தருமபாலரின் மண் மண்ணின் மைந்தர்களுக்கே (சிங்களவர்களுக்கே சொந்தம் என்கிற மூலக் கருத்தாக்கத்திற்கு விளைவான பௌத்த தரும இராச்சியம்.

இனிவரும் குறிப்புக்கள் முக்கியமானவை. அங்கோ காங்கிரசுக்கட்சி தனது சுய இலாபத்திற்காக ஆரம்ப காலத்திலிருந்தே ஆர்.எஸ்.எஸ் இன் வளர்ச்சியை கண்டும் காணாமல் இருந்து இந்தி வலயங்கள் எனப்படும் வட இந்திய மாநிலங்களில் மதவாத சக்திகளை வைத்து அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இந்திரா அம்மையார் இந்நிலைப்பாடெடுத்தார். ராஜீவ்காந்தி இந்தி, இந்து வாக்குகளைப் பெறுவதற்காக இந்து மறுமலர்ச்சியை உருவாக்கும் நோக்கோடு இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசத் தொடர்களை தொலைக்காட்சி நாடகமாக்கி கடவுள்மாரை மக்கள்முன் உலாவவிட்டார். இவை பெருத்த தாக்கத்தினை ஏற்படுத்தின. ராஜீவ் விரும்பியது ஒன்றுதான் நடக்கவில்லை. பலனும் பயனும் 'ஜெயராம்' கோசம்போட்ட பாரதிய சனதாவுக்கே போய்ச்சேர்ந்தன. கட்சி என்கிற வகையில் 1980இல் பாரதிய சனதா தோற்றம் பெற்றது. 1984இல் லோக்சபையில் இரண்டே இரண்டு ஆசனங்கள். அயோத்தியில் இராமர் கோயிலுக்கு அடிக்கல்லு நட்டபின் அது 89ஆகி அயோத்தியில் முசுலிம்கள் குருதியை ஓடவிட்டபின் அது 119ஆனது. இப்போதோ அடுத்த தேர்தல் வெற்றி அறுவடைசெய்ய ஆயத்தம்.

இங்கே இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றோம். இத்தகைய வளர்ச்சி நிலையினை அவதானித்து தடைகளை இத்தகைய அமைப்புகள் போட்டால் அவை மேலும் வளரும் என்பதே வரலாறு. மீண்டும் உதாரணம், 1948இல் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினரான கோட்சேயால் காந்தி கொலை செய்யப்பட்டபோது தடை; 1975இல் அவசரகால நிலையின்போது தடை; அயோத்தி மசூதி விவகாரத்தின் பின் தடை. ஆனால் ஒவ்வொரு தடையின் பின்னரும் ஆர்.எஸ்.எஸ் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு அரசியல், சமூக, பண்பாட்டு முன்னணி அமைப்புகளை (அரசியல் சார்ந்த அன்றைய ஜனசந், இன்றைய சிவ சேனை, மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்தியா பரிசத் (ABVP), இராணுவப் பயிற்சிபெற்ற தொண்டர் அணியான பஜ்ஜிரந்தல், விஸ்வ இந்து பரிசத் (VHP) என்ற மதம்சார்ந்த அமைப்பு) இவை வாசகர்களுக்கு ஜே.வி.பி யின் 1980களின் பின்னான வளர்ச்சியை நினைவுபடுத்தும். அன்று காங்கிரஸ் இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி. இப்போதோ ரணிலின் கட்சியின் சில சக்திகளின் உதவியால் உருவாக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமய. எல்லாமே ஒரு வகையான கதைதான். இத்தகைய நிலைகளுக்கெல்லாம் என்ன காரணம். இந்திய சமூகவியல் ஆய்வாளரான ரஜனி கோத்தாரி கூறுகின்றார். "சாதாரண இந்தியர் எதிர்காலம் குறித்து நிச்சயமற்றவனாக, இலகுவில் எதற்கும் இரையாகக் கூடியவனாக, ஏமாற்றமும் விரக்தியும் கொண்டவனாக இருக்கின்றான். எதிர்காலம் குறித்து நம்பிக்கையூட்டக்கூடிய சிந்தனைத் தெளிவுள்ள நிலையின்மையால் குழம்பிப்போயிருக்கின்றான். இக் குழப்பத்தை எவரும் சரியாகத் திட்டமிட்டு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும். இதைத்தான் இன்று பாரதிய ஜனதா கட்சி செய்கிறது. இவர்களது மூடத்தனமான, வெறித்தனமான செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதை இந்தியன் தவறாக நினைக்கப் போவதில்லை. மாறாக ஏதோ ஒரு வகையில் தன்னை தனது ஆன்மாவை திருப்தி செய்வதாகவே அவன் நினைப்பான்."


மதம், தாழ்ந்துபோன மனிதனின் தன்னம்பிக்கையை தூண்ட பயன்படுத்தப்படும் விதத்தினை ஜாதிக ஹெல உறுமயவின் உயர்சபையின் பொதுச்செயலாளர் உடுவே தம்மலோக தேரர் வார்த்தைகளில் வாசியுங்கள். "எமது பிரதான இலக்கு ஒற்றை ஆட்சி பௌத்த அரசு இதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோம். புத்தரின் போதனைப்படியே நாடு ஆளப்படும். அரசியல், பொருண்மியம் தொடர்பான பௌத்த கோட்பாடுகள் வெளியிடப்படும். (சம்புத்த பிரதிபாதவ, ஆர்த்திக பிரதிபாதக்) ஏப்ரல் இரண்டாம் திகதியின் பின்னர் பிக்குகள், பிக்குணிகள், ஆண்கள், பெண்கள், உபாசகா, உபாசிகா எனப்படுகின்ற பௌத்த துணைத் துறவிகள், தொண்டாளர்களைக் கொண்ட கட்சியைக் கட்டியெழுப்பி புத்த இராச்சியத்தை அமைக்கப் பாடுபடுவோம்"



# தருவதை வாங்கித் தணிந்து போகாது விடுதலை நெருப்பு

நேற்றுவரை ஒருமுனையில் பற்றிய நெருப்பு
இன்று எட்டுத்திசையும் எரிகிறது.
காலநீட்சியில் விடுதலை வர்ணம் கரைந்து
கறுப்பு மட்டுமே எஞ்சுமோவெனக் கலங்கினோம்.
தருவதை வாங்கித் தணிந்துபோகுமோ
விடுதலைத்தீ எனப் பதறினோம்.
இல்லையென முளாசியெரிகிறது
மயக்கமற்ற முகங்களில் சுதந்திரக்கனல்.
அடங்கிப் போகுமென ஜோதிடம் கூறினோர்
அதிசயித்து நிற்க
தேசிய நதியின் பிரவாகம் வேகமெடுத்துளது.
ஜனநாயக நாட்டில் தேர்தலென்பது
குரங்கும், குரங்காட்டியும் போன்றதே.
வரிசைக்குப் பழக்கப்பட்டோரின் தரிசனம் போன்றதே.
"கள்வர் குகைக்குப் போகும் கொள்ளைக்காரருக்கு
அங்கீகாரம் வழங்கும் அனுமதிவிழா"
"அதிகாரவர்க்கத்துக்கு ஆலவட்டம் பிடிப்பதற்கு
சேவகர்களை அனுப்பும் தேர்வுத்திருவிழா"
வியாசன் இப்படித்தான் முன்னர் விளாசினான்.
"கோடிசனம் கூடி கேடிகள் சிலருக்கு குறிகட்டு
மாடிமனைகளின் வாசலில் மாலையிடுவது."
இப்படி எழுதியவனும் வியாசன்தான்.
நேற்றுவரை தேர்தல்களைப் புறமொதிக்கிவிட்டு
வாழ்வுக்கான போராட்டம் வழிநடந்தது.
விடுதலையை வியாபார ஏலத்தில் விடாமல்
உயிர்விதைத்து நகர்ந்தது உரிமைப்போர்.
02-04-2004 வெள்ளிக்கிழமை
புதியவழிப்பயணத்தில் கலந்தோம்.
தேர்தல் குளத்தில் குதித்து மீண்டோம்.
நச்சுக்குளம் நாங்கள் குளித்ததால் மட்டும்
புனிதப்பொய்கை ஆகாது.
காலத்திருப்பொன்றுக்காக காத்திருந்த எங்களுக்கு
குளத்தில் குதிக்கவேண்டியது கட்டாயமானது.
"உன்னால் முடியுமானால் உள்ளே இறங்கு" என
திரப்பெழுத முன்னர் உலகம் சீண்டியும் பார்த்தது.
குதிக்கும் போதிருந்த பயத்திலும் கூடுதலாக
கரைமீண்டபோது வலிமை கொண்டோம்.
"புலிகளுக்கு மக்கள்பலம் கிடையாது".
ஆயுதங்களால் எல்லையிட்ட வேலிக்குள்
அடிமைகளாகக் கிடக்கின்றனர் மக்கள்.
போரின் வெக்கைக்குள் புழுண்டிப்போயினர் தமிழர்.
காற்றைக்கூடப் புலிகள் உள்ளே விடுவதில்லை
தேர்தலென்று வந்தால் புலிகள் தோற்றுப்போவர்.
எதிரிவிதைத்த விஷவிதைகள் முளைத்து
மேற்கு நாடுகளின் முற்றத்தில் பூத்தன.
தேசியத்துக்கான போரெனும் போர்வையில்
அடக்குமுறையின் கீழேயான அந்தரிப்பு
வாக்கெடுப்பென வந்தால் வரலாறேமாறுமென
காட்டிக்கொடுக்கும் காகங்கள் கத்தின.
உலகநாடுகள் சில ஒப்புக்கொண்டன.
என்னசெய்ய இயலும் எம்மால்?
ஆடையை அவிழ்த்துக் கரையில் வைத்துவிட்டு
தேர்தல் குளத்தில் தொபுக்கென குதித்தோம்.
ஈழத்தமிழரின் இதயத்தைப் பாரென
தேர்தல் மூலம் திறந்துகாட்டினர் தமிழர்.
தீக்குளித்து மீண்டது தமிழர் தேசியம்.
தேர்தலில் நின்றதும்,
வரிசையில் கிடந்ததும்,
புள்ளடி போட்டதும்,
ஜெயவர்த்தனபுர மன்றின் வாசலில் நுழைவதும்
உரிமைப்போருக்கான உலக அங்கீகாரத்துக்கன்றி
ஆட்சிக்கான அதிகாரத்துக்காக அல்ல.
உரிமைக்கான பயணத்தில் ஒன்றானோமென
உலகதிசைக்குச் சொல்லியாயிற்று.
புலிகளே எங்கள் பெருந்தலைமையென
பேரினவாதிகளுக்குப் புரியவைத்தாயிற்று.
பிரபாகரன் எங்கள் சிரமேலென்றும்
தமிழருக்குத் தனித்தலைவனென்றும்
உரத்துச்சொல்லி ஒப்புக்கொடுத்தாயிற்று.
தேர்தலும்,வாக்கெடுப்பும் இதற்கு மட்டும்தான்.
அதிகநாள் மயங்கிக்கிடந்து விடாதே.
தேர்தல் மூலமே யாவும் தீர்ந்துவிடுமெனத்
தூங்கிக்கிடந்து விடாதே.
திருவிழாக்கூட்டத்தில் உன்னைத் தொலைத்துவிடாதே.
நஞ்சுதான் கொல்லுமென்றில்லை
அளவுக்கதிகமானால் மருந்தும் கொல்லும்.
எல்லாவற்றுக்கும் அளவுப்பிரமாணம் உண்டு.
தேர்தலுக்கான பணி முற்றிற்று.
இனி மீதிப்பயணத்துக்காக முன்னேறு.
பயணக்களைப்பால் கொஞ்சம் காலாறினோம்
வழியில் தேர்தல் திருவிழா வந்தது.
சின்னமாறுதலுக்காகக் கலந்திருந்தோம்.
குடைராட்டினம் சுற்றியது போதும்
வழிப்பயணம் தொடரவேண்டுமல்லவா?
பொதியைத்தூக்கித் தலையில் வைத்துப் புறப்படு.
ஆட்சிக்கு வந்திருப்பது அம்மையார்.
தோளில் வைத்திருப்பது சோமவன்ச.
விமல் வீரவன்சாவிடம் தான் வீட்டுத்திறப்பு.
கதிர்காமரிடம் தான் கல்லாப்பெட்டி.
அதிகநாட்கள் ஓய்வில் கழிந்தால்
மீதிவழி தொலைவாகக் கூடும்.
அம்மையாரின் பாட்டில் சுருதிபிசகாத வரையும்
தாளத்தை நாமும் சரியாகப் போடுவோம்.
அவசரம் வருமெனில்
கச்சேரியை நிறுத்திவிட்டு கீழேயிறங்குவோம்.
பாடவேண்டியது பாட்டுக்காரியன்றி
பக்கவாத்தியக்காரரல்ல.
எத்தனை இளக்காரமாய் எண்ணியவர்களை
இறங்கிவரச் செய்துள்ளோம்.
அத்தனையும் நம் பலத்தால் வந்த அழகு.
பலமிழந்து போனால் அழகிழந்து போவோம்.
நல்ல சத்திரியனின் கையிலுள்ள காண்டீபம்
சமரின் போதும் சமாதானத்தின் போதும்
பொலிவுற்றே விளங்கும்.
போரில்லையென்றாலும்
வாளைக் கீழே வைப்பதில்லை வீரன்.
குத்தீட்டி இடுப்பில்தான் கிடக்கும்.
அதுபோல் இருப்பாய் ஈழத்தமிழனே.
ஏமாற்றப்பட்ட இனத்தின் வேர்கள்
பட்டுவிடாதிருப்பது மட்டுமல்ல
சுற்றிப் படரவும் தயாராக இருக்கவேண்டும்.
விழுதூன்றிய ஆலமரமென்ற திமிரில்
கவனம் குறையக்கூடாது.
மரத்தை விழுத்த நினைத்த காற்று தோற்றுப்போனது.
இப்போ கிளைகளை வெட்டத்தொடங்கியுள்ளது.
ஒன்றாக நின்ற பட்டியைக் கலைத்து
ஓரிரண்டு ஆடுகளைக் கொண்டேகியது ஓநாய்.
பலம் கொண்ட வேலியை இடைபிரித்து
வாசலென வந்துபோகின்றான் கள்ளன்.
சாதியால்,
மதத்தால்,
பிரதேசவாதத்தால்
ஆட்சிச்சரிக்க நினைக்கிறது அருபகரம்.
கைகளைப் பிணைத்து
கண்களைத் திறந்து
முகில்களை எம்மூச்சால் கலைப்போம்.
ஊதிச்சரித்துவிட நாங்கள் ஒதியமரமல்ல
புரட்டமுடியாத புளியமரம்.
அடிமரம் சாய்ந்து வீழாது
விடுதலை வாசல் இருளாது.

**வியாசன்**



**புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்**